உதயன்

மக்கள் மனம் நிறைத்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 32

சுபர் 33 கதிர் 101 · மாசி 23ஆம் நாள் புதன்கிழமை 07 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

9 மாத ஆண் குழந்தை வயிற்றோட்டத்தால் சாவு

வவுனியா, மார்ச். 7
வயிற்றோட்டம் அதிகரித்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 9 மாத ஆண் குழந்தை ஒன்று நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தது. » 06

வெடிக்கும் வன்முறைகளால் அவசர நிலை பிரகடனம்

6 ஆண்டுகளின் பின்னர் நேற்று மீண்டும் நடைமுறை

கொழும்பு, மார்ச் 7

அம்பாறையைத் தொடர்ந்து கண்டியிலும் வெடித்த இனக் கலவரத்தால் நாடு முழுவதும் பதற்றமான - அச்சமான சூழல் உருவாகியுள்ளது. உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவசரகால நிலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுப் பிறப்பிக் » 26

(மேலும் படங்கள் பக்கம் 02)

கண்டி வன்முறையால் கொதிக்கிறது கிழக்கு

- வீதிகளில் குவிந்த போராட்டக்காரர்களால் பதற்றம்
- இராணுவம் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்
- வீதிகளில் ரயர் எரிப்பு

கொழும்பு, மார்ச் 7

கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய உள்ளிட்ட பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து, கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் நேற்று முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் முஸ்லிம் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் அலுவலகங்கள், பாடசாலைகள் அனைத்தும் நேற்று மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை.

முதன்மை வீதிகளில் வெள்ளை மற்றும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. வீதிகளில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட் » 28

தீயிட்டு எரிக்கப்பட்ட வீட்டில் முஸ்லிம் இளைஞனின் சடலம்

10 பள்ளிவாசல்கள், 50 வர்த்தக நிலையங்கள், 20க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்;

கொழும்பு, மார்ச் 7

கண்டி, தெல்தெனிய பொலிஸ் பிரிவிலும் பல்லேகல மற்றும் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுகளிலும் முஸ் » 06

பல்லேகல, தெல்தெனியவில் நீள்கின்றது ஊரடங்கு

கொழும்பு, மார்ச் 7

கண்டி, திகன பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கலவரச் சூழலைக் கட்டுப்படுத்தும் வகை » 06

பேருந்துகளின் மீது கல் வீசித் தாக்குதல்

அம்பாறை, மார்ச் 7

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு பேருந்துகள் மீது நேற் » 06

அரபுக் கல்லூரியின் மீது குருநாகலில் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 7

குருநாகல் மாவட்டத்தில் கொகரல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மெல்சிரிபுர பகுதியில் அமைந்துள்ள அரபுக் கல்லூரி (மத்ரஸா) ஒன்றின் மீது அடையாளம் தெரியாத சிலர் » 06

வன்முறைச் சூத்திரதாரிகள் ஒருபோதும் தப்ப முடியாது

அரச தலைவர் மைத்திரி உறுதி

கொழும்பு, மார்ச் 7

வன்முறைகள் கலவரங்களில் ஈடுபட்ட தனி மனிதர்கள், அமைப்புக்கள், குழுக்கள் என அனைத்துத் தரப்புக்களுக்கும் எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான ஆலோசனைகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள » 06

எதிர்ப்பு வெளிக்காட்டிய 32 பேர் கிழக்கில் கைது

கொழும்பு, மார்ச் 7

கண்டியில் நடைபெற்ற தாக்குதலைக் கண்டித்து கிழக்கில் நேற்றுப் போராட்டங்களில் ஈடுபட்ட 32 பேர் கைது செய்யப்பட்டனர். காத்தான்குடியில் » 06

தடுக்கத் திராணியற்றோருக்கு நாட்டை ஆளத் தகுதியில்லை

மைத்திரி, ரணில் மீது சுமந்திரன் எம்.பி. பாய்ச்சல்

கொழும்பு, மார்ச் 7

ஒவ்வொரு முறையும் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் நடக்கும் போது பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றும், விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக் » 06

பௌத்த நாடு என்பதை புரிந்து வாழ்வதே நலம்

அடித்தால் திருப்பி அடிப்போம் என அதட்டுகிறார் ஞானசாரர்

கொழும்பு, மார்ச் 7

இது சிங்கள பௌத்த நாடு என்பதை முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்றால்போல் வாழவும் வேண்டும். அடித்தால் திருப்பி அடிப்போம். கொலை செய்தால் திரும்பக் கொலை செய்வோம்.

இவ்வாறு கடும் தொனியில் கூறியுள்ளார் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

கொழும்பு, கிருலப் » 26

போராட்டத்தை ஒளிப்படம் எடுத்தவர் நையப்புடைப்பு

வன்முறை எதிர்ப்பில் வன்முறை

அம்பாறை, மார்ச் 7

அக்கரைப்பற்றில் போராட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம்கள், அவர்களை ஒளிப்படம் எடுத்தார் என்று இளைஞன் ஒருவன் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். நற்பிட்டிமுனையில் வீதிகளில் குமுக்களாகப் போராட்டம் நடத்திச் சென்றோர், வீதிகளில் » 28

இனவாத சக்திகளை அரசு இறுக்காதது புரியாத புதிர்

நாடாளுமன்றில் சரா எம்.பி. காட்டம்

கொழும்பு, மார்ச் 7

அம்பாறை விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமையே கண்டி வன்முறைகள் பிரமாண்டமாக வெடிக்கும் » 06

யாழ்.பல்கலை பட்டமளிப்பு திகதியின்றி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 33 ஆவது பட்டமளிப்பு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அதன் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ் » 26

பிரசாந்த் குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

யாழ்ப்பாணத்தில்

9th, 10th, 11th March 2018,
Veerasingam Hall, Jaffna, Stall No. L1

முன்பதிவிற்கு:
075 40000 12, 075 492 7575

Special Offers for Booking Couples in
MEDICARE EXPO!
FREE TICKETS FOR COUPLES
25% for Discount for first 100 Registrations
★ ACCOMMODATION FOR 5 DAYS (A/C ROOM)
★ AIRPORT PICK-UP & DROP (Valid upto June 2018)

International Accreditation

Online Reservation:
events.medicalonline.in

medicare

No. 77, HARRINGTON ROAD, CHETPET, CHENNAI - 600 031, TAMILNADU, INDIA. pfrcivf.com haripriyageetha@gmail.com 0091-98410-30388 | 0091-44-422-77777

முஸ்லிம்களிடம் சிங்களவர்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும்

புலனாய்வுத்துறையின் அசமந்தப்போக்கே விபரீதத்துக்குக் காரணம் என்கிறார் கிரியெல்ல

கொழும்பு, மார்ச் 7

திகன சம்பவத்துக்குப் புலனாய்வுத்துறையின் அசமந்தப்போக்கும் காரணமென கூட்டிக் காட்டிய சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, முஸ்லிம் மக்களி டம் சிங்களவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக்கோர வேண்டும் எனவும் கூறினார். நாடாளுமன்றத்தில் நேற்றுச் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது: » 25

குடித்துவிட்டு முஸ்லிம் கடையில் மாட்டிறைச்சிக் கொத்து கேட்பதுதான் பௌத்தமா ?

அநுரகுமார சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச் 7

குடித்துவிட்டு முஸ்லிம் கடைக்குச் சென்று மாட்டிறைச்சிக் கொத்துக் கேட்பவன் உண்மையான பௌத்தன் கிடையாது, என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இனவாதத்துக்கு முடிவுகட்டுமாறும் அவர் கோரினார். இனவாதம் நிலைகொள்ளும் நாட்டுக்கு » 25

ரணிலுக்கு எதிரான பிரேரணை பின்வாங்கியது மகிந்த அணி

நாட்டின் நிலமையைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கையாம்

கொழும்பு, மார்ச் 7

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில் லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என்று மகிந்த அணியான கூட்டு எதிரணி அறிவித்திருந்தாலும் அது நேற்றுக்கையளிக்கப்படவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலை உள்பட மேலும் சில அரசியல் காரணிகளைக் கருத்திற்கொண்டே தமது திட்டத்தைக் கூட்டு எதிரணி தற்காலிகமாக ஒத்தி » 25

நாடாளுமன்றில் நிலத்தில் அமர்ந்திருந்து போராட்டம்

கொழும்பு, மார்ச் 7

நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதச் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கவும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தியும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபைக்குள் போராட்டம் நடத்தினர். சபாநாயகரும் தலைமை » 25

வன்முறைகளை ஆராய ஆணைக்குழு அமையுங்கள்

அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 7

அம்பாறை, திகன உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அரச தலைவர் ஆணைக்குழு » 25

கூட்டமைப்பின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சனியன்று சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு எதிர்வரும் சனிக் கிழமை நடைபெறவுள்ளது. » 25

சட்டம் ஒழுங்கு ஏன் நிலைநாட்டப்படவில்லை ?

விசாரணை வேண்டும் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, மார்ச் 7

அம்பாறை, திகன ஆகிய பகுதிகளில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்கள் கடமை தவறியுள்ளனர் என்றும், சட்டம், ஒழுங்கு ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்பது தொடர்பில் » 25

தேசத் துரோகிகளிடம் சிக்கி விடாதீர்கள்

ரணில் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 7

இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு ஒருபோதும் பின்வாங்காது என்று அறிவித்துள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இனவாதம் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் தேசத் துரோகிகளிடம் » 25

அலரி மாளிகை நள்ளிரவில் முஸ்லிம்களால் முற்றுகை

கொழும்பு, மார்ச் 7

முஸ்லிம்களுக்கு எதிராக கடந்த வாரத்தில் இருந்து கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இன வன்முறைக்கு எதிராக இளைஞர்கள் கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அலரி மாளிகை வாயிலையும் முற்றுகையிட்டனர்.

கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற கலவரத்தில், முஸ்லிம்களுக்குச் சொந்தமான 30க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் வாகனங்கள், சொத்துக்கள் என்பவற்றுடன் பள்ளிவாசல்களும் கடுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் அம்பாறையில் கலவரம் இடம்பெற்றது. அதனையடுத்து கொழும்பு முஸ்லிம் இளைஞர்கள் இரவு 7 மணி தொடக்கம் நள்ளிரவு தாண்டிய நிலையிலும் அலரி மாளிகையின் பின்வாசல் பிரதேசத்தை முற்றுகையிட்டு மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் குதித்திருந்தனர்.

போராட்டக்காரர்களைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் கலைந்து சென்றனர்.

சமூக ஊடகமான புலனம் (வட்ஸ்அப்) குழுக்கள் ஊடாகவே முஸ்லிம் இளைஞர்கள் கொழும்பில் சில மணித்தியாலங்களில் ஒன்று திரண்டமை குறிப்பிடத்தக்கது. (5)

வன்முறையாளர்களை வழிநடத்திய பிக்குகள்?

கண்டி, மார்ச் 7

கண்டியில் வன்முறைகள் வெடித்த தன் பின்னணியில் பொது பலசேனாவின் பொதுச் செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரரும், மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரருமே இருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இவர்கள் இருவரும் தெல்தெனியவுக்குச் சென்றதை அடுத்தே, அங்கு அமைதியற்ற நிலை தோன்றியதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

திகன, தெல்தெனிய உள்ளிட்ட கண்டி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடந்த பகுதிகளில் பௌத்த பிக்குகள் பலரையும் காண முடிந்தது.

முஸ்லிம் இளைஞர்கள் சிலரின் தாக்குதலினால் காயமடைந்து உயிரிழந்த சிங்களச் சாரதியின் வீட்டுக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு பொது பலசேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் சென்றிருந்தார். இதற்குப் பின்னரே, திகனவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தீவிரமடைந்தன.

இந்த வன்முறைகளில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட சிங்களவர்களை விடுவிக்கக் கோரி, தெல்தெனிய பொலிஸ்நிலையத்தை முற்றுகையிட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரரே தலைமை தாங்கியிருந்தார்.

உயிரிழந்த சாரதியான சிங்கள இளைஞன், அம்பிட்டியே சுமணரத்ன தேரரின் உறவினர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வன்முறையில் ஈடுபட்ட குழுவினரை பௌத்தபிக்குகள்சிலர்வழிநடத்துகின்ற, காட்சிகளும் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. வன்முறைகள் இடம்பெற்ற பகுதிகளில் காவியுடையுடன் பௌத்த பிக்குகள் காணப்படும் நிலையில், இந்தச் சம்பவங்களை பௌத்த பிக்குகள் சிலரே தூண்டிவிட்டுள்ளதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன. அதேவேளை, வன்முறைகளைத்தூண்டிவிட்டபிக்குகளை கைது செய்யுமாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார். (5)

வன்முறைச் சம்பவங்களை இலங்கை அரசு கண்டிக்கிறது

அரச தகவல் திணைக்களம் அறிக்கை

கண்டி, மார்ச் 7

அண்மையில் அம்பாறை மற்றும் கண்டி, திகன பிரதேசங்களில் இனங்களுக்கிடையிலான சமூக ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையிலும் சில வணக்கத் தலங்கள், வீடுகள் மற்றும் வியாபார நிலையங்கள் ஆகியவற்றுக்குச் சேதம் ஏற்படுத்தும் வகையிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை இலங்கை அரசு மிக உறுதியாகவும் வன்மையாகவும் கண்டிக்கின்றது.

இது தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலும், முஸ்லிம் மற்றும் ஏனைய இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையிலும் சமூக ஊடகங்களின் ஊடாகவும் வலைத்தளங்களின் ஊடாகவும் தவறாக வழிநடத்தப்படக்கூடிய மற்றும் குரோதத்தை வளர்க்கக்கூடிய தகவல் பரிமாற்றங்களைப் பகிர்வதற்குச் சிலர் எடுக்கும் முயற்சியை அரசு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

குரோதத்தன்மை மிக்க தவறான தகவல்களைக் கண்டு ஏமாற வேண்டாமென இலங்கையின் அனைத்துக் குடிமக்களிடமும் அரசு கேட்டுக் கொள்கின்றது. அதேவேளை சுமார் மூன்று தசாப்தங்களாக வன்முறைகளால் பீடிக்கப்பட்ட ஒரு நாடும் மக்களும் என்ற வகையில் அவ்வாறான ஒரு நிலமை மீண்டும் ஏற்படுவதிலிருந்து நாம் விலகிக் கொள்ள வேண்டும்.

இன மற்றும் மதங்களுக்கிடையிலான வேற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு தாக்குதலுக்கு எதிராகவும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சட்டத்தைப் பக்கச்சார்பின்றி முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அந்தத் தரப்பினர் ஏற்கனவே செயற்பட்டு வருகின்றனர்.

குற்றச்செயல்களில் ஈடுபடும் அதேவேளை சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்கும் தரப்பினருக்கு எதிராக உறுதியானதும் நிலையானதுமான நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு ஒருபோதும் பின்வாங்காது. மக்களின் சம உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையிலும் அனைவருக்கும் அனைத்து விதமான சுதந்திர நிலைகளையும் அனுபவிக்கக்கூடிய வகையிலும் பன்முகத் தன்மையை மதித்து நிலையான சமாதானம் மிக்க முற்போக்குத் தன்மையுடனான ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பையும் பங்குபற்றலையும் இன மத பேதமின்றிப் பெற்றுத்தருமாறு அரசு வேண்டி நிற்கின்றது.

மதத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் சமூகத் தலைவர்களும் சிவில் சமூகம் மற்றும் ஊடகங்கள் ஆகியனவும் உள்வாங்கப்பட்ட இலங்கையின் அனைத்துக் குடிமக்களும் எல்லாவிதமான வன்முறைகளையும் வலுவாகக் கண்டிப்பதுடன் சமாதானம், ஒற்றுமை ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - என்றுள்ளது. (5)

கண்டியில் கைதான 24 பேருக்கும் மறியல்

கண்டி, மார்ச் 7

கண்டி மாவட்டத்தின் தெல்தெனிய பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்கள் 24 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க தெல்தெனிய நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

முஸ்லிம் இளைஞர்கள் சிலரின் தாக்குதலில் காயமடைந்த சிங்கள நபர் உயிரிழந்ததைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வன்முறையில் ஈடுபட்ட 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி தெல்தெனிய பொலிஸ் நிலையத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை போராட்டம் நடத்தப்பட்டது. பொலிஸ் நிலையத்துக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 24பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தெல்தெனிய நீதிவான் மன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (5)

கலவரம் நடந்த திகனவுக்கு சி.ஐ.டி நேற்று விரைவு

கண்டி, மார்ச் 7

கண்டியில் கலவரம் நடைபெற்ற திகனப் பிரதேசத்துக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

திகனப் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கலவரம் ஆரம்பமானது.

நேற்றுமுன்தினம் திங்கட் கிழமையும் தொடர்ந்தது. இந்த நிலையில், நேற்றுக் காலை திகனப் பிரதேசத்திலிருந்து முஸ்லிம் இளைஞனின் சடலம் எரிந்த நிலையில் மீட்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக கொழும்பிலிருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு அணி திகனப் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (5)

முஸ்லிம் சமூகத்துக்கு தோள் கொடுப்போம்

தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கு மத்தியில் அதிகரித்து வரும் முஸ்லிம் மக்கள் தொடர்பிலான அச்ச மற்றும் வெறுப்பு மனப்பான்மை தொடர்பில் அச்சம் கொள்வதாகத் தெரிவித்துள்ள தமிழ் சிவில் சமூகம், முஸ்லிம் சமூகத்துக்கு இக்கட்டான வேளையில் எமது சகோதரத்துவத்தை தெரிவித்துக்கொள்வதோடு சமூகங்களுக்கிடையிலான அச்ச உணர்வுகளைக் களைவதற்கு சேர்ந்து பணியாற்ற விருப்பத்தை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளது:

இது தொடர்பில் தமிழ் சிவில் சமூகம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த வாரம் கண்டியிலும் சென்ற வாரம் அம்பாறையிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கண்டியிலும் அம்பாறையிலும்இருந்துகிடைக்கப் பெற்றுள்ள பூர்வாங்க அறிக்கைகள் அடிப்படையில், நடவடிக்கை எடுக்காத தவறால் பொலிஸாரும் இந்த வன்முறையில் கூட்டுப் பொறுப்பாளிகள் என்பதை உணர்த்திநிற்கின்றன.

வடக்கு கிழக்கில் பணியாற்றும் தமிழ் சிவில் சமூக அமைப்புக்களான நாம் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக அதிகரித்துவரும் வன்முறை தொடர்பில் பெரும் கவலைகொள்கிறோம்.

இந்த அரசு முந்தைய ஆட்சியில் அளுத்கமவில் நடந்தேறிய முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளைப் போன்ற சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாது என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்து அளுத்கமவில் நடைபெற்ற சம்பவங்களை விசாரித்து சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் இந்த அரசு நிறுத்தியிருக்கவேண்டும். ஆனால் அரசு இதனைச் செய்யத் தவறியிருக்கிறது. அதனாலேயே இன்று கண்டியிலும், அம்பாறையிலும் அதற்குமுன்னர்காலியிலும்-முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து அரங்கேறி இருக்கின்றன. வன்முறைகள் பரவாதவாறும் வன்முறைக்குக் காரணமானவர்களை சட்டத்திற்குமுன் நிறுத்துவது அரசு எடுக்கவேண்டிய உடனடி நடவடிக்கைகள் ஆகும்.

சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கு மத்தியில் அதிகரித்து வரும் முஸ்லிம் மக்கள் தொடர்பிலான அச்ச மற்றும் வெறுப்பு மனப்பான்மை தொடர்பிலும் நாம் பெரிதும் அச்சம் கொள்கிறோம். அத்தகைய அச்சமானது இந்த வன்முறைக்குத்தேவையானசூழமைவை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இத்தகைய மனப்பாங்குகளுக்கு எதிராக நாம் கருமமாற்றவேண்டும்.

முஸ்லிம் சமூகத்துக்கு இக்கட்டான வேளையில் எமது சகோதரத்துவத்தை தெரிவித்துக் கொள்வதோடு சமூகங்களுக்கிடையிலான அச்சஉணர்வுகளைக்களைவதற்குச்சேர்ந்துபணியாற்ற எமது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த வன்முறைகளுக்குக் காரணமாகத் தொடரும் பொறுப்புக் கூறாத்தனத்துக்கு எதிராகச் செயலாற்ற உறுதி பூணுகிறோம் - என்றுள்ளது. (5)

தனிநபர் பிரச்சினை இனவாதமாகியுள்ளது

டக்ளஸ் கவலை

கொழும்பு, மார்ச் 7

திகனவில் இடம்பெற்ற தனிப்பட்ட பிரச்சினையானது இனவாதப் பிரச்சினையாக மாற்றப்பட்டிருப்பதானது மிகவும் கண்டிக்கத்தக்கதொரு சம்பவமாகவே அமைந்துள்ளது. இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறையில் இடம்பெற்ற சம்பவங்களின் கூடு தணியும் முன்பதாகவே திகன சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. இந்தச் சம்பவத்தின்போது பொலிஸார் தங்களால் இயன்றளவில் கடமைகளை நிறைவேற்றியதாகவே தெரிய வருகின்றது. பொலிஸாரையும் மீறிய நிலையிலேயே முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பெரியளவில் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு தனிப்பட்ட பிரச்சினையானது இனவாதப்பிரச்சினையாக மாற்றப்பட்டிருப்பதை இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாமல் தவிர்ப்பதற்கான காரணிகள் குறித்தும் ஆராய வேண்டியுள்ளது.

ஏதாவதொரு சம்பவம் இடம்பெறும்வரையில் பார்த்திருந்து, அல்லது வேண்டுமென்றே ஒரு சம்பவத்தை உருவாக்கி, அதிலிருந்து ஆரம்பித்து இத்தகைய வன்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழ் சிங்களப் புத்தாண்டு அண்மிக்கின்ற காலப்பகுதிகளில் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களில் சிங்கள மக்கள் பொருள்கள் குறிப்பாக ஆடைகள் வாங்கக் கூடாது என்று பரப்புரைகள் மேற்கொள்ளப்படுவது ஒரு வழமையாகி வருகின்றது. இதன் பின்னணியில் ஒரு சில சுயலாப வர்த்தகர்களே இருக்கின்றனர் அன்றி, இதன் பின்னணியில் வேறு ஒன்றும் கிடையாது.

அந்த வகையில்தான் மேற்படி சம்பவங்களையும் பார்க்க வேண்டியுள்ளது. தமிழ் சிங்களப் புத்தாண்டு அண்மித்து வருகின்ற காலகட்டத்திலேயே மேற்படிச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இன்றைய காலகட்டத்ததைப் பொறுத்தவரையில் தமிழ், முஸ்லிம் மக்களில் பலரும் அரச தொழில்வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். கடந்தகாலப் போர் இதற்கொரு காரணமாகலாம். இவ்வாறு அரச தொழில் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்ற மக்கள் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றபோது, அதனையும் தாக்கி அழிக்க முற்பட்டால் அந்த மக்கள் தங்களது வாழ்வாதாரங்களுக்காக வேறு என்ன செய்வார்கள்? என்பதை நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் - என்றார். (5)

உங்கள் வண்டவாளங்களை தமிழ் மக்கள் மறக்கவில்லை

ஈ.பி.டி.பிக்கு சுகாஸ் சாட்டையடி

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஈ.பி.டி.பியினர் உத்தமர்கள் போல் அறிக்கை விட்டால் அவர்கள் செய்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் ஆக்கப்படுதல்கள், வன்புணர்வுகள், காட்டிக் கொடுப்புக்கள் எல்லாவற்றையும் தமிழ் மக்கள் மறந்துவிடுவர் என்று நினைத்தால் அது ஈ.பி.டி.பியினரின் அறிவீனமே. இவ்வாறு சட்டத்தரணி கே.சுகாஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் திருமதி அனந்திசசிதரனின் வீட்டின் மீதான தாக்குதலில் ஈ.பி.டி.பியினருக்கும், இராணுவத்துக்கும் தொடர்பு இருப்பதாக இந்தத் தாக்குதலில் காயமடைந்த சட்டத்தரணி கே.சுகாஸ் தெரிவித்திருந்தார். சில தினங்களுக்கு முன்னர் திருமதி அனந்தி சசிதரன், இந்தத் தாக்குதலில் தமிழ் அரசுக் கட்சியினருக்கும் தொடர்பிருக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார். அவரது இந்தக் கருத்தை வரவேற்று, தம்மீதான பழி நீங்கியுள்ளதாக ஈ.பி.டி.பி. அறிக்கை வெளியிட்டிருந்தது.

இந்த அறிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சட்டத்தரணி கே. சுகாஸ் மேலும் தெரிவித்ததாவது,

திருமதி அனந்தி சசிதரன் வீட்டின்மீது கடந்த மாகாண சபை தேர்தல் காலப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் பற்றி ஈ.பி.டி.பி. வெளியிட்ட ஊடக அறிக்கையைப் பார்த்தபோது சாத்தான் வேதம் ஓதுவதுபோல் இருந்தது. என்னைப் பற்றியும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதனால் இந்த ஊடக அறிக்கையை வெளியிடுகின்றேன்.

மாகாண சபை தேர்தல் காலப்பகுதியில் சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பின் சட்ட ஆலோசகராக கடமையாற்றியிருந்தேன். 2013 செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி நள்ளிரவு திருமதி அனந்தி சசிதரனின் வீட்டைச்சூழ இராணுவப் புலனாய்வாளர்களும் ஆயுதம் தரித்த நபர்களும் நிற்பதாகவும் அவரைப் பாதுகாப்பதற்காக என்னை உடனடியாக அங்கு வருமாறும் முறைப்பாடு கிடைத்தது. நள்ளிரவு 12 மணியளவில் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று தெரிந்தும் எனது கடமையைச் செய்வதற்காக திருமதி அனந்தி சசிதரனின் வீட்டுக்குச் சென்றேன்.

அங்கு எங்களை சூழ்ந்துகொண்ட இராணுவ சீருடை தரித்த ஆயுததாரிகளும் ஈ.பி.டி.பி. ஒட்டுக்குழுவை சேர்ந்த சிலரும் என்னையும் அங்கிருந்த அனந்தியின் ஆதரவாளர்களையும் தாக்கி வெறியாட்டம் போட்டதுடன் நாங்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை ஊரறிந்த உண்மை. இதை இப்போது ஈ.பி.டி.பி. மறுக்க முற்படுவது முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பதைப் போன்றது.

நான் எந்த மேடையிலும் உண்மையையே பேசுகின்றேன். காரணமின்றி ஈ.பி.டி.பி. மீது குற்றஞ்சுமத்தவில்லை என்பதை பொறுப்போடு கூறுகின்றேன். அவர்கள் செய்ததையே கூறுகின்றேன். நான் அவர்களைப்பற்றி உண்மைக்கு மாறானவற்றை கூறுவதாக அவர்கள் கருதினால் தாராளமாக என்மீது மான இழப்பு வழக்குத் தாக்கல் செய்யலாம். அவ்வாறு அவர்கள் வழக்குத்தாக்கல் செய்தால், அதை முறைப்படி எதிர் கொண்டு அவர்களுக்கு மானம் இல்லாத காரணத்தினால் இழப்பீடு ஏற்படவில்லை என்பதை நிரூபிக்க தயாராகவே உள்ளேன்.

உங்களைப்போல் பதவிகளுக்காகவும் அதிகாரத்துக்காகவும் அங்கலாய்த்து பொய்யுரைப்பவன் நானல்ல. நான் கண்ட உண்மையை மட்டுமே வெளிப்படுத்தியிருந்தேன் இனியும் வெளிப்படுத்துவேன்.

இதுபற்றி பகிரங்க விவாதம் நடத்த நான் தயாராக இருக்கின்றேன். டக்ளஸ் தேவானந்தா தயாரா ? வந்து மோதிப் பாருங்கள். யாருடைய கைகள் கறைபடிந்தவை என்பது அப்போது புலப்படும். எந்தத் தடை வந்தாலும் தமிழ்த் தேசியத்துக்கான என் பணி தொடரும். ஆயுதங்களுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் அஞ்சுபவன் நானல்ல. அப்படி அஞ்சியிருந்தால் அன்று துப்பாக்கி முனையில் உங்கள் ஒட்டுக்குழுவினரும் இராணுவப்புலனாய்வாளர்களும் என்னைத் தாக்கி அச்சுறுத்திய தோடு வீட்டுக்குள் முடங்கியிருப்பேன். உங்கள் ஆயுதத்துக்கே அஞ்சாத நான் ஒருபோதும் உங்கள் அப்பட்டமான பொய்யான ஊடக அறிக்கைக்கு அஞ்சேன். உண்மைக்காகவும் நீதிக்காவும் தமிழ்த்தேசியத்துக்காகவும் என் குரல் எப்போதும் ஒலித்துக்கொண்டேயிருக்கும் - என்றார். (5,37,106)

முஸ்லிம் சமூகத்துக்கெதிரான வன்முறையை நிறுத்தக்கோரி

ஏறாவூரில் மனிதச் சங்கிலிப் போராட்டம்

மட்டக்களப்பு, மார்ச், 7

முஸ்லிம் சமூகத்துக்கெதிராக அம்பாறை, கண்டி மாவட்டங்களின் திகன, தெல்தெனிய உள்ளிட்ட பல பிரதேசங்களில் தூண்டிவிடப்பட்டுள்ள வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகரப் பிரதேசத்தில் நேற்று மாலை மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.

ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் ஜம்மிய்யத்துல் உலமா சபையின் அழைப்பின் பேரில் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்து கொண்டோர் இந்த நாட்டின் சுதந்திரம், பொருளாதாரம் பாதுகாப்பு உட்பட, தொன்று தொட்டு முஸ்லிம்கள் ஆற்றிவரும் பங்களிப்புக் குறித்தும் மற்றும் சகல இனங்களுக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் சமத்துவமாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், சட்டம் ஒழுங்கு பாகுபாடின்றி நிலைநாட்டப்பட வேண்டியதை வலியுறுத்தியும் பதாகைகள் ஏந்தியிருந்தனர். முன்னதாக மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக சில மணித்தியாலங்கள் கடைகளை மூடி வைக்குமாறும் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. இதே வேளை ஏறாவூரில் மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம் பெற்ற போதும் அரச அலுவலகங்கள், பாடசாலைகள், உள்ளூர் மற்றும் தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் என்பன வழமை போல் இயங்கின. பிரதேசத்தில் வன்முறைகள் ஏதும் நிகழாவண்ணம் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (21,46)

கொழும்பில் நேற்றும் போராட்டம்

கொழும்பு, மார்ச் 7

முஸ்லிம்கள் மீதான இனவாதத் தாக்குதல்களைக்கண்டித்து சிறிலங்கா தௌஹீத் ஜமாத் அமைப்பால் நேற்று மாலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு மாளிகாவத்தையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கை முஸ்லிம்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்துவதோடு பள்ளிவாசல்கள் மற்றும் சொத்துக்கள் சேதப்படுத்துவதை நிறுத்தி சம்பந்தப்பட்டவர்கள்மீது உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோசங்கள் எழுப்பப்பட்டன. (5)

வன்முறையைத் தூண்டும் வகையில் இணையத்தளங்களில் பரவும் பேச்சுக்கள்

கொழும்பு, மார்ச் 7

கண்டி தெல்தெனிய சம்பவத்தில் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தவர் சிங்களே அமைப்பைச் சேர்ந்தவர் என்று பிக்கு ஒருவர் தெரிவித்ததாக சமூகவலைத் தளங்களில் நேற்று வேகமாக காணொலி பரவியது. அந்தக் காணொலியில் அந்தப் பிக்கு மேலும் தெரிவித்ததாவது, தெல்தெனியவில் சிங்களே அமைப்பைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார். நாளை உங்களையும் கொலை செய்ய முடியும். என்னையும் கொலை செய்ய முடியும். காவி உடை அணிந்துள்ள என்னுடைய பேச்சுக்கு சிலர் எதிர்ப்பு தெரிவிக்கவும் கூடும். பிக்குகள் விகாரைகளில் இருந்து கொண்டு ஓதிக்கொண்டு தானம் கொடுத்துக்கொண்டு இருக்க முடியாது. நாங்கள் தான் அவர்களை இங்கு அனுமதித்தோம். நாங்களே இடங்களையும் கொடுத்தோம். எமது பெண்களையும் அவர்களுக்கு கொடுத்தோம். அவர்கள் மூலம் பெற்றெடுத்த பிள்ளைக ளைக் கொண்டே எம்மை அழிப்பதற்கு முயற்சிக்கின்றனர். பொறுத்தது போதும். தெல்தெனிய, அம்பாறை மட்டும் இல்லை இலங்கை முழுவதும் சிங்களவர்களுக்கு எதிராக சதி நடைபெறுகின்றது. உங்களுடைய வீடுகளில் உள்ள கத்தி விறகு வெட்டுவதற்காக அல்ல. அந்தக் கத்திகளை எடுத்துக்கொண்டு வெளியே வாருங்கள். துட்டகைமுனு மன்னன் போர் செய்த போது அவருக்கு உதவியது பௌத்த துறவிகளே. உண்பதற்கு உணவு தரும் சிங்களவர்களுக்காக வேலை செய்யவில்லை என்றால் நீங்கள் உண்ணும் உணவு செமிக்காது. இன்று நாம் செய்யப்போகும் செயலை பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர இல்லை. அவருடைய அம்மாவே வந்தாலும் நிறுத்த முடியாது. எம்மால் செய்ய முடிந்தது நன்மையோ தீமையோ அதை செய்தே தீருவோம். நிறுத்த முடியாது, என்று குறிப்பிட்டுள்ளார். (5)

தவறவிடப்பட்ட பணப்பையை பெற்றுக் கொள்ளலாம்

சாவகச்சேரி, மார்ச். 7
கொடிகாமம் நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை ஒரு தொகைப் பணத்துடன் கூடிய பணப்பை (மணிபேர்ஸ்) கண்டெடுக் கப்பட்டது.
கொடிகாமம் பொதுச் சந்தை பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.
பணப்பையை தவறவிட்டவர்கள் சந்தை அலுவல கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (9)

போதைப்பொருள் பாவனையாளர்கள் தொடர்பாக தகவல் தந்தால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 7

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் அதிக போதைப் பாவனையாளர்கள் தொடர்பில் தகவல் தந்தால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

போதையிலிருந்து விடுபடுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'இலகுவில் விடுதலை' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயல கத்தில் நேற்றையதினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.
அவர் அங்கு தெரிவித்ததாவது.
போதைப் பொருள் பாவனை நாளாந் தம் அதிகரித்துக் கொண்டே செல்கின் றது. யாழ்ப்பாண மாவட்டத்திலும் இளம் வயதினர் தொடக்கம் வயது வந் தவர்கள் வரை பலர் போதைக்கு அடி மையாகி உள்ளனர். போதைக்கு அடி மையாகுபவர்கள் பலர் பணத் தேவை களுக்காக திருட்டு, கொலை போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மாவட்டத்தில் குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன எனவே யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த பொலிசார், மாவட்டச் செயலகம் உட்பட பல தரப்புக்கள் விழிப்புணர்வுகள், கருத்தரங்குகளை மேற்கொண்டு வரு கின்றனர். அந்த வகையில் இன்றைய நூல் வெளியீடும் போதைக்கு அடிமை யானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க எடுக்கபடும் முயற்சியாகவே அமைகின் றது. இந்த நூல் கிராமம் கிராமமாக மக்களுக்கு சென்றடைய வேண்டும்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் வியாபாரிகள், தொடர் போதைப்பொருள் பாவனையாளர்கள் தொடர்பில் பொதுமக்கள் எமக்கு தக வலை வழங்கினால் நாம் விரைந்து உடனியாக நடவடிக்கை எடுப்போம் என்றார். (எ-8)

விவாத அரங்கம்

யாழ்ப்பாணம், மார்ச். 7
'நாநலம் என்னும் நலனுடைமை' என்னும் தொனிப் பொருளில் விவாத அரங்கம் யாழ்ப்பாண பிரதேச செயலக மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் விவாத அணியிலுள்ள பேச்சு வன்மையுள்ள 5 மாணவர்களையும் துறைசார்ந்த ஆசிரியர் ஒருவரையும் அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண கலாசார அதிகார சபைத் தலைவரும் பிரதேச செயலாளருமான பொ.தயானந்தன் தெரிவித்துள்ளார்.
நிகழ்வில் பாடசாலை விவாத அணி மற்றும் இலக்கிய மன்றச் செயற்பாடுகளுக்குரிய வழிகாட்டல்களும் வழங்கப்படும் என மேலும் அறிவிக்கப்பட்டுள் ளது. (எ)

அச்சுவேலி உகரம் அறக்கட்டளை நிறுவனத்தால், இந்த வருடம் பல்கலைக்கழக அனுமதி பெறவுள்ள அச்சுவேலி தெற்கில் மாணவிக்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய மடிக்கணினி அவரது இல்லத்தில் வைத்து அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. மாணவி மடிக்கணனியை பெற்றுக் கொள்வதையும், மாணவியின் பெற்றோர், மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம். (எ-11)

கடந்த மாதம் 18 ஆம் திகதி கோண்டாவில் ஆசிமட விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் கோண்டாவில் இந்துக கல்லூரியின் ஓய்வு நிலை உப அதிபர் இ.அருணகிரிவாசனின் மணிவிழா நிகழ்வில், அருணகிரிவாசனுக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணப் பல்கலைகழக துணை வேந்தர் இ.விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து மதிப்புறுத்துவதையும் நிகழ்வின் தலைவர் பேராசிரியர் தேவராசா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

முன்பள்ளி விளையாட்டு

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா முன்பள்ளி மைதானத்தில் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
விநாயகர் சனசமூக நிலையத்தின் தலைவர் செல்லையா மயூரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் முதன்மை விருந்தினராகவும், கைதடி விக்னேஸ்வர வித்தியால அதிபர் நா. கருணாகரன் மற்றும், சாவகச்சேரிப் பிரதேச சபை முதன்மை முகாமைத்துவ உதவியாளர் சி.பத்மநாதன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும், மதிப்புறுவிருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் வீ. சிவசுப்பிரமணியம், பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.நஜீவா மற்றும் கைதடி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் சு.தனபாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

பன்னாட்டு மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச். 7
அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு கள்நாளைவியாழக்கிழமை நடைபெறவுள்ளன.
நிலையத்தின் தலைவர் வி.சுதாகர் தலைமையில் இடம்பெறும் நிகழ்வு இரு கட்டங்களாக இடம்பெற வுள்ளது.
நிலையத்தின் மைதானத் தில் மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ள முதல்கட்ட நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் விளையாட்டுவீராங்கனை பிரபாவதி கமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.
நிகழ்வில் தேங்காய் திருவு தல், கயிறு இழுத்தல், மாலை கட்டுதல், சங்கீதக் கதிரை, பலூன் உடைத் தல், கரண்டியில் தேசிக்காய் கொண்டுசெல்லுதல்போன்ற விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும். இரண்டாம் கட்ட நிகழ்வு இரவு 7 மணிக்கு அமரர் காசிப் பிள்ளை அரங்கில் இடம்பெறும். இதில் முதன்மை விருந்தினராக முன்னாள் மகளிர் சங்கத் தலைவி லோசனா தேவி மாசிலாமணி கலந்து கொள்ளவுள்ளார்.
இதில் சிறப்பு நிகழ்வாக கிருஷ்ணவேணி மயில்வாகனத்தின் வயலின் வாத்திய பிருந்தா உட்பட கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (எ-17)

அரியாலைத் துப்பாக்கிச் சூடு:

வாகனங்களை விடுவிப்பதற்கு யாழ்ப்பாண நீதிமன்று மறுப்பு

யாழ்ப்பாணம் அரியாலையில் இளைஞன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வழக்கில், சான்றுப் பொருள்களான உந்துருளி, முச்சக்கரவண்டி என்பனவற்றை விடுவிக்க யாழ்ப்பாண நீதிவான் மன்று நேற்று மறுத்தது.
உரிய உறுதிப்படுத்தல் கடிதம் சமர்ப்பித்தால் மாத்திரமே வழங்கலாம் என்று நீதிமன்று கூறியுள்ளது.
அரியாலையில் கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டில் அதே இடத்தைச் சேர்ந்த டொன்பொஸ்கோடினேசன் (வயது - 24) என்பவர் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணத்திலுள்ள சிறப்பு அதிரடிப்படையினரே துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் குற்றஞ்சா ட்டப்பட்டு 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளனர். அவர்களது வழக்கு நேற்று விசார ணைக்கு வந்தது. மன்றில் முற்பட்ட சிறப்பு அதிரடிப்படையினர் சான்றுப்பொருளான வாகனங்கள் இரண்டையும் விடுவிக்குமாறு கோரினர்.
குறித்த வாகனங்களை விடுவிப்பதா யின் பாதுகாப்பு அமைச்சின் கடிதம் பெறப்பட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும். அதுமட்டுமன்றி குறித்த வாகனங்களைப் பொறுப்பெடுப்பவர் யார் என்பது உள்ளிட்ட விவரங்களுடன் கடிதம் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும் என்று நீதிவான் சி.சதீஸ்தரன் நிபந்தனை விதித்தார்.
இந்த வழக்கிலுள்ள சந்தேகநபர்கள் இருவரினது விளக்கமறியல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. (4-103)

மந்திகை ஆதார மருத்துவமனையில்

காது, மூக்கு, தொண்டை கிளினிக் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
மந்திகை ஆதார மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை கிளினிக் நேற்று ஆரம்பமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனை காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணரின் வழிகாட்டுதலில் வாரத்தில் மூன்று நாள்கள் நடத்தப்பட வுள்ளன.
வாரத்தில் பிரதி சனிக்கிழமைகளில் முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் செவ்வாய், புதன்கிழமைகளில் ஏனையோருக்கும் கிளினிக் நடத்தப்படுமெனவும் புதன்கிழமைகளில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர் சிகிச்சையளிப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை வல்வெட்டித்துறை, அச்சுவேலி, வரணி ஆகிய பிரதேச மருத்துவமனைகளையும் இணைத்து இந்தக் கிளினிக் நடத்தப்படவுள்ளதெனவும் விரைவில் இந்த மருத்துவமனைகளில் உப கிளினிக்குகள் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது..
இதுவரை காலமும் வடமராட்சி பிரதேச மக்கள் காது, மூக்கு, தொண்டை கிளினிக்குக்காகவும் அரச பணியாளர்கள் மருத்துவ அறிக்கை பெறுவதற்காகவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்று வந்தனர் எனவும் மருத்துவமனை நிர்வாகத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக மந்திகை மருத்துவமனையில் முதன்முறையாக காது மூக்கு தொண்டை கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

'ஹப்பன்' பரிசளிப்புக்கு பதிவு மேற்கொள்ளவும்

யாழ்ப்பாணம், மார்ச். 7
தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமம் கிளையின் 'ஹப்பன்' பரிசளிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.
கடந்த ஆண்டு தரம் ஐந்து புலைமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமக் கிளையில் 'ஹப்பன்' சிறுவர் சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் மாணவர்கள் தமது 'ஹப்பன்' சிறுவர் சேமிப்புப் புத்தகத்துடன் தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் கிளையில் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. (எ)

9 மாத...

இந்தச் சம்பவம் வவுனியா, குருமன்காடு சிங்களப் பிரதேச செயலக வீதியில் நடந்துள்ளது.
காய்ச்சல், மற்றும் அதிகரித்த வயிற்றோட்டம் காரணமாக குழந்தை வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று நண்பகல் சேர்க்கப்பட்டது. அங்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டன. குருதிப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. சிகிச்சைகள் பயனின்றி இன்றிக் குழந்தை இறந்தது.
குழந்தையின் இறப்புத் தொடர்பாக இன்று உடற் கூற்றுப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.
வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்க முன்னதாக வவுனியா ஹொறவப்பொத்தானப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவ நிலையம் ஒன்றில் குழந்தைக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

தடுக்கத்...

கப்படுகின்றது. ஆனால் அவற்றால் எந்தப் பயனுமில்லை. அதற்காக அதை அமைக்க வேண்டாம் என்று கூறவில்லை. பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியில் பெரிய மனமாற்றமே தேவையாக இருக்கின்றது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சரியானவற்றைச் செய்வதற்கு அரச தலைவர் மைத்திரிபாலவுக்கோ, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ, இந்த அமைச்சரவையில் உள்ளவர்களுக்கோ முதுகெலும்பில்லை. நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான மக்கள், சுயமரியாதையுடன், பயமில்லாமல் வாழ முடியாது என்றால் நாட்டை ஆள்வதற்கு உங்களுக்குத் தகுதியில்லை.
2015ஆம் ஆண்டு எதனை எதிர்பார்த்து மக்கள் வாக்களித்தார்களோ அதை இந்த அரசு தவிடுபொடியாக்கியிருக்கின்றது. இந்தச் சம்பவத்தை வைத்து மாத்திரம் நான் இவ்வாறு தெரிவிக்கவில்லை. முன்னைய அரசு என்ன செய்ததோ அதனையே இந்த அரசும் செய்கின்றது.
பேரினவாதத்துக்குப் பாலூட்டி வளர்க்கின்றது. உள்ளூராட்சித் தேர்தலில் பேரினவாதிகள் கூடுதலான வாக்குகளைப் பெற்று விட்டார்கள் என்பதற்காக, இந்த அரசு பேரினவாதிகளைச் சமாதானப்படுத்தும் நடவடிக்கையில் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் ஈடுபடுகின்றது. மக்கள் இதற்காக இந்த அரசுக்கு வாக்களிக்கவில்லை - என்றார். (ற-5)

அரபுக்...

தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இந்தத் தாக்குதல் நேற்று அதிகாலையில் நடந்தது என்றும், மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் இருவர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
தாக்குதல் காரணமாக மத்ரஸாவின் கணினி அறைக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அந்த அறையின் கண்ணாடிகள் போன்றவை நொறுங்கியுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
முஸ்லிம்கள் மீது கண்டியில் நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக ஏற்கனவே பதற்றமான சூழல் நிலவும் நிலையில், குருநாகல் மாவட்டத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. (ற-5,71)

தீயிட்டு...

லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.
தெல்தெனிய பொலிஸ் பிரிவின் திகன ராஜவல பகுதியில் இனவாதிகளால் தீ மூட்டப்பட்டு எரிக்கப்பட்ட வீட்டுக்குள் இருந்து முஸ்லிம் இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 21 வயதுடைய அப்துல் பாஸித் எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது ஜனாஸா நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.
நேற்று வன்முறைகள் எதுவும் பதிவாகாத போதும், பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை மற்றும் இராணுவப் பாதுகாப்பு தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது.
இராணுவ பாதுகாப்பானது கண்டி நகருக்கும், தெல்தெனிய, திகன மற்றும் கட்டுகஸ்தோட்டை உள்ளிட்ட பகுதிகளுக்கும் தொடர்ந்தும் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக படையணியொன்றும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.
திகனவில் மட்டும் முஸ்லிம்களுக்கு சொந்தமான 15 கடைகள் வரை தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தன. மொத்தமாக கட்டுகஸ்தோட்டை, தெல்தெனிய மற்றும் பல்லேகலை பொலிஸ் பிரிவுகளில் 10 பள்ளிவாசல்கள், 50 வரையிலான வர்த்தக நிலையங்கள் 30 வரையிலான வீடுகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு பள்ளிவாசல் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டுள்ள நிலையில் ஏனையவை பகுதியளவிலும் சிறு அளவிலும் சேதங்களுக்கு உள்ளகையுள்ளன. (ற-5,71)

இனவாத...

வாய்ப்பை உருவாக்கியது என்பதை நாம் நம்புகிறோம். இனவாதச் சக்திகளுக்கு எதிராக அரச தலைவர் மைத்திரியும், தலைமை அமைச்சர் ரணிலும் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்குகிறார்கள். இது ஏன் என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
ஒரு சாரதி சில இளைஞர்களால் தாக்கப்பட்டு, உயிரிழந்த சம்பவமானது தனிப்பட்ட நபர்களுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினையே. அது தண்டனைக்குரிய குற்றவியல் குற்றமாகும். தாக்குதலை நடத்திய சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இவ்வாறான சம்பவங்களுக்கு இனவாதம் பூசப்பட்டு, தனிப்பட்ட நபர்களுக்கிடையேயான பிரச்சினைகளை இனங்களுக்கு இடையேயான மோதல்களாக மாற்றி வன்முறைக்கு ஒரு பிரதேசத்தையே தள்ளுவது அனுமதிக்கப்படக்கூடியதல்ல. இது நாட்டின் ஒட்டுமொத்த அமைதியையும் குலைக்கும் ஒரு பயங்கரவாத நடவடிக்கை என்றே நாம் கருதுகிறோம்.

இனவாத அரூபக் கரங்கள்

கண்டியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகவும் ஒருவரையொருவர் நல்லுறவைப் பேணியும் வாழ்கின்றனர். அங்கு இனமோதல்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்றால் அதற்குப் பின்னால் இனவாத அரூபக் கரங்கள் வலிமையுடன் செயற்பட்டுள்ளன என்பதை எம்மால் தெளிவாகவே புரிந்து கொள்ளமுடியும்.
இந்தப் பிரச்சினை பற்றியும் இது உற்பத்தியான உண்மையான மூலம் தொடர்பிலும் இது பெருப்பிக்கப்பட்டு மோசமான வன்முறையாக மாற்றப்பட்டமையின் பின்னாலுள்ள சக்திகள் பற்றியும் நாம் தெளிவான ஒரு புரிதலுக்கு வர வேண்டியவர்களாக உள்ளோம்.
சாதாரணமாக வன்முறைகளில் முன்னின்று செயற்படும் ஏவல் பிசாசுகளை கைது செய்வதும் தண்டனை அளிப்பதும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையப்போவதில்லை. பிரச்சினையின் மூலவேர் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டு அழிக்கப்படாவிட்டால், இத்தகைய நிலமைகள் மீண்டும் மீண்டும் முளைவிடும் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

இனவாத சக்திகளின் துணிச்சல்

ஆட்சி மாற்றத்தின் பின்னர் நிலமை மாறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் மைத்திரிபால சிறிசேனவும் இன்றைய அரசு ஆட்சிக்கு வரவும் பேராதரவு வழங்கினர். சில காலம் இனவாத வன்முறைகள் இடம்பெறாதபோதும், அண்மைக் காலங்களில் அவை முளைவிட ஆரம்பித்துள்ளன.
அம்பாறையில் திட்டமிட்டவகையில் முஸ்லிம் உணவகங்களில் கர்ப்பத் தடை மருந்து உணவுகளில் சேர்க்கப்படுகிறது என்ற பொய் பரப்புரை மூலம் பல கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. பள்ளிவாசலும் சேதமாக்கப்பட்டது. அங்கிருந்த வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக கைது செய்யப்பட்ட ஒரு சிலரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதுமட்டுமின்றி இரவு தொடங்கப்பட்ட கலவரங்கள் அதிகாலை ஒரு மணி வரையிலும் தொடர்ந்த போதிலும் அவ்விடத்துக்குப் பொலிஸார் வரவில்லை. இப்படியான அலட்சியமான நடவடிக்கைகள் இனவாத சக்திகளுக்கு அச்சமின்றி வன்முறைகளைத் தொடரும் துணிச்சலைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இனவாதம்

இலங்கையின் இன்றைய சிங்கள அரசியலில் இனவாதம் என்பது சில தரப்பினரால் வலிமை மிக்க அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை முஸ்லிம் அரசியல் தலைமைகள் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ் பேசும் மக்கள் என்ற முறையிலும் இலங்கையின் சிறுபான்மை இனங்கள் என்ற முறையிலும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இது சிங்கள இனவாத சக்திகள் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க தவிர்க்க முடியாததொரு தேவையாகவுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பு

இன்று சில முஸ்லிம் தலைவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றனர். வடக்கு கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து பலமான சக்தியாக உருவாக்கி விடும் என்ற காரணத்தால் இனவாத சக்திகள் அதைக் கடுமையாக எதிர்த்தன. வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கும் முஸ்லிம் தலைமைகள் சிங்கள இனவாதிகளின் அபிலாசைகளுக்கு இணங்கச் செயற்படுகின்றனர். அதை அவர்கள் புரிந்துகொண்டு அந்த மாயையில் இருந்து விடுபடவேண்டும் என்று உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். நாம் இனவாத சக்திகளை திருப்திப்படுத்துவதன்மூலம் எமக்கான உரிமைகளைப் பெறமுடியும் என நினைப்பது எவ்வளவு முட்டாள் தனம் என்பதை அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள் உணர்த்தி நிற்கின்றன.
அம்பாறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டுமென்பதையும் அவர்களின் பின்னால் நின்று அவர்களை இயக்கிய இனவாத சக்திகள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் கட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும் என்பதையும் நான் இந்த உயரிய சபையில் வலியுறுத்த விரும்புகிறேன்.
அதேவேளையில் முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகளைக் கண்டித்து தமிழ் மக்களும், தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளைக் கண்டித்து முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்கள் என்ற முறையிலும் ஒடுக்கப்படும் சிறுபான்மை இனம் என்ற வகையில் குரல்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ற-5)

பேருந்துகளின்...

றுக் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் அதை மீறிச் சேவையில் ஈடுபட்டதாலேயே தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது.
தாக்குதலால் கண்ணாடிகள் உடைந்த நிலையில், பேருந்துகள் கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன. பின்னர் கல்முனையிலிருந்து மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அக்கரைப்பற்றுக்கான போக்குவரத்துகள் இடம்பெறவில்லை. (ற-5,30)

வன்முறை...

பதற்றமான சூழலையடுத்து, நேற்று மாலை நாட்டு மக்களுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறப்பு அறிவிப்பை வெளியிட்டார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து இனத்தவர்களும் இணைந்து போராடியே சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டோம். பிற்காலத்தில் இனங்களுக்கு இடையிலான மோதல், நீண்ட காலப் போரை நோக்கிச் சென்றது. அதன்விளைவாக பெரும் அவலங்களுக்கு முகம் கொடுத்தோம். மனம் வருந்தத்தக்க நிலைக்குத் தள்ளப்பட்டோம்.
ஆட்சிமாற்றத்தின் பின்னர் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்த எமது அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.
கடந்த சில தினங்களாக அம்பாறை, கண்டி பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் உயிர்ச் சேதங்களையும் பொருள் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளன. அந்தப் பிரதேசங்களில் பதற்ற நிலை உருவாகியுள்ளது. நாட்டு மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. உயிரிழப்புக்கள், பொருள் இழப்புக்களுக்கு முகம்கொடுத்துள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் அவர்களது உறவுகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.
பதற்ற நிலமையைப் போக்குவதற்கு பொலிஸ், சிறப்பு அதிரடிப்படை, இராணுவம் மற்றும் அரச அதிகாரிகள், பிரதேச அரசியல்வாதிகள் ஆகியோரை ஒன்றிணைத்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கியிருக்கிறேன்.
பொலிஸ், இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப்படை, நேற்றும், இன்றும் எதிர்வரும் நாள்களிலும் 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாக செயற்படுவதன் மூலம் இந்தப் பிரதேசங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென நான் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன்.
அனைவரும் சமாதானத்துடனும் அமைதியாகவும் வாழ முயற்சிக்கும் அதேவேளை, குறிப்பாக பௌத்த நாடு என்ற வகையில் 'குரோதத்தால் குரோதம் தணியாது', 'பழிதீர்ப்பதால் பகைமை தீராது' என்ற பௌத்த சிந்தனையை அறிந்தவர்கள் என்றவகையில், எந்தவிதமான துன்புறுத்தல்களிலோ வன்முறைகளிலோ ஈடுபடுவதன் மூலம் எமது நாட்டுக்கே அவப் பெயரும் களங்கமும் ஏற்படும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.
இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் மதங்களைச் சேர்ந்த நம்நாட்டவர்கள் தத்தமது மதங்களின் வழிகாட்டல்களுக்கமைய சமாதானத்துடனும் சகவாழ்வுடனும் வாழ்வதன் மூலம் உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்த சுதந்திரமான சூழலை மேன்மேலும் பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மேலோங்கச் செய்து, நம்நாட்டின் எதிர்கால நடவடிக்கைகளை ஐக்கியத்துடனும் சமாதானத்துடனும் ஒன்றுபட்டு சமாதானமான முறையில் முன்னெடுப்போம் என்ற வேண்டுகோளை விடுக்கின்றேன்.
பல்வேறு வதந்திகளையும் கட்டுக் கதைகளையும் சமூக ஊடகங்கள், இணையத்தளங்கள், தொலைபேசி ஆகியவற்றின் ஊடாகப் பரப்பி, மக்கள் மத்தியிலும் நாட்டுக்குள்ளும் சமாதானத்தை சீர்குலைக்க முயலும் சில தரப்பினர் இருப்பது என்பது தெரிய வந்திருக்கின்றது. அவ்வாறானவர்களுக்கு எதிராக மிக உறுதியான முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்கின்றேன் - என்றார். (ற-5,31)

எதிர்ப்பு...

வீதியில் ரயர் எரித்த குற்றச்சாட்டில் ஒருவரும், கல்முனையில் பேரணி நடத்திய குற்றச்சாட்டில் 31 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
முஸ்லிம்கள் மீது அம்பாறையிலும், கண்டியிலும் தாக்குதல் நடத்திய தாக்குதலாளிகளை இதுவரை கைது செய்யாத பொலிஸார், தாக்குதல்களைக் கண்டித்துப் போராட்டம் நடத்தியவர்களைக் கைது செய்துள்ளனர் என்று கிழக்கு மாகாண முஸ்லிம்கள் விசனித்தனர்.
கிழக்கு மாகாணத்தில் நேற்றுத் திடீரென முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்தில் வீதிகளின் நடுவே ரயர்களை போட்டு முஸ்லிம் இளைஞன் ஒருவர் எரித்துள்ளார். பொலிஸார் அந்த இளைஞனைக் கைது செய்தனர்.
கல்முனையில் வீதிகளில் போராட்டம் நடத்திய குற்றச்சாட்டில் 31 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ற-5,30)

பல்லேகல்...

யில் பல்லேகல மற்றும் தெல்தெனிய பிரதேசங்களில் இன்று காலை 6 மணிவரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் மாலை 3 மணிக்கு கண்டி மாவட்டம் முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. நேற்றுக் காலை 6 மணியுடன் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது.
நேற்றுக் காலை 9 மணியளவில் முஸ்லிம் இளைஞன் ஒருவரின் உடல் எரியுண்ட நிலையில் மீட்கப்பட்டது. மீண்டும் வன்முறை பரவலாம் என்ற அடிப்படையில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஊரடங்குச் சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்பட்டது. நேற்று மாலை 4 மணிக்கு, மீண்டும் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டது. இன்று காலை 6 மணிக்கே, ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5,31)

பல்கலை ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

போக்குவரத்துப் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 7

பல்கலைகழக கல்விசார ஊழியர்கள், கொழும்பு நகர மண்டபத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைகழக கல்விசார ஊழியர்கள். கடந்த ஆறு நாட்களாக பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில், இதற்கு இதுவரை தீர்வு கிடைக்காத காரணத்தினாலேயே அவர்கள் இந்த போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கிறோம் எனத் தெரிவித்தனர். போராட்டத்தால் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகளை பிற்போடு வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தால் அந்தப் பகுதியை அண்டிய வீதிகளில் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)

கடலுக்கு சென்றவர் மாயம்

கொழும்பு,மார்ச்.6

தல்தியவன்னவில் கடலில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இரத்தினபுரியைச் சேர்ந்த 16 வயதான இளைஞனே காணாமல் போயுள்ளதாக பொலிஸாரின் விசாரணையி லிருந்து தெரியவந்துள்ளது. தல்தியவன்ன கடற்பகுதியில்குழுவொன்றுடன் நீராடுவதற்கு சென்றபோது, அவர் கடல் அலைகளினால் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காணாமல் போயுள்ள இளைஞனை தேடும்பணியை பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகள் முன்னெடுத்ததாக பமுனுகம பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி4)

ஐ.நாவின் சிறப்பு அதிகாரி முகமாலைக்குப் பயணம்

யாழ்ப்பாணம்,மார்ச்.7
நிலக்கண்ணிவெடி அகற்றுவதற்கு பொறுப்பான ஐநாவின் சிறப்புப் பிரதிநிதி மிரேந் அல்குஷேன் கிளிநொச்சி முகமாலை கண்ணிவெடி அகற்றும் பிரதேசங்களை நேற்று பார்வையிட்டார். அங்கு சென்ற அவர் கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுக்கும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், பளைப் பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன் இந்தப் பகுதிகளில் வெடிப்பொருள்க அகற்றும் பிரிவின் அதிகாரிகள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இரு தினங்களாக கண்ணிவெடிகள் அகற்றப்படும் இடங்களை பார்வையிடுகின்றேன் தலைமை அமைச்சர், அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளேன். அவர்கள் சிறந்த ஒத்துழைப்பை வழங்கினார்கள் குறுகிய காலத்துக்குள் கண்ணி வெடிகள் அகற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன் என மிரேந் அல்குஷேன் தெரிவித்தார்.

அதேவேளை, பளை இந்திராபுரத்தைச் சேர்ந்த மக்களை ஐ.நா. சிறப்புப் பிரதிநிதி சந்திக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்திராபுரத்தைச் சேர்ந்த இன்னமும் மீள்குடியமர்த்தப்படாத நூற்றுக்கணக்கான மக்கள் அவரைச் சந்திக்க காத்திருந்தனர். விரைவில் தம்மை மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவரிடம் கோரிக்கை விடுப்பதற்கே அவர்கள் காத்திருந்தனர். எனினும் மிரேந் அல்குஷேன் இந்திராபுரம் செல்லாது திரும்பியுள்ளார்.

அதேவேளை அங்கு வந்திருந்த மக்களுடன் கலந்துரையாடிய வெடிப் பொருள்கள் அகற்றும் நிறுவனப் பிரதிநிதி இந்த வருட இறுதிக்குள் இந்திராபுரம் கிராமத்தின் ஒரு பகுதியை விடுவிக்க முயற்சிகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ற-ரி4,35,9)

ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆசிரியர்களாக நியமியுங்கள்

கல்வி அமைச்சரிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 7

ஆங்கில டிப்ளோமாதாரிகள் 83 பேர் வடக்கில் நியமனம் இன்றி உள்ளனர். வடக்கிலுள்ள பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இவர்களைப் பயன்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கேள்வி நேரத்தின்போதே, கல்வி அமைச்சரிடம் மேற்படி கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

குருநகர் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த 2016 2017 மற்றும் 2018ஆம் கல்வி ஆண்டுகளில் ஆங்கில டிப்ளோமா பட்டம் பெற்று சுமார் 83 மாணவர்கள் வெளியேறியுள்ளனர். இதுவரையில் இவர்களுக்கான தொழில் வாய்ப்புகள் கிடைக்கப் பெறவில்லை.

இந்த மாணவர்கள் வாழ்வாதாரங்கள் இன்றி மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதும் வடக்கு மாகாணத்தில் கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்களாக ஆங்கில பாட ஆசியர்களுக்குமான வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

மேற்படி பட்டதாரி மாணவர்களை ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைத்து வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆங்கில ஆசியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா? என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார். (5)

சிறுவர் காப்பகத்துக்கு உதவி வழங்கவேண்டும்

புலம்பெயர் அமைப்புக்களிடம் கோரிக்கை

மட்டக்களப்பு,மார்ச்.4

வட கிழக்கில் பல உள்ள சிறுவர் பராமரிப்புநிலையங்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் அமைப்புக்கள் மற்றும் பரோபகாரிகள் அனைவரும் இணைந்து உதவி புரிய வேண்டும். இவ்வாறு அந்த அமைப்பின் தவிசாளர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பழுகாமம் விபுலானந்த சிறுவர் இல்ல மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பல சிறுவர் இல்லங்களில் பல தரப்பட்ட மாணவர்கள் தங்கி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அனைவரையும் ஒரே சிந்தனையுடன் கொண்டு செல்வதென்பது முடியாத காரியம்தான். ஆனால் அதையும் தாண்டி இவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக மாற்ற வேண்டும்.

சிறுவர் பராமரிப்பு நிலையங்களை இராசமாணிக்கம் மக்கள் அமைப்பு எதிர்வரும் காலங்களில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து கொண்டிருக்கின்றது. என்றார். (ற.ரி4,46)

கட்டுப்பாட்டை இழந்து ஹயஸ் வான் விபத்து

இரு வயது குழந்தை காயம்

வடமராட்சி, மார்ச்7

புலோலி தெற்கு சாரையடியில் வான் ஒன்று வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று நடந்தது. இந்த விபத்தில் இரண்டு வயதுக்குழந்தை ஒன்று படுகாயமடைந்து பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. விபத்துக்கு வானின் இயந்திரப் பழுதே காரணம் என்று கூறப்படுகிறது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு

வுனியா,மார்ச்.4

வவுனியா மாவட்டத்தில் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

வட.மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.வவுனியா மாவட்டத்தில் பிரதேச செயலகப்பிரிவு ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் வெற்றியீட்டிய வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். வடக்கு மாகாணசபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம் நிகழ்வில் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது.

விவசாயத்தையும் கால்நடையையும் காலநிலைக்கேற்ப செய்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும் இதற்கென வடக்கு மாகாண விவசாயக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும். மக்களின் தேவைகளோடு ஒப்பிடுகையில் எமது சபை செய்யும் சேவைகள் போதாமலே இருக்கின்றன. வடபகுதியிலே நீர் பிரச்னை என்பது முக்கியமானதாக காணப்படுகிறது. அந்த வகையிலே மகாவலி நீர்ப்பாசனத் திட்டம் என்பது வவுனியா மாவட்டத்திலே 30 குளங்களில் நீர் வருகையை உறுதிப்படுத்தும் திட்டமாக இருக்கின்றது.என்றார். நிகழ்வு வட மாகாண விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி நீர்பாசனம் மீன்பிடி நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன், வவுனியா மாவட்ட அரச அதிபர் சோமரத்திரன விதான பத்திரன, மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், அமைச்சின் அதிகாரிகள் விவசாயிகள் பண்ணையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ற.ரி4)

திடீரெனத் தீப்பற்றிய முச்சக்கர வண்டி

மன்னார்,மார்ச்.7
சிலாபத்துறை வீதியில் சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டிஒன்று இன்று திடீரெனத்தீ பற்றியுள்ளது.
இந்த முச்சக்கர வண்டியைச் செலுத்திச் சென்றவர் உயிர் தப்பியுள்ள போதும் அந்த முச்சக்கர வண்டி முழுமையாக தீயில் எரிந்துள்ளது.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

நடமாடும் சேவை

நுவரெலியா,மார்ச்.7
அக்கரபத்தனை ஹோல்புறூக் வல்லவன் திருமண மண்டபத்தில் நேற்று நடமாடும் சேவை நடைபெற்றது.
கொழும்பு லயன்ஸ் கழகத்தினரால் மூக்குக் கண்ணாடிகள், முதியோர்களுக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன.
அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்த சிறியின் ஏற்பாட்டில் இந்த சேவை நடைபெற்றது. இதில் 500 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (ற.ரி4)

உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 7
ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்துக்கு 1.3 மில்லியன் பெறுமதியான அவயவங்கள் செய்யும் உபகரணங்களை ஜோர்தான் இளவரசரும், கண்ணிவெடிகளை தடைசெய்வதற்கான சாசனத்தின் தூதுவருமான மிரெட் ராட் அல் ஹ்ஸைன் வழங்கி வைத்தனர்.
இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இந்த உபகரணங்களை ஜோர்தான் இளவரசரும், கண்ணிவெடிகளைத் தடை செய்யும் சாசனத்தின் தூதுவருமான மிரெட் ராட் அல் ஹ்ஸைன் வழங்கி வைத்ததுடன், செயற்கை அவயவங்கள் செய்யும் தொழிற்சாலையைப் பார்வையிட்டனர்.
இந்த நிகழ்வில், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் செந்தில் நந்தனன் உட்பட ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பணியாளர்கள், பயனாளிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். (ற.ரி5,106)

சாவகச்சேரி பொதுச் சந்தையில்
பழுதடைந்த கடலுணவுகள் விற்பனை என குற்றச்சாட்டு

சாவகச்சேரி, மார்ச். 7
சாவகச்சேரி பொதுச் சந்தையின் கடலுணவுகள் விற்பனைப் பிரிவில் பழுதடைந்த கடலுணவுகள் விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் பாதிப்படைகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் பிரதேச மக்கள் தெரிவித்ததாவது: சந்தையில் சுகாதாரப் பகுதியினரின் கண்காணிப்பு இல்லாததால் தினமும் குளிரூட்டப்பட்ட நிலையில் பழுதடைந்த கடலுணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன.
சாவகச்சேரி சந்தைக்கு தென்மராட்சி பிரதேசத்தின் பல பகுதிகளிலிருந்தும், ஏனைய பிரதேசங்களிலிருந்தும் கடலுணவுகள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. பிரதேசத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களும் கடலுணவு கொள்வனவு செய்வதற்காக வருகின்றனர்.
பாவனைக்கு உதவாக பழுதடைந்த மீன்களுக்கு இரத்தம் பூசி வியாபாரிகள் விற்பனை செய்வதால் அதனை வாங்கிச் செல்வோர் பாதிக்கப்படுகின்றனர். அதிகவிலைகொடுத்து வாங்கியும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (9)

கஞ்சாக் குற்றச்சாட்டு
சிறைச்சாலை அலுவலருக்கு 14 நாள்கள் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச்.
சிறைச்சாலைக்குள் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர் யாழ். நீதிவான் மன்றால் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
நேற்றுமுன்தினம் குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தர் கைதியொருவருக்கு கஞ்சா கொடுக்க முற்பட்டவேளையில் சிறைக்காவலர்களால் கைது செய்யப்பட்டார். அவர் யாழ்ப்பாண பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரிடம் இருந்து 9 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.
சந்தேக நபரை 14 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ற-21)

குடும்ப உறுப்பினர்களாலேயே பெண்களுக்குத் துன்புறுத்தல்

ஐ.நா. ஆய்வில் தகவல்

கொழும்பு,மார்ச் 7
இலங்கையில் நடக்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நெருங்கிய குடும்ப உறவுகளாலேயே அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன.
இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்டுள்ள ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.
ஐக்கிய நாடுகளின் நிதியம் மற்றும் களனிப் பல்கலைக்கழக குழுவினருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.
பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கையில் இந்த ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொடர்பான நிதியம் முதல்முறையாக இலங்கையில் மேற்கொண்ட இது தொடர்பான ஆய்வில் இந்த விடயம் கண்டறியப் பட்டுள்ளது.
களனிப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகளின் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி றிட்சு நக்கீன் கலந்துகொண்டார். (ற.ரி4)

நான் நகைகளுக்கு எதிரானவள் என்னிடம் ஏது 37 பவுண் நகை?

எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் விளக்கம்

அச்சுவேலி, மார்ச் 7
அபகரிப்பதற்கு என்னிடம் பெருமளவில் நகைகள் இல்லாததாலேயே கொள்ளையர்கள் என்னைக் கடுமையாகத் தாக்கினார்கள். பெண்கள் அதிகம் நகைகள் அணியக்கூடாது என்கிற கொள்கையை உடையவள் நான். அப்படியிருக்கும்போது என்னிடம் எப்படி 37 பவுண் நகை இருக்க முடியும்? அப்படி வந்த தகவல்கள் எல்லாமே பொய்.
இப்படித் தெரிவித்தார் பிரபல எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப் பிரகாசம். கோப்பாய் தெற்கில் உள்ள அவரது வீட்டில் அண்மையில் கொள்ளை இடம்பெற்றது.
யோகேஸ்வரியும் அவரது கணவரும் மட்டுமே அந்த வீட்டில் தங்கியிருந்தனர். உள்ளே புகுந்த கொள்ளையர்கள், தமது முகங்களை துணியால் மூடிக் கட்டியபடி சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாகத் தரித்து நின்று வீட்டைச் சல்லடைபோட்டு நகை, பணத்தைத் தேடியுள்ளனர். அவர்கள் இழுத்துக் கொட்டிய ஆடைகள், பொருள்கள் என அனைத்தும் வீடெங்கும் நிறைந்து கிடந்தன.
தூக்கத்தில் இருந்த இருவரையும் இரவு இரண்டு மணியளவில் யாரோ சிலர் முகத்துக்கு நேரே டோச் வெளிச்சத்தைப் பீச்சியடித்தபடி எழச் செய்தனர். அரண்டு, பயந்து எழுந்தவர்களில் முதலில் மனைவியின் கைகளைப் பின்புறமாகப் பிணைத்துக் கட்டினர். முகத்தையும் சேலையால் சுற்றி மூடிக் கட்டினர். அதன் பின்னர் கதிரையில் அமர வைத்தனர். அதேபோல கணவரையும் கட்டி கதிரையில் அமர வைத்தனர்.
பின்னர் வீடு முழுவதும் தேடுதல் நடத்தினர். நகை, பணம் எவையும் கிடைக்காத நிலையில் அவைகளை எங்கே மறைத்த வைத்திருக்கிறார்கள் என்பதைக் கூறுமாறு கேட்டு வற்புறுத்தினர். தங்களிடம் அப்படியான எதுவும் இல்லை என்று அவர்கள் திரும்பத் திரும்பக் கூறவும் ஆத்திரமடைந்து அவர்களைத் தாக்கத் தொடங்கினர்.
வீட்டிலிருந்து எடுத்த யோகேஸ்வரியின் ஒரு படத்தைக் காட்டி அதில் அவர் அணிந்திருக்கும் நகைகள் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டுக் கேட்டு அடித்திருக்கிறார்கள். படத்தில் தான் அணிந்திருப்பவை தங்கம் அல்ல, அவை போலி நகைகள் என்று அவர் கூறியபோதும் அதை ஏற்றுக்கொள்ளாத கொள்ளையர்கள் மீண்டும் மீண்டும் அவர்களைத் தாக்கினர்.
ஒருவர் கடுமையாகத் தாக்கிவிட்டு அகன்றதும் மற்றையவர் வந்து, "அவன் அடித்தே கொன்றுவிடுவான், அதனால் உண்மையைச் சொல்லிவிடுங்கள்" என்று ஆதரவாகப் பேசுவதாகக் காட்டிக் கொள்வார். அவர்கள் தமக்கிடையே தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலுமே பேசிக்கொண்டார்கள்.
கடைசியில் எதுவுமே சரிவராத நிலையில் யோகேஸ்வரியின் காதில் கிடந்த தோடுகளை இழுத்து அறுத்து எடுத்ததுடன் மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்டிருந்த அவரது தங்கத் தாலியையும் பறித்துச் சென்றனர்.
இந்தச் சம்பவம் குறித்து வெளியான செய்திகளில் 34 பவுண் நகைகள் கொள்ளையிட்பட்டதாகத் தகவல் வெளியாகி இருந்தது. பெண்கள் அளவுக்கு அதிகமான நகைகள் அணிவதை எதிர்க்கும் தன்னிடம் அந்தளவுக்கு நகைகள் இருந்தன என்று வெளியான தகவல்கள் தன்னை அதிகளவில் பாதிப்படையச் செய்தன என்று யோகேஸ்வரி தெரிவித்தார். "கொள்ளைச் சம்பவத்தினால் ஏற்பட்ட பாதிப்பு, இழப்பிலும் பார்க்க அதனால் ஏற்பட்ட மனப் பாதிப்பும் உளத் தாக்கமும் சொல்லமுடியாதவை" என்றார் அவர். சம்பவம் தொடர்பில் பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்ட ஆரம்பத் தகவல்களின் அடிப்படையில், கொள்ளைச் சம்பவம் தொடர்பான செய்தியில் 34 பவுண் நகைகள் பறிகொடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் பொலிஸ் முறைப்பாட்டில் ஐந்தரைப் பவுண் நகை மட்டுமே கொள்ளையிடப்பட்டதாகப் பதியப்பட்டுள்ளமையை உதயன் அறிந்துகொண்டது. தவறான தகவலினால் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக உதயன் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறான். (உ-11)

திடீரென மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மாணவர்கள்

நுவரெலியா,மார்ச்.7
தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வந்த ஆறு மாணவர்கள் திடீரென கிழங்கன் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த சம்பவம் நிவ்வெளி தொழில்நுட்ப பயிற்சிநிலையத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. தொழில்நுற்ப பிற்சிநிலையத்தின் வளாகத்தில் யூரியா என கூறப்படுகின்ற பசளை வகைகளை தோட்டமக்கள் கொண்டுவந்து கொட்டியுள்ளனர். மாணவர்களுக்கு ஏற்பட்ட ஒவ்வாமை காரணத்தினாலே பயிற்சில் ஈடுபட்டுவந்த மாணவர்கள் மருத்துவமனையின் சேர்க்கப்பட்டனர் எனக் கூறப்பட்டது. (ற.ரி4)

பனம் களியின் நிறத்தை மாற்ற ஆய்வு முயற்சி!

பனை அபிவிருத்திச் சபை மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம், மார்ச்.7

பனம்பழத்தில் இருந்து பெறப்படும் பனம் களியின் நிறத்தை பிரித்தெடுப்பதற்கான ஆய்வுநடவடிக்கையில் பனை அபிவிருத்திச் சபை ஈடுபட்டுள்ளது.

மஞ்சள் நிறத்தைகொண்ட பனம் களியில் இருந்தே சகல விதமான பனம் உற்பத்திப் பொருள்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த பனம் களியின் மஞ்சள் நிறத்தை பிரித்து அதை ஓர் பொதுவான நிறமாக மாற்றியமைப்பதற்கான ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சபையின் கைதடியில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தில் இந்த ஆய்வுநடவடிக்கை இடம் பெற்று வருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த போகத்தில் பொதுச் சபையால் கிட்டத்தட்ட 75 ஆயிரம் லீற்றர் வரையிலான பனம் களி பெறப்பட்டு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பனங்களி அடுத்த போகம் வரைக்கும் பாதுகாத்து வைக்கப்படுவதோடு அவை வெளியுலகுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகின்றது.

இந்த நிலையில் இந்தப் பனங்களியின் நிறத்தைப் பிரித்தெடுப்பதற்கு முழுமையான ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்று அவர்கள் தெரிவித்தனர். (எ-17)

போரின் பின்னரான பொறுப்பை சகலரும் செவ்வனே செய்யுங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைப் பீடாதிபதி கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 7

தமிழ் இனத்தின் இருப்பு, அடையாளம், பண்பாடு, கலாசாரம் என்பன பேணிப்பாதுகாக்கப்பட நாம் ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்யவேண்டும். 2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் ஊடாக தற்போது இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஓர் அத்தியாயம் எழுதப்பட்டு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை ஒவ்வொருவரும் செவ்வனே செய்யவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் முகாமைத்துவ கற்கைகள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2017, 2018ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சுற்றுலா அபிவிருத்தி விருந்தோம்பல் கற்கை நெறியை 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் முழுமைப்படுத்தியிருந்தனர்.

அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போது மிகுந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மொழி, கலாசாரம், பண்பாடுகளை பாதுகாப்பதோடு மேலும் சிறப்பாகப் பேணுவதற்கேற்றதான நடவடிக்கையை ஒவ்வொருவரும் எடுக்கவேண்டும்.

இவற்றுடன் உணவு, உடை, பாரம்பரியம் தொடர்பிலும் அக்கறை கொள்ளவேண்டும். எமது உரிமைகளை இனிமேல் நாங்கள்தான் போராடிப் பெறவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் என்னவென்று ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்.

எத்தகைய பணிகளைச் செய்யவேண்டும், அவற்றை எந்த முறையில் கொண்டு நடத்தவேண்டும் என்பன தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். போரின் பின்னர் இதற்கான தேவை தற்போது அதிகம் ஏற்பட்டுள்ளது. தமிழ்ப் பண்பாடுகள், கலாசாரம், பாரம்பரியங்கள் பாழடைந்துபோக இடமளிக்கக்கூடாது - என்றார். (எ-4)

அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் பெறுதல் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பில் உள்ள தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் முன்னால் எதிர்வரும் மார்ச் 14 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதென ஒன்றிணைந்த வேலை யற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் கொழும்பு அமைச்சால் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

அதற்கு விண்ணப்பித்து இன்றுவரை அது தொடர்பில் எந்தவொரு முடிவும் அறிவிக்கப்படவில்லை. எனவே குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை விரைந்து பெறுவதற்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் அனைத்து பட்டதாரிகளின் கையெழுத்து உள்ளடங்கிய மனு வொன்றும் அமைச்சிடம் கையளிக்கப்படவுள்ளது.

எனவே கலந்துரையாடலில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண வேலை யற்ற பட்டதாரிகள் சமூகம் கேட்டுள்ளது.

இதில் கலந்து கொள்பவர்கள் தங்கள் வரவை தமது மாவட்ட பிரதிநிதிகள் தலைவரிடம் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் உறுதிப்படுத்துமாறு சங்கம் கோரியுள்ளது.

சாராயக் கடைகளை மூடுமாறு கோரி வவுனியாவில் கண்டனப் போராட்டம்!

வவுனியா, மார்ச். 7

சாராயக்கடைகளை மூடுமாறுகோரி கண்டனப் போராட்டம் வவுனியாப் பிரதேச செயலகம் முன்பாக நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைத்துலகப் பெண்கள் தினத்தில் நடைபெறவுள்ள இந்தக் கண்டனப் போராட்டத்தை சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு, உழைக்கும் பெண்கள் விடுதலை முன்ணணி அமைப்புடன் இணைந்து நடத்தவுள்ளது.

போராட்டம் தொடர்பாக சமூக விழிப்பு ணர்வுக்கான மக்கள் அமைப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் கடந்த காலங்களில் இடம் பெற்ற போரால் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டது பெண் சமூகமே.

இந்த நிலையில் கடந்த 9 வருடங்களில் வேலைவாய்ப்பு இன்மை, அதிகரித்த வாழ்க்கைச் சுமை என்பவற்றால் ஏற்பட்டு வரும் கடன் சுமையால் பெண்கள் அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையைப் பயன்படுத்தி சமூகத்துக்குள் நுழைந்துள்ள நுண்கடன் திட்டங்கள், பிரமிட் வியாபாரமுறை என்பன அடிப்படைப் பொருளாதாரத்தை ஆட்டங்காண வைக்கின்றன.

இதுதவிர மதுப்பாவனை, போத்தல் கள்ளுப் பாவனை, மாவா, கஞ்சா, ஹெரோயின் போதைப் பொருள் பாவனை அதிகரிப்பால் பெண்களின் குடும்ப வாழ்வுக்கும் சுய பாதுகாப்புக்கும் உத்தரவாதம் இல்லாமல் உள்ளது. இது மட்டுமல்லாமல் உழைக்கும் மக்களின் வருமானத்தில் பெரும் பகுதி மதுக் கடைகளாலேயே சுரண்டப்படுகின்றது.

மது மற்றும் போதைப்பொருள் பாவனைகளின் அதிகரிப்பானது எமது பொருளாதார மற்றும் கல்விக் கட்டமைப்புக்களை அழிப்பது மட்டுமின்றி சமூகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறை சிறுவர் துஸ்பிரயோகம், வல்லுறவு, கொலை, கொள்ளை, லஞ்சம் மற்றும் வீதி விபத்துக்கள் என குற்றச் செயல்களுக்கு முதன்மைக் காரணியாக மாறியிருக்கின்றது.

எமது சமூகத்தின் அனைத்துக் கட்டமைப்புகளையும் தகர்த்து பொருளாதாரத்தைச் சிதைத்து எமது சமூகத்தைக் கடனாளியாக, நோயாளியாக, சிந்தனையற்றவர்களாக மாற்றி மக்களைச் சுரண்டி மேலும் வறுமையில் தள்ளும் அனைத்துத் திட்டங்களையும் முறியடிக்கவும் சாராய (பார்) மதுக்கடை, கள்ளுக்கடைகளை இழுத்து மூடி எமது சமூகத்தின் நல்வாழ்வுக்காக குரல்கொடுக்கவும் போராடவும் அனைத்து பெண்கள் அமைப்புக்களையும், அனைத்து சமூக அமைப்புக்களையும் மக்களையும் உரிமையுடன் போராட அழைக்கின்றோம் - என்றுள்ளது.

நடமாடும் வியாபாரிகள் கையுறை, மேலங்கி அணிதல் கட்டாயம்

யாழ்ப்பாணம், மார்ச்.7

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நடமாடும் உணவு வண்டில் வியாபாரத்தில் ஈடுபடுவோர் கையுறை, மற்றும் மேலங்கி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

யாழ்ப்பாண மாநகருக்கு உட்பட்ட பிரதேசத்தில் வண்டிகளில் நடமாடும் உணவு வியாபாரத்தை பலர் மேற்கொள்ளுகின்றனர். அவர்கள்தமது வியாபாரத்துக்கான அனுமதியை மாநகர சபையில் பெறுதல் அவசியம். மக்களுக்கான சிற்றுண்டிகளை விற்பனை செய்யும் அவர்கள் அவர்களுக்கான சுகாதாரத்தை பேணுவது அவசியம். கையுறை, மேலங்கி மற்றும் தலைக்கான உறை அணிவது கட்டாயமானது. உணவு பொரித்தல் செயற்பாடுகளை மேற்கொண்ட பின்னர் அதனை விற்பனை செய்யும்போது கையுறை அணிவது அவசியம். அதே போன்று தலை முடி உதிராதவாறு தலைக்குரிய நெட் அணிவது அவசியம். இந்த நடைமுறைகளை உணவுக்குள் பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நடப்பு வருடத்தில் இவ்வாறு வியாபாரி ஒருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

முன்பள்ளிகளின் செயற்பாடுகள் தொடர்பில் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்.7

வடக்கு மாகாண முன்பள்ளிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் வலயக்கல்விப் பணிமனைகளுக்கு அறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள ஆயிரத்து 513 முன்பள்ளிகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றன. அவர்களுக்கான வழிகாட்டல் செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. ஆகவே அவர்களுக்கான பொதுவான நடைமுறைகள் அவசியமாகும்.

பாடசாலையின் அமைவிடம், பாடசாலையின் கட்டடத் தொகுதி, ஆசிரியர் மற்றும் மாணவர்களின் உடை, வருடாந்த கற்றல் செயற்பாட்டு வரைமுறை, சுகாதாரம் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அறிக்கை ஒன்று வலயக்கல்விபணிமனைகளுக்குஅனுப்பப்பட்டு பின்னர் முன்பள்ளி இணைப்பாளர்களின் ஊடாக முன்பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே ஆசிரியர்கள் இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகளின் கற்றல் செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்கு மாகாணக் கல்வி அமைச்சால் முன்பள்ளி கல்வி ஆலோசனைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி 56ஆவது அமைச்சர் சபைக் கூட்டத்தில் கிடைத்திருந்தது.

2015ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வடக்கு மாகாண முன்பள்ளி கல்வி நியதிச் சட்டத்தின் பகுதி 3இன் 8ஆம் இலக்கத்தின் படி மாகாணத்திலுள்ள முன்பள்ளிகள் அலகுக்கென முன்பள்ளி கல்வி ஆலோசனைச் செயற்குழுவை அமைச்சர் தலைமையில் நியமிக்க சபையில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அமைவாக இந்த குழு நியமிக்கப்பட்டு செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-7)

போக்குவரத்து அதிகார சபையின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்.7

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் உள்ள 63 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாணப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆர்.வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் தற்போது 38 உத்தியோகத்தர்கள் பணி புரிகின்றனர். ஆனால் முகாமைத்துவ உதவியாளர்கள், நேரக் கணிப்பாளர்கள் உள்ளிட்ட 63 ஆளணி வெற்றிடங்கள் உள்ளன.

வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆளணி அனுமதி ஆள்சேர்ப்பு முகாமைத்துவ திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆள்சேர்ப்பை மேற்கொள்வதற்காக ஆட்சேர்ப்பு திட்ட அறிக்கை ஒன்றை அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளோம். அனுமதி கிடைத்தவுடன் ஆள்சேர்ப்பு நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-7)

மருத்துவ வசதிகள் நவீனமாகும் போது புதிய நோய்களும் தோன்றுகின்றன

வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச். 7

இன்றைய நூற்றாண்டில் மருத்துவ வசதிகள் நவீன மயப்படுத்தப்படுகின்றபோது புதிய புதிய நோய்களின் தாக்கமும் அதிகரித்துச் செல்வதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மருத்துவ நிபுணர்கள் ஒவ்வொரு புதிய நோய்கள் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்து அந்த நோயைத் தடுப்பதற்கான மருந்து வகைகளை இனம் கண்டு அந்த நோய்த் தாக்கத்தைத்தடுப்பதற்கு முயலுகின்றபோது இன்னொரு புதிய நோய் புதிய வடிவம் பெறுகின்றது. தொற்று நோய்கள் ஒருபுறம், தொற்றா நோய்கள் மறுபுறம் என நோய்த்தாக்கங்கள் மக்களை தினமும் வருத்துகின்றன.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் பாவனைக்காக சுகாதார திணைக்களத்திற்குரிய கட்டங்கள் நான்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு பிராந்தியத்திற்கு மருந்துகளை வழங்குவதற்கு முள்ளியவளைப் பகுதியில் பிராந்திய மருந்து வழங்கல் பிரிவு, உண்ணாப்பிலவு பகுதியில் அமைக்கப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை விடுதி, மருத்துவர்களுக்கான விடுதி, மாங்குளம் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஆகியனவே திறந்து வைக்கப்பட்டன. அவற்றில் பங்குபற்றியமதலமைச்சர்உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

தொற்றா நோய்கள் என இனம் காணப்பட்ட நீரிழிவு நோய், குருதி அழுத்தம், இரத்தக் கொழுப்பு, கருப்பை நீர்க்கட்டிகள் ஆகிய நோய்கள் எமது மக்களை வாட்டி வதைக்கின்றன. இதற்கு நாம் கையாளும் உணவுப் பழக்க வழக்கங்களேகாரணம். கிட்டத்தட்ட 150 வருடங்களுக்கு உட்பட்ட காலப் பகுதிகளிலேயே இந்தப் பழக்கங்கள் எம்மிடையே காணப்பட்டு வருகின்றன. வெள்ளை அரிசி, வெள்ளைச் சீனி, வெள்ளை மாவு, வெள்ளை உப்பு ஆகிய அனைத்து வெள்ளை உணவுகளும் எமது உடலுக்கு தீங்கை விளைவிக்கக் கூடியன என்பதை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது முன்னோர்கள் உடல் உழைப்புடன் கூடிய ஆரோக்கிய உணவுகளில் கூடுதல் கவனம் செலுத்திய காரணத்தால் அவர்கள் நீண்டகாலம் நோய் நொடியின்றி சுகதேகிகளாக வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்றைய எமது நிலை வேறு. முப்பது வயதுகளுக்கு முன் பின்னாக எம்மைப்பல தொற்றா நோய்கள் ஆட்டிப் படைக்கத் தொடங்கி விடுகின்றன.

எனவே நாம் இந்த நோய்த் தாக்கங்கள் பற்றி விழிப்புணர்வுடன் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். கூடிய கவனஞ் செலுத்தி எமது உடலுக்குத்தீங்கு விளைவிக்கக்கூடிய உணவுப் பழக்க வழக்கங்களில் இருந்து நாம் விடுபட வேண்டும்.

மருந்துகள் வழங்கல்பிரிவில் கடமையாற்றுகின்ற பிராந்திய மருந்தாளர் தொடக்கம் அனைத்து உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் விநியோகிக்கப்படும் மருந்துகள் குறித்து மிக விழிப்பாக இருத்தல் அவசியமாகும்.

அண்மையில் கண்சத்திர சிகிச்சையை புரிவதற்காக தனியார் மருத்துவ மனையொன்றில் அனுமதிக்கப்பட்ட சுமார் 10 பேரின் கண்கள் கெட்டுப்போன மருந்துகளைப் பாவித்த காரணத்தால் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பாதிப்பிற்கு உள்ளாகினர்.

எனவே மருந்துகள் கிடைக்கப்பெறும் போது தருகைப்பட்டியலில் குறிக்க ப்பட்டுள்ளவாறு சரியான மருந்துகள் குறிப்பிடப்பட்ட கம்பனிகளால் தரப்பட்டுள்ளனவா என்பதனை அவதானிப்புடன் அவற்றின் காலாவதி தினம் பற்றியும் மிகக் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

அதேபோன்று வழங்கப்பட்ட இந்த மருந்து வகைகள் நோயாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்பதாக அவற்றின் தரம் மற்றும் கலாவதித்திகதி போன்றவை அவதானிக்கப்படுவதுடன் மருத்துவர்களின் சிபார்சு களிற்கேற்பவே வழங்கப்படுதல் வேண்டும்.

தற்போது பின்தங்கிய பகுதிகளிலும் மருத்துவமனைகள் புதிதாக அமைக்கப்பட்டு மருத்துவ சேவைகளுக்காக திறந்து வைக்கப்பட்டு வருகின்றன. எனினும் இம் மருத்துவமனைகளில் கடமை புரிவதற்கு மருத்துவர்கள் இல்லாத குறை தொடர்ந்த வண்ணம் உள்ளது. எமது இன மருத்துவர்களின் விருப்பமின்மையால் அல்லது வேறு காரணங்களால் தென்பகுதியிலிருந்து மருத்துவ சகோதர சகோதரிகள் இப்பகுதிகளில் கடமையாற்றுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். அந்த மருத்துவர்கள் எங்கள் கிராமப்புற வைத்தியசாலைகளில் நியமிக்கப்படுகின்ற போது எமது கிராமத்து மக்களின் தமிழ் மொழி அவர்களுக்குப் புரிவதில்லை. அதே போன்று அம் மருத்துவர்களின் தாய் மொழி எமது மக்களுக்குப் புரிவதில்லை. அதனால் முழுமையான மருத்துவ சேவைகளை வழங்க முடியாது சிரமப்படுவது பல சந்தர்ப்பங்களில் உணரப்பட்டுள்ளது.

திறந்து வைக்கப்பட்ட இந்தக் கட்டடங்களை அவற்றின் அழகு குன்றாமலும் சுகாதார வசதிகளில் நலிவுகள் ஏற்படாத வகையிலும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பாவிக்க வேண்டியது பகுதி மக்களின் தலையாய கடமையாகும். எம்மிடையே ஒரு பிழையான நோக்கு உண்டு. அதாவது எமது தனிப்பட்ட சொத்துக்களாயின் அவற்றை மிகுந்த கவனத்துடன் எதுவித பாதிப்புக்களும் இன்றி பயன்படுத்துவோம்.

ஆனால் அவை அரச சொத்துக்களாக இருப்பின் எதுவித கவனமும் இன்றி கண்ட இடத்தில் எச்சில் உமிழ்வது. குப்பை கூளங்களை கண்ட இடமெல்லாம் வீசி எறிவது. மலசல கூடங்களை ஒழுங்காகப் பயன்படுத்தாது இருப்பது. அவற்றை முறையாக நீரூற்றி சுத்தப்படுத்தாது செல்வது ஆகிய பழக்கங்கள் எம்முள் எப்படியோ உள்நுழைந்து விட்டன. இவை கட்டாயமாக சீர் செய்யப்பட வேண்டியவை. கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற இன அழிப்பு நடவடிக்கைகளின் விளைவாக சொல்லொண்ணாத் துயரங்களை எமது மக்கள் அனுபவித்திருக்கின்றார்கள். இருப்பதற்கு ஒழுங்கான வீடுகள் இல்லை. மலசல கூட வசதிகள் இல்லை, தண்ணீர் அள்ளுவதற்கு கிணறுகள் இல்லை, தொழில் வசதிகள் இல்லை, வருமானம் இல்லை என்று இவ்வாறு பல்வேறுபட்ட துயரங்களில் எமது மக்கள் உழன்று கொண்டிருக்கின்றார்கள். இலங்கையில் மலேரியா நோய்த் தாக்கம் முற்று முழுதாக அழித்தொழிக்கப்பட்டுவிட்ட நிலையில் மீண்டும் தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நோய்த்தாக்கங்களுக்கு உள்ளானவர்கள் இந்த நோயை இலங்கைக்கு வெளியில் இருந்து கொண்டு வந்தவர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

சில காலங்களுக்கு முன்பு சிக்கின் கூனியா என்ற ஒரு வகை நோய்த்தாக்கம் எம்மில் பலரை ஆட்டிப் படைத்தது. அந்த நோய்த் தாக்கத்தினால் பல நூற்றுக்கணக்கான மக்கள் அழிந்தொழிந்து போனதும் பல்லாயிரக் கணக்கானவர்கள் அந்த நோய்த்தாக்கத்தின் பக்க விளைவுகள் காரணமாக கால் வருத்தம், மூட்டு வருத்தங்கள், தீராத உடல் உபாதைகள் என பல்வேறுபட்ட நிரந்தர குறைபாடுகளுடன் எம்மிடையே இன்றும் காணப்படுகின்றனர். எனவே, உணவுக் கட்டுப்பாட்டோடு பாரம்பரிய உணவுகளை சீரான முறையில் கையாண்டு ஆரோக்கியத்துடன் இருக்க பழகிக் கொள்ள வேண்டும்-என்றார்.

நிகழ்வில் மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வன்னிமாவட்ட பாராளமன்ற உறுப்பினர் க.சிவமோகன், மாகாணா சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(எ-ரி3)

வாக்காளர் அட்டைகள் மீளவும் ஒப்படைக்கப்படும்

யாழ்ப்பாணம் .மார்ச் .6

அண்மையில் நடந்து முடிந்த உள்ளுராட்சி சபை தேர்தலுக்கான விநியோகிக்கப்படாத வாக்காளர் அட்டைகள் மீளவும் தேர்தல் திணைக்களத்திடம் கையளிக்கப்படும் என்று யாழ்ப்பாண முதன்மைத் தபாலகம் தெரிவித்தது.

இரண்டாயிரத்துக்கு உட்பட்ட அட்டைகள் விநி யோகிக்கப்படாது தபாலகத்தில் உள்ளன. மிகுதி அனைத்தும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

விநியோகிக்கப்படாத வாக்காளர் அட்டைகள் கணக்கிடப்பட்டு உரிய முறையில் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. (எ-17)

வலய ரீதியிலான

ஆசிரியர்களின் இடமாற்றம் தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம் மார்ச் 7

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் வலயத்துக்குள்ளான இடமாற்றங்களை இடைநிறுத்தி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதய குமாரால் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி தவணையில் இடைப் பகுதியில் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்த வேண்டாம் எனவும் கடந்த உள்ளூராட்சித் தேர்தலால் இடைநிறுத்திவைக்கப்பட்ட மேற்படி இடமாற்றத்தை பாடசாலையின் இரண்டாம் தவணை ஆரம்பிக்கும் திகதியான ஏபரல் மாதம் 23ஆம் திகதிமுதல் நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வலயத்துக்குள் இடமாற்றம் செய்யப்பட வுள்ள ஆசிரியர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தற்போதய பாடசாலை இடமாற்றம் வழங்கப்படவுள்ள பாடசாலை, பாடம் மற்றும் தற்போதய பாடசாலையில் கடமைக்கு அறிக்கைசெய்த திகதிஅடங்கியபட்டியலினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்குமாறும் முறையான அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னரே இடமாற்ற நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அத்துடன் சேவையின் தேவைகருதி தவணையின் இடைப்பகுதியில் அவசியமாக இடமாற்றம் செய்யவேண்டியிருப்பின் அதற்கான காரணத்தினைத் தெளிவுபடுத்தி தனது அனுமதியைப் பெற்றபின்னரே இடமாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-8)

வடக்கு உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான பதவி உயர்வு அடுத்தவாரம்

யாழ்ப்பாணம், மார்ச். 6

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதி அங்கீகாரத்துக்கு இணங்க வடக்கு உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு அடுத்தவாரம் வகுப்பு 1 க்கான பதவி உயர்வுக் கடிதம் வழங்கப்படவுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் இதற்கானநடவடிக்கையை எடுத்துள்ளார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 2017.09.29ஆம் திகதிய சுற்றறிக்கை அனுமதிக்கு இணங்க வகுப்பு ii, வகுப்பு i க்கு உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு பதவி உயர்வுக்கு அனுமதி கிடைத்தது. இதன் பிரகாரம் 26 உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு ரிஏ36 சம்பளத் தொகுதியில் வகுப்பு 2 க்கான பதவி உயர்வு கடிதங்களை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக அனுப்பி வைத்துள்ளது.

இதேபோல வகுப்பு 1 க்கு ரிஏ382 சம்பள அடிப்படையில் 26 உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு மான பதவி உயர்வுக் கடிதம் அடுத்தவாரம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட்டின் பணிப்புரையின் பேரிலேயே வடக்கில் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு 10.05.2014 முதல் வகுப்பு 1 க்கான முதலமைச்சரின் உள்ளூராட்சி அமைச்சு செயலகத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வழங்கப்படவிருந்த பதவி 1க்கான பதவி உயர்வு உள்ளூராட்சி தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. இவ்வாறு பிற்போடப்பட்ட பதவி உயர்வு கடிதமே அடுத்த வாரம் வழங்க வடக்கு மாகாண ஆளுநர் பணிட் புரை விடுத்துள்ளார்.

(எ-50)

யாழ்ப்பாண அபிவிருத்திக்கு சிறப்புக் கவனிப்புத் தேவை

யாழ்ப்பாணம்,மார்ச்.7

யாழ்.மாவட்டம் அபிவிருத்தியில் 30 வருடங்கள் பின்னோக்கிய நிலையில் உள்ளது. அதைச் சீர்செய்ய வேண்டும். ஏனைய மாவட்டங்களை விட இந்த மாவட்டத்துக்கு கூடுதலான தேவையுள்ளது. இவ்வாறு நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரி வித்தார்.

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தின் மணி மண்டபத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற் றது. அதில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

கிழக்கு மாகாணத்தில் மூவின மக் களும் செறிந்து வாழ்கின்றனர். அங்கு சென்று பார்க்கும்போது, லண்டனா, சவுதி அரேபியாவா என்று ஆச்சரியம் ஏற்படுகின்றது. போரின் கொடூரத்தில் கிழக்கும் அபி விருத்தியில் வீழ்ச்சியடைந் திருந்தது. ஆனால் குறுகிய காலத் தில் பெரியதொரு அபிவிருத்தி மாற் றங்கள் அங்கு ஏற்பட்டுள்ளன.

அதே நிலையை எமது மாவட்டமும் அடைய வேண்டும். இதற்கு உறு துணையாக என்னோடு இணைந்து செயற்படக்கூடியவராக இருக்கின்றார் நல்லிணக்க அமைச் சின் செயலாளர். அதற்கு நன்றியு டையவனாக உள்ளேன்.

எமது மாவட்ட செயலாளரின் உதவி, ஒத்துழைப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு உதவுகின்றது. அதே போல் எமது வலி. மேற்கு பிரதேச செயலரும் பெரும் ஒத்து ழைப்பை வழங்கி வருகின்றார். அவரும் இடமாற்றம் பெறாமல் இங்கு கடமையாற்ற வேண்டும் என்றார்.

"அபிவிருத்தியில் முழுப் பங்க ளிப்பை வழங்குவதில், ஏனைய மாவட்டச் செயலர்களைவிட யாழ் மாவட்டச் செயலர் நா.வேதநாய கன் சேவையில் முன்னின்று செயற்படுபவர்." என்று நல்லி ணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி இதன்போது தெரிவித்தார். (ற-ரி2,29)

இந்து மயான விவகாரம் கைதானோருக்கு பிணை

மட்டக்களப்பு,மார்ச்.7

அட்டப்பள்ள இந்து மயான விவ காரஆர்ப்பாட்டம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்தவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம்விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கில் 14 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்த 21 பேரையும் பிணையில் விடுதலைசெய்ய சம்மாந்துறை நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். எதிர்வரும் 16 ஆம் திகதி 23 பேரும் மன்றில் முன்னிலையாக வேண் டுமென தவணைத்திகதியையும் அவர் அறிவித்தார்.

கடந்த 27 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் பிரதே சத்துக்குட்பட்ட அட்டப்பள்ளம் இந் துமயானத்தை அளவீடு செய்ய முற்பட்டபோது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது தாக்குத லில் ஈடுபட்டனரென்ற சந்தேகத் தின்பேரில் 21 பேர் கைதுசெய்யப் பட்டிருந்தனர். (ற.ரி2,48)

விபத்தில் ஒருவர் சாவு மற்றுமொருவர் காயம்

சிலாபம்,மார்ச்.7

மோட்டார் சைக்கிள் மோதி காய மடைந்த ஒருவர் உயிரிழந்துள் ளார் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

விக்கிரமசிங்க ஹப்புஆமிலாகே அருண (வயது54) என்பவரே சாவடைந்தார். சிலாபம், கொழும்பு வீதி, மெரவல பகுதி யில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளை செலுத்திய 21 வயதுடைய இளைஞர் ஒருவ ரும் இந்த விபத்தில் காயம டைந்த நிலையில், சிலாபம் மருத்துவமனையில சேர்க்கப் பட்டார். இது தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்து வரு கின்றனர். (ற.ரி2)

விபத்தில் இருவர் உயிரிழப்பு

காலி,மார்ச்.7

காலி மாத்தறை பிரதான வீதி அஹங் கம, வெல்ஹேன்கொட பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத் தில் இருவர் உயிரிழந்தனர். நால்வர் காயமடைந்தனர்.

68 வயதுடைய தாயும் 32 வயது டைய மகளுமே உயிரிழந்தனர்.

கொழும்பிலிருந்து காலி நோக்கிப் பய ணித்த மகிழூர்தியும் மாத்தறையிலி ருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமும் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

மகிழூர்தியில் பயணித்த நான்கு பேர் காயமடைந்த நிலையில் காலி கராப் பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். (ற.ரி2)

சிவாஜிக்கு எதிரான வழக்கு ஏப்ரல் 2க்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, மார்ச் 7

கடந்த 22 ஆம் திகதி வட்டு வாகல் கோத்தபாய கடற் படை முகாமுக்கான காணிசு வீகரிப்புக்கு எதிர்ப்புத் தெரி வித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட் டம் தொடர்பில் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அரச சொத்துக்கு சேதம் விளைவித்தமை உட்பட பல்வேறு முறைப்பாடுகள் இவர் மீது முல்லைத்தீவு பொலீஸாரால் முன்வைக்கப் பட்டு வழக்கு தாக்கல் செய் யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ். லெனின்குமார் தலை மையில் வழக்கு விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது.

வடமாகாண சபை உறுப்பி னர் எம்.கே.சிவாஜிலிங்கம் நாட்டில் இல்லாத காரணத் தால் வழக்கு தொடர்பான விசாரணை ஏப்ரல் மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டது. (ற.ரி5,13)

சுன்னாகத்தில் கையெழுத்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

அரசை ஐ.நா. பாதுகாப்புச் சபை யில் பாரப்படுத்தி பன்னாட்டுக் குற்றவியல் பொறிமுறையைக் கோருகின்ற கையெழுத்துப் போராட்டம் நேற்று நடைபெற் றது.

இந்தக் கையெழுத்துப் போராட் டம் சுன்னாகம் பிரதேசத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவர் கஜேந்திரகு மார் பொன்னம்பலத்தின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் பன்னாட் டுப் பொறுப்புக்கூறல் பொறிமு றைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியி னரால் முன்னெடுத்துச்செல் லப்படும் கையெழுத்துப் போராட் டத்தில் பொதுமக்கள் பலரும் கையொப்பமிட்டனர்.

(ற-ரி5)

விபத்தில் பிரதேச செயலர் காயம்

மன்னார்,மார்ச்.7

முசலியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விபத்தில் இருவர் காயமடைந் தனர்.

முசலி பிரதேச செயலர் செயலாளர் கே.எஸ்.வசந்த குமார் மற்றும் ஊழி யர் ஒருவருமே காயமடைந்த நிலை யில் மன்னார் பொது மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டனர்.

சிலாவத்துறை, மரிச்சிக்கட்டி செல்லும் பிரதான வீதிக்கு அருகாமையில் பிர தேசச் செயலாளர் கே.எஸ்.வசந்தகு மார் மற்றும் ஊழியர்கள் சிலர் உடற் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தனர்.

அந்த வீதியூடாக வந்த மோட்டார் சைக் கிள் வேகக் கட்டுபாட்டை இழந்து உடற் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வர்கள் மீது மோதியது எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளை சிலாபத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற.ரி2,56)

900 ஏக்கர் நிலத்தில் இம்முறை சிறுபோகம்

கிளிநொச்சி,மார்ச் 7

இரணைமடுக்குளத்தின் நீரைப்பயன்படுத்தி இவ்வாண்டு 900 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்வதென தீர்மானிக் கப்பட்டுள்ளது. இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோகச்செய்கை தொடர்பான ஆலோசனைக்கூட்டம் கிளிநொச்சி கோவிந் தன்கடைச்சந்தியில் அமைந்துள்ள இரணை மடுத்திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

நீரைச்சிக்கனமாகவும் நேர்த்தியாகவும் பயன் படுத்திவெற்றிகரமான விவசாயச்செய்கையை மேற்கொள்வதென்றும் குளத்தின் நீரைக் கொண்டு 900 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோ கப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும். அந் தப் பயிர்ச்செய்கையை இரணைமடுக் குளத் தின் கீழான பன்னங்கண்டி கமக்கார அமைப் பின் கீழ் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வதென்றும் தீர்மா னிக்கப்பட்டது.

இது தொடர்பான இறுதி முடிவு அடுத்த வாரம எவில் மாவட்ட செயலர் தலைமையில் எடுக் கப்படவுள்ளதாக இன்றைய கூட்டத்தில் தீர்மா னிக்கப்பட்டுள்ளது. 36அடிநீர்கொள்ளளவைக் கொண்ட கிளிநொச்சி இரணைமடுக் குளத் தின் நீர்மட்டம் 16 அடி மூன்று அங்குலமாகக் காணப்படுகின்றது.

இதில் பத்து அடி வரையான தண்ணீரைக் குளத்தின் பாதுகாப்புக்கருதி தேக்கி வைப்பது எனவும் ஏனைய நீரைப்பயன்படுத்தி சிறுபோ கச்செய்கை மேற்கொள்வதாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

இதில் இரணைமடு விவசாய அமைப்புக்க ளின் பிரதிநிதிகள், நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள், விவசாயத்திணைக்கள அதிகாரி கள் எனப்பலர் கலந்த கொண்டனர். (ற.ரி4)

கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

திருகோணமலை,மார்ச்.7

திருகோணமலை இலிங்க நக ரில் உள்ள, செவிப்புலன் அற் றோர் பேச முடியாதோருக்குரிய பாடசாலைக்கு மல்டிமீடியா ப்ரொஜெக்டர், டிவிடி பிளேயர் மற் றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை ரோட்டரி கழ கத்தால் இவ் உபகரணங்கள் நேற்று முன்தினம் பாடசாலை இயக்குநர் பாலசிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

திருகோணமலை ரோட்டரி கழக உறுப்பினர்கள் மற்றும் அனுச ரணை வழங்கிய இங்கிலாந்து பெத்தோவன் (Bathavon) ரோட் டரி கழக உறுப்பினர் ட்ரிம் வெஸ்ட்ப்ரூக் (Rtn. PP. Tim Westbrook)ஆகியோருக்கு அதி பர் தனது நன்றிகளையும் இதன்போது தெரிவித்தார்.

நிகழ்வில் கற்றல் தொடர்பிலான காணொலிகளும் மாணவர்க ளுக்கு காண்பிக்கப்பட்டது.

(ற.ரி2)

கொலைகாரக் காளான்கள்

அமெரிக்காவின் கிழக்கு ஓரிகன் மலைப் பகுதிகளில் உலகிலேயே மிகப் பழமையான ஆச்சரியம் அளிக்கக்கூடிய ஓர் உயிரினம் வாழ்ந்துகொண்டிருக்கிறது. அது ஒரு வகைத் தேன் காளான்.

2 ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் காளான்கள் பரந்து விரிந்திருக்கின்றன. இவை அனைத்தும் கண்களுக்குத் தெரியாத ஒரேயொரு வித்திலிருந்துதான் உருவாகியிருக்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இந்தக் காளான் உருவாகுவதற்கு குறைந்தது 2 ஆயிரத்து 400 ஆண்டுகள் முதல் அதிகபட்சம் 8 ஆயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்கிறார்கள். தேன் காளான்கள் மெதுவாகப் படர்ந்து, தாம் செல்லும் வழியில் உள்ள உயிரினங்களைக் கொன்றுவிடுகின்றன. ஒவ்வோர் இலையுதிர் காலத்தின் போதும் மஞ்சள் வண்ணக் காளான்களாகக் கூட்டம் கூட்டமாகத் தங்கள் இருப்பை வெளிக்காட்டிக்கொள்கின்றன. ஒரு சில வாரங்களில் தங்களுடைய உருவத்தை மாற்றி, வெள்ளை நிறமாக மாறி சுண்ணாம்புபோல் சாதாரணமாகக் காட்சியளிக்கின்றன. இந்தத் தேன் காளான்கள் மரங்களுக்கு மிகப் பெரிய ஆபத்தை விளைவித்துவிடுகின்றன. மரத்தின் வேர்களில் இருந்து சத்தை மெதுவாக உறிஞ்சி தங்களை வளர்த்துக்கொள்கின்றன. இதனால் மரங்கள் மெதுவாக் சத்துகளை இழக்க ஆரம்பிக்கின்றன. 20, 30 ஆண்டுகளில் தேன் காளான்களை எதிர்த்து நிற்க முடியாமல் இறக்கும் நிலைக்கு சென்றுவிடுகின்றன.

'காளான்களால் ஒரு மரத்தைக் கொலை செய்ய இயலும் என்பதை மக்களால் நம்ப முடிவதில்லை. மரத்துக்குத் தேவையான சத்துகளும் தண்ணீரும் தொடர்ச்சியாகக் கிடைக்காவிட்டால் அவை காலப்போக்கில் மடிந்துதான் போகவேண்டும். தேன் காளான்கள் இப்படித்தான் அனைத்தையும் அபகரித்துக்கொண்டு, மரங்களை வீழ்த்திவிடுகின்றன' என்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் கிரைக் பிலிப். (ம)

துருக்கிக்கான அமெ. தூதரகம் மூடப்பட்டது

அங்காரா, மார்ச் 7

துருக்கியின் தலைநகர் அங்காராவில் செயற்பட்டுவந்த அமெரிக்கத் தூதரகம் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக மூடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மக்கள் அதிகம் கூடுவதைத் தவிர்க்க வேண்டும், தூதரகத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் சுற்றுலாத் தளங்களுக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும். பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கையும் விடுத்துள்ளது. தூதரகத்துக்குக் கூடுதல் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

துருக்கியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று தமக்குக் கிடைத்த எச்சரிக்கையை அடுத்தே இந்த நடவடிக்கைளை தாம் எடுத்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது. (ம)



போலந்தில் கட்டடவிபத்து; 4 பேர் உயிரிழப்பு

போலந்தில் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட விபத்தை அடுத்து நான்கு பேர் உயிரிழந்தனர்.

போலந்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பொஸ்னான் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. எரிவாயு கொள்கலனில் ஏற்பட்ட வெடிப்பாலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது.

உயிரிழந்த வர்களைத் தவிர 20 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம)

குழந்தையின்மைக்கு முழுமையான தீர்வு !

ARC சர்வதேச கருத்தரிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்

18வது ஆண்டு சேவையில்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்

மார்ச் 9,10,11ம் திகதிகளில் காலை 10 முதல் மாலை 6.30 வரை

இக்கண்காட்சியில் பங்குபெறுபவர்களுக்கு இலவச சலுகைகளாக :

1. தம்பதியர்களுக்கு இலவச விமான பயணச்சீட்டு (இருவழி)
2. 1 மாதத்திற்கான இலவச தங்குமிட வசதி
3. ஏர்போர்டில் இருந்து அழைத்து மீண்டும் ஏர்போர்டுக்கு இலவசமாக
4. தம்பதியர்களுக்கான ஆரம்பக்கட்ட முழு பரிசோதனை இலவசமாக
5. IUI / IVF/ Laparascopy சிகிச்சைகள் கட்டணச் சலுகைகளில்

மேலதிக விபரங்களுக்கு மாலை 5 மணிக்கு கேப்டன் டிவியை கண்டு பயன்பெறுங்கள்

இலவச முன் பதிவுகளுக்கு 0757 333 666

இராணுவ பலத்தில் அமெரிக்கா முதலிடம்

உலகின் வலிமையான இராணுவங்களின் தரவரிசைப் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

'ஜி.பி.எவ்.' என்ற அமைப்பு உலகின் வலிமையான இராணுவத்தின் பட்டியலை வெளியிட்டுள்ளது. 133 நாடுகள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் ரஷ்யா உள்ளது. அடுத்தடுத்த இடங்களில் முறையே சீனா, இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. (ம)

உலக பெண்கள் தினம் நாளை பரவலாகக் கொண்டாடப்படவுள்ள நிலையில், இந்தத் தினத்தை முன்னிட்டு லண்டன் நகரில் நேற்றுமுன்தினம் மிகப்பெரும் பேரணியொன்று நடத்தப்பட்டுள்ளது. (ம)

சிரியாவில் தாக்குதல் தொடரும்

அசாத் அறிவிப்பு

டமஸ்கஸ், மார்ச் 7

சிரியாவில் ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இடங்களில் தாக்குதல்கள் தொடரும் என்று தெரிவித் தார் சிரிய அதிபர் அசாத்.

சிரிய அதிபர் அசாத் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட அமுத் தக் குழுக்கள் அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களாக மாற்றம்பெற்றதை அடுத்து கடந்த 2014ஆம் ஆண்டு முதல் சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அலெப்போ நகரம் கடந்த வருடம் ஆயுதக் குழுவின் பிடியில் இருந்தது. கிழக்கு கவுடாவில் தற்போது போர் நடைபெற்று வரு கிறது. இந்த நிலையில் சிரியாவின் ஏனைய இடங்களிலும் தாக்குதல்கள் தொடரும் என்று தெரிவித்தார் சிரிய அதிபர் அசாத்.

"பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் உறுதியாக வுள்ளோம். சமாதானம் மற்றும் போர் நிறுத்த நடவடிக்கைகளில் நம்பிக்கை மற்றும் உடன்பாடு இல்லை.

கிளர்ச்சி யாளர்களின் படையை எதிர்த்து முன்னோக்கிச்சென்றுகொண்டிருக்கிறோம்" என அசாத் மேலும் தெரிவித்தார். (ம)

கவுடாவில் தொடர்கின்றன தாக்குதல்கள்

சிரியாவின் கவுடா நகரில் போர் முடிவுற வில்லை என்றும் அவ்வப்போது சில இடங் களில் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன என்றும் பன்னாட்டு ஊடகங் கள் செய்தி வெளியிட்டன.

கடந்த இரண்டு வாரகாலமாக கவுடா நகரில் போர் நடைபெற்று வருகிறது. சுமார் ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பன் னாட்டு ஊடகங்களின் தகவல்கள் தெரிவிக் கின்றன. இவ்வாறிருக்க கவுடா நகரில் நேற்றுமுன்தினம் போர் முடிவுக்கு வந்ததாக சில ஊடகங்கள் தெரிவித்திருந்தன. எனி னும், போர் முடிவுறவில்லை. கிளர்ச்சியா ளர்கள் ஒருசில இடங்களில் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 70 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

பப்புவா நிலநடுக்க சாவு எண்ணிக்கை 67

பப்புவா நியூகினியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சாவடைந்தோர் எண்ணிக்கை 67ஆக அதிகரித்தது.

பப்புவா நியூகினியாவின் போர்கேரா மாகாணத்தில் கடந்த வாரம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக் கம் ரிச்டர் அளவுகோலில் 7.5 அலகுகளாகப் பதிவாகியது. பூமிக்கு அடியில் 35 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. நில நடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து உடனடி தகவல் எதுவும் கிடைத்திருக்கவில்லை. இவ்வாறி ருக்க 67 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டுச் செஞ்சிலு வைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையில், 'கடந்த வாரம் போர்கோ மாகாணத்தில் ஏற்பட்ட நில நடுக்கத் துக்கு 67 பேர் உயிரிழந்தனர்.

500 பேர் காயமடைந்துள்ளனர். ஒரு லட்சத்துக்கு அதிக மான மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்' என்று குறிப்பி டப்பட்டுள் ளது. (ம)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

அச்சமூட்டும் திகன

அம்பாறையைத் தொடர்ந்து கண்டி மாவட்டம் தெல்தெனியபிரதேசத்தில்உள்ளதிகனஎன்றஇடத்திலும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான தாக்குதல் பெரும்பான்மைச்சிங்களவர்களால்நடத்தப்பட்டுள்ளது.தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களைத் தொடர்ந்து, இப்போது முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் தொடர்ச்சியாக இடம் பெற ஆரம்பித்துள்ளனமைகவலைதரும்செய்தி. அத்தோடு 30 வருட காலப் போரில் இருந்து அரசியல்வாதிகளும் மக்களும்எதையும்கற்றுக்கொள்ளவில்லைஎன்பதும், இலங்கை மாறவேயில்லைஎன்பதும்அதிர்ச்சியளிக்கும்உண்மையாக அச்சுறுத்துகின்றது.

ஒருவிபத்தைத்தொடர்ந்துநடந்ததாகக்கூறப்படும்சண்டையில் ஒருவர்உயிரிழந்ததை மையமாக வைத்து கலவரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.உயிரிழந்தவாகனச்சாரதியின் சடலத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அப்போதே முஸ்லிகளின் கடைகளை எரித்தும் வீடுகள் மீது கற்களை எறிந்து தாக்கியும் இருக்கிறார்கள். 1983இல் கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனக் கலவரம் உருவாகிய விதத்தை ஒத்த காட்சிகளாக இவை விரிகின்றன. .

அப்போதும் இப்படித்தான், திருநெல்வேலியில் குண்டுத் தாக்குதலில்கொல்லப்பட்ட13படையினரதும்சடலங்கள் ஒன்றாகக்கொழும்புகனத்தைமயானத்திற்குஎடுத்துச்செல்லப்பட்டன. பின்னர் அங்கிருந்த தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள்கட்டவிழ்த்து விடப்பட்டன.

அதைத் தொடர்ந்து உருவாகிய அரசியல் சூழல் இலங்கையை 30 ஆண்டுகள் வன்முறைப் பாதையில், ஆயுதப் போரில்ஈடுபடுத்திஅழிவைத்தேடிதந்தவரலாறுஇலகுவாக மறக்கடிக்கப்பட்டுவிட்டது. மீண்டும் ஆரம்பத்திலிருந்தே தொடங்குகிறார்கள். மக்கள் மட்டுமல்லர், ஆட்சியாளர்களும் அப்படித்தான். சட்டம் ஒழுங்குக் காவலர்கள் அம்பாறையிலும்சரி, திகனவிலும்சரிநடந்துகொண்டவிதம்முழுத் திருப்தியளிப்பதாக இல்லை.

அம்பாறையிலும் திகனவிலும் நடந்தவைகள் இனக் கலவரங்களா என்கிற சந்தேகம் சில தமிழர்கள் மத்தியில் இருக்கிறது. இந்தச் சந்தேகம் அபத்தமானது. தமிழர்களுடனான போர் முடிந்ததில் இருந்தே முஸ்லிம்கள் மீதான காழ்ப்புணர்வு ஆரம்பித்துவிட்டது. அவர்களின் இனப்பெருக்க வீதம் அதிகம் என்கிற புள்ளிவிவரம் ஒன்று பரப்பிவிடப்பட்டு, இது இப்படியே போனால் ஒரு காலத்தில் அவர்கள் மொத்த நாட்டிலும் பெரும்பான்மையினராகிவிடுவார்கள் என்கிற அச்சம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் அதனோடு இணைந்ததாக அவர்கள் ஏனைய இனத்தவர்களின் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பார்க்கிறார்கள் என்கிற வதந்தி திட்டமிட்டுப் பரப்பப்பட்டது.

விடுதலைப்புலிகள்இயக்கத்திற்கும்கொழும்புஅரசுக்கும் இடையிலான போரில் ஆதாயம் தேடிக்கொண்ட இனக் குழுவினர் என்கிற வெறுப்புணர்வும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்பட்டது. இவற்றுக்கு இடையே, முன்னாள்அரசதலைவர்மகிந்தராஜபக்சவின்ஆட்சிக்காலத்தில் அவ்வப்போது முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் கட்டவிழ்க்கப்பட்டன.

இவ்வாறுசிறுகச்சிறுகவளர்ந்துதான்இன்றுஅதுகலவரமாக மாறியிருக்கிறது.சிங்களத்தேசியத்தைஅச்சமடையச்செய்து அதனைச் சிறுபான்மை இனத்தவர்கள் மீது திருப்பி விடுவதில் இதை இயக்குபவர்கள் எப்போதும் வெற்றிபெற்றே வந்திருக்கிறார்கள். இப்போதும் அதுவேதான் நடந்திருக்கிறது. எனவே நடந்தவற்றை திட்டமிட்ட இனக் கலவரம் என்று கூறுவதில் தவறு ஏதுமில்லை.

இந்தக்கலவரங்களைத்தடுப்பதில்அரசுவினைத்திறனோடு செயற்படவில்லை என்பது கண்டிக்கத்தக்கது. வன்முறைகள் தொடர்ந்து பரவாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தாலும், இந்த வன்முறைகளைத்தடுப்பதற்கு அதுதவறியிருக்கிறது. அம்பாறையில் அது நடந்தபோதே, சட்டம் ஒழுங்கைச்சரிவரச்செய்யாத பொலிஸார்மீதுகடுமையான நடவடிக்கை எடுத்து, வன்செயலில் ஈடுபட்ட அனைவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுத்திருந்தால், திகனவில் கலவரம்வந்திருக்காது.அதுமட்டுமல்லாமல்,திகனவில்கலவரம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்கிற அச்சம் வெளிப்படுத்தப்பட்டபோதே, போதிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால்அங்குகலவரம்வெடிப்பதையேதடுத்திருக்கலாம். அதுவும் நடக்கவில்லை.

பெரும்பான்மையினர் எதனைச் செய்தாலும், அதனைப் பெரும்பான்மையினப்பொலிஸார்பார்த்துக்கொண்டுவாளாவிருப்பார்கள், அரசும் கண்டுகொள்ளாது என்கிற நிலை தொடரத்தொடரத்தான்கலவரங்களும்வளர்ந்துகொண்டே இருக்கின்றன. கொழும்பு ஆட்சியாளர்களின்இந்தப்போக்கு மாறும்வரையில் இலங்கைக்கு மீட்சி என்பதேகிடையாது.

“ கடவுளிடம் சென்று எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன்”

தம்பித்துரை

“தர்க்னீஸ் ஓம்ரான்” . ஆம், இந்தப்பெயர் கவர்ச்சிமிக்கநடிகரொருவரின்பெயராக இருந்தால் எம்மில் பலருக்கும் அது மனதில் பதிந்திருக்கும் . ரி-20 கிரிக்கெட் ஆட்டத்தில் இரட்டைச்சதம்அடித்துசாதித்தவீரரானால்கூட ஞாபகமிருக்கும். இவை தானென்றல்லாமல், மேடைகளில்வீரமுழக்கமாக பொய்வாக்குறுதிகளை “அவுத்து விடும்” தேர்தல் கால அரசியல் வாதியின் பெயரானால் கூட ‘ஈ’ என்று வாயிளித்து வரவேற்றிருப்போம்.
என்னசெய்வது? இந்தப்பெயருக்குரியஅப்பாவி, குருதிதோய்ந்த, முழுஉடலும்சிவப்புமயமானகட்டடஇடிபாடுகளின்சாம்பலைப்பொன்னாடையாகப்போர்த்தியசாமானியகுழந்தையாயிற்றே. அதனால்தானோஎன்னமோ இந்தக்குழந்தையின் பெயர் எம் எல்லோரதும் கவனத்திலும் பதியாது போயிற்றுப் போலும்.

நெஞ்சு பொறுக்குதில்லையே!

கடந்தஓராண்டுகாலத்திற்குமுன்“சிரியா”என்ற (போரின் கொடுமைகளால் அந்த நாடு இன்று சிரியா (து) என்று பெயர் கொண்டதோ யாரறிவார்.?)நாட்டின்பால்கன்உதிர்த்தவார்த்தைகள் தான் “எல்லாவற்றையும் கடவுளிடம் சென்று சொல்லப்போகிறேன்”! அன்புள்ளங்களே, உங்கள் பிள்ளைகளின் முகங்களை ஒருகணம் மனதில் நிறுத்திக் கொண்டு நான்கே வயதான ஒரு பச்சை மண்ணின் வாயில் இருந்து வந்த அந்த வார்த்தையின் வலியை எண்ணிப்பாருங்கள்.
ஒரு சிறிய ஆணி, அல்லது முள் காலில் குத்தீ விட்டால், ஐயோ! என்கிறோம். வலிதாங்க முடியாமல்ஆ... அம்மாஎன்கிறோம்... அறுபது வயதுவரை இந்தவார்த்தைகள்தான். ஆனால் நான்கேவயதான ஓம்ரானின்அந்தவார்த்தைகள், இவ்வுலகில் மதங்களின் பெயரால், போர் மற்றும்அரசியல்கொடுமைகளைப்புரிவோரை வெட்கித் தலை குனிய வேண்டிய நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளன.

பரிதாபத்துக்குரிய பிஞ்சு மழலையின் தத்துவம் மனதை உருக்குகிறதே!

ஓம்ரான் தர்க்னீஸ் ஒரு உதாரண புருஷன். மழலை மொழிபேச வேண்டிய வயதில், மகத்தான தத்துவம் பேசிய மேதை, எத்தனை நவீனங்கள், அணுவாயுதங்கள், அதிசக்திவாய்ந்த போர்க்கருவிகள், விண்கலங்கள்மற்றும்போராயுதங்களைக்கொட்டித்தீர்த்தாலும், ஒருமழலையின் “ வலி ” என்ற பெறுமதியான வார்த்தைகளின் முன் அனைத்தும் செயலிழந்து விட்டன.
அந்தோ பரிதாபம்; சரியாக ஒன்பது வருடங்களுக்குமுன்னர் இதேஅவலம், எமதுதேசத்தின், எமது பிஞ்சுகளின் அவலக்குரல்களை, கண் முன்னே கண்டஅந்தக் கொடூரக் காட்சிகளை ஞாபகமூட்டுகின்றன.
“இப்பவோபின்னையோ, இரவுபடுநேரமதிலோ, அடுப்பிலோ தீயிலே”..என்று பட்டினத்தடிகள் எமது வாழ்வின் நிலையாமை குறித்துப் பாடிவைத்தார். வாழ்வு நிலையற்றது என்ற உண்மையை உணராது, அற்பகால போர் வெற்றிப் புகழுக்காக, ஏதுமறியாப் பிஞ்சுகளை துடிக்கத் துடிக்க வதைத்த கொடுமை இலங்கை மண்ணில்நடத்தப்பட்டபோது, மனச்சாட்சியற்றஇந்த உலகம் கண்மூடி இருந்த துயரம், இன்று சிரிய தேசத்திலும் தொடர்கதையாகித் தொடர்கிறது. வல்லரசுநாடுகள், தாம்கண்டுபிடித்த இரசாயன மற்றும்அதிசக்திமிகுஆயுதங்களைப்பரீட்சித்துப் பார்க்க ஈவிரக்கமின்றி “ஏன்பிறந்தோம் ; ஏன் இருக்கின்றோம்”என்றுகூடஅறியாதபிஞ்சுகளிடம் பரிசோதித்துத் தத்தமது ‘இறையாண்மை’ மற்றும்‘வல்லரசு’ போன்றபட்டங்களைத்தக்கவைத்துக்கொள்கின்றன.

கையாலாகாத பிறவிகளாக, அநியாயத்தின் சாட்சிகளாக நாம்

ஒருபுறம்கோபம்கட்டுக்கடங்காமலும், மறுபுறம் கண்ணீர்கட்டுக்கடங்காமலும், இந்தத் துயரங்களைக் கடந்து செல்லுவதைவிட, எம்மால் என்னதான்செய்துவிடஇயலும்?
இணையத்தளமூடான “சிரியா போர் அவலங்கள்”குறித்ததேடலில்”உலகில்முன்னணிபெற்றுள்ளவர்கள்ஈழத்தமிழர்கள்”என்பதிலிருந்து, வலியுற்றவரால்தான்வலிஅடைபவரதுஉணர்வுகளை உணர்ந்து கொள்ளமுடியும் என்ற உண்மையைத்தெளிவாகஉணரமுடிகிறது.
ஐ. எஸ் ஐ.எஸ் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுபட்டது சிரியா, என்ற மகிழ்வான செய்தி கேட்டபோது, மனம் ஆறுதல் பெற்றது. அந்தோ...பரிதாபம்.
அரசுக்குஎதிரானஆயுதக்குழுவும்அதற்கெதிராகப் போராடும் சிரிய அரசும் தம்மிடையேயான பகையைஇப்படிகுருதிகுடிக்கும்போராகத்தொடர்வது கவலைக்குரியது. அதை விடப் பரிதாபம், ரஷ்யா- அமெரிக்கா ஆகிய மிகப்பலம் வாய்ந்த நாடுகள்,எதிரெதிர்துருவங்களாகநின்றுபோரை ஊக்குவிப்பதுதான். ஏதுமறியாப் பிஞ்சுகளின் அவலக்குரலாவது வல்லரசுகளை இரக்கப்படச் செய்யட்டும் இறைவா!

பயன்தரவல்ல ஒற்றுமை கட்டியெழுப்பப்படல் அவசியம்

மொழிமூலம்: லாசிலி டி சில்வா (சிலோன் ருடே)
தமிழில்: ஆனந்த்

எங்கள்நாடும், எங்களதுநாடாளுமன்றமும்எந்த வகையிலும் முன்னோக்கி நகராமல், பின் னோக்கிப் பயணிப்பதை உணர முடிகிறது. இதற்கான காரணங்கள் இரண்டு. அதில்ஒன்று, நாடாளு மன்றத்துக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்தி, அதிக அளவிலான அதிகாரங்களை அரசதலைவருக்கு வழங் கியுள்ள நிறைவேற்று அதிகாரம் காரணமாக அரசதலை வர்நாடாளுமன்றத்தைத்தமதுபூரணகட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கமுடிவதாகும். நாடாளுமன்ற உறுப்பினர்க ளில் பலர் அரசியலைப்பற்றி அறிந்து கொள்வதிலோ, நாடாளுமன்றநடவடிக்கைகளைப்பற்றியவிவரங்களைத் தெரிந்து கொள்வதிலோ அக்கறை காட்டாமையும் நாடு பின்னோக்கிச்சென்றுகொண்டிருப்பதற்கான மற்றொரு காரணமாகும். நாடாளுமன்றத்துக்குத் தெரிவானதும், பெரும்பாலானஉறுப்பினர்கள்தாங்கள்தெரிவுசெய்யப் பட்டதன்நோக்கம்குறித்தோ, தெரிவுசெய்தமக்களின்அபி லாசைகள் குறித்தோ அல்லது நாட்டைப்பற்றியோ அல் லது நாட்டின் முன்னேற்றம் பற்றியோ சிந்திப்பதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியில் தாங்கள் பெறப்போகும் சலுகைகள், வாகன வசதிகள், வெளிநாட் டுப் பயணங்கள் போன்றவற்றைப் பற்றியே அவர்கள் சிந்திக்கத் தொடங்கி விடுகிறார்கள். 2015 இல் அதிகாரத் திற்குவந்தபுதிய அரசும்இதற்குவிதிவிலக்கல்ல. நாட்டில் கொலை, களவு, கற்பழிப்பு, போதைப்பொருள்பாவனை என்பவை கட்டுக்கடங்காமல் போவதற்கான காரணம், விரக்திஅடைந்த நிலையில்நாட்டின்இளையசமுதாயம் இருப்பதுதான்.

நாட்டின் இளைய சமுதாயம் விரக்தி நிலையில்

நாட்டின் இளைய சமுதாயத்தினர் விரக்தி நிலையில் இருப்பதற்கான மூலகாரணம். நாட்டின் இளைய சமுதா யத்தினருக்கு முறையான வழிகாட்டல்கள் இல்லை. இலங்கையில்43வீதத்தினரானநாட்டுமக்கள்வறுமைக் கோட்டுக்குக்கீழ்வாழ்பவர்களே. அரசியல்வாதிகளுக்கு இவை குறித்து அக்கறை காட்ட அவகாசமில்லை. அவர் களுக்கு வேண்டியதெல்லாம் தாங்கள் அதிகாரத்தில் இருக்க வேண்டும்; அதற்காக இனவாதம், மதவாதம் என்றுஎதையாவதுதூண்டிவிட்டுஅந்தநெருப்பில்குளிர் காயவேண்டும்என்பதுதான். அரசியல்வாதிகள்எங்கள் தேவைகளுக்காக பிற நாடுகளை நம்பியிருக்காமல் இலங்கையை தன்னிறைவுள்ள நாடாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டியது அவசிய மாகும். நாடாளுமன்றத்தினூடான ஆட்சி அதிகாரத்தை அரசியல்வாதிகளுக்கு வழங்குபவர்கள் நாட்டின் பொது மக்கள்தான். அவ்விதம்மக்களால்தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்றஉறுப்பினர்கள், மக்களின்தேவைகளை நிறைவேற்றாமல் போய்விட்டால் அடுத்த தடவை அவர் களைப் பதவியிலிருந்து அகற்ற பொதுமக்கள் பின்னிற்கமாட்டார்கள். அதைச்செய்யப்போவதும்நாட் டின் பொது மக்கள்தான். கடந்த கால தேர்தல் முடிவுகள் இதற்கான சிறந்த உதாரணமாகும். பொதுமக்கள் அரசி யல்விவகாரங்களில்கூடுதல்ஈடுபாட்டுடன்பங்குகொள்ள வாய்ப்பமைத்துக்கொடுப்பதும், அரசநிர்வாகச்செயற்பா டுகளைப் பொதுமக்களுக்கு பூரணமாக, வெளிப்படை யாக தெரிந்துகொள்ளவசதிசெய்துகொடுப்பதும்அரசின் கடமையாகும்.

> பொதுமக்கள் அரசியல்விவகாரங்களில் கூடுதல் ஈடுபாட்டுடன் பங்கு கொள்ள வாய்ப்ப மைத்துக்கொடுப்பதும், அரசநிர்வாகச்செயற் பாடுகளைப் பொதுமக்களுக்கு பூரணமாக, வெளிப்படையாக தெரிந்துகொள்ள வசதி செய்து கொடுப்பதும் அரசின் கடமையாகும்.

அரசியல்வாதிகளின் செல்வாக்கு

நாட்டின்நிர்வாகத்தில்ஆதிக்கம்செலுத்தும். அரசியல்வா திகளின் செல்வாக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்க ளில்ஆதிக்கம்செலுத்துவதால், இவர்களால்நியமிக்கப்ப டும் ஊழியர்கள் அளவுக்கதிகமான, தேவைக்கு மேலதி கமான ஊழியர்களாக நியமிக்கப்பட்டு, அரச அலுவல்க ளும், தனியார் நிறுவனங்களும் ஊழியர்களால் நிரம்பி வழிகின்றன.

அத்துடன் தகுதியில்லாத பதவி உயர்வுகள் அங்குள்ள நிர்வாகத்திலும்சீர்கேடுகளைவிளைவிக்கின்றன. தகுதி யில்லாதவர்கள்தலைமைத்துவப்பதவிகளில்இருப்பின், தலைமைத்துவத்தில் இருக்க தகுதியானவர்களால் சரி யான நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல இயலாமல் போகிறது. இலஞ்சமும் ஊழலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சிற்றூழியர் தொடங்கி உயரதிகாரிகள் வரை பரந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இன்றையஇளைஞர்கள்மத்தியில்தத்தமதுதகுதிக்கேற்ற சரியானதொழில்இல்லாமையினால்ஏற்படும்வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி என்பவையே இளைய சமுகத்தினரைத் தவறான வழிகளில் இட்டுச் செல்கின்றன. சிலர் குறுக்கு வழியில்பணம்தேடுவதற்காகசகலவிதமானசட்டவிரோ தச்செயற்பாடுகளில்ஈடுபடுவதையும்காணக்கூடியதாக இருக்கின்றது.

நாட்டின் முதலாவது அமைச்சராக இருந்த சி. டபிள்யூ. டபிள்யூகன்னங்கராஇலங்கைமக்களுக்களித்தகொடை தான் இலவசக் கல்வி. இன்று நாட்டிலிருக்கும் அநேக மான கல்விமான்கள், தொழில் சார் நிபுணர்கள் பலர் இலவசக் கல்வியின் காரணமாக கல்வியில் சிறப்புற்ற வர்களே. கலாநிதிகன்னங்கராவின்கல்விப்புலம்குறித்த தொலைநோக்கு, சாதி, மத, இனம், ஏழை, பணக்காரன் என்றஎந்தப்பாரபட்சமும்கருதாதுசகலருக்கும்இலவசக் கல்வியென்ற பெருவாய்ப்பை உருவாக்கிய அவரை இந்தநாட்டின்கல்வியின்தந்தை"எனக்கொள்வதில்தவ றேதும்கிடையாது.

நாட்டின் இன்றைய முக்கிய தேவை நல்லதொரு தலைமைத்துவமே.

இப்பொழுதுஎங்கள்நாட்டுக்குத்தேவைநல்லதொருஅர சியல் தலைமைத்துவம். உண்மையான, நேர்மை யான, தலைவர்கள், நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படக் கூடிய செயல்வீரர்கள். பொது நலம் நாடும் தியாகிகள். இப்படிக்கூறிக்கொண்டேபோகலாம். ஆனால் இப்படிப்பட்ட குணாதிசயங்கள் கொண்ட அரசியல்வாதி களை இன்றைய நிலையில் தேடிப்பிடிப்பது கடினமா னதே. சாதி வேறுபாடு, மத வேறுபாடு, இன வேறுபாடு என்ற எந்த வேறுபாடுமே இல்லாத ஒரு இலங்கையை உருவாக்க, இந்த நாட்டின் இனங்கள் மத்தியிலான பிரச் சினைகளுக்கான அரசியல் தீர்வை பெற்றுத்தரவல்ல அர்ப்பணிப்புஉணர்வுள்ளஅரசியல்தலைமைத்துவமே நாட்டின்இன்றையஅவசரதேவையாகும். இந்தநாட்டின் சகல இனங்களைச் சேர்ந்தவர்களும் சம உரிமைகள், சமவாய்ப்புக்களுடன்வாழத்தக்கநிலைஉருவாக்கப்பட வேண்டும். இனங்கள்மத்தியிலானவேறுபாடுகள்களை யப்பட்டு, ஆரோக்கியமானதொரு நாடாக எமது நாடு கட் டியெழுப்பப்பட வேண்டும்.

ஆசிரியருக்கான கடிதம்

வரும்; ஆனால் வராது

தமிழ்த்திரைப்படமொன்றில்நடிகர்வடிவேலுசம்பந்தப்படும்நகைச்சுவைக்காட்சியொன் றில்வரும்வார்த்தைகள்"வரும்; ஆனாவராது"என்பதாகும்.

யாழ்.பஸ்நிலையத்திலிருந்து764வழித்தடச்சேவையில்புன்னாலைக்கட்டுவன், வசா விளான்வரை இரவு8மணிக்குப்புறப்படும்விதத்திலான பஸ்சேவை அடிக்கடி, மாதத்தில் ஏறக்குறைய ஐந்தாறு நாள்களாவது தடைப்படுவது வழக்கமாகியுள்ளது. இயந்திரக்கோ ளாறு மற்றும் வேறேதும் காரணங்களால் அவ்விதம் சேவை தடைப்படுவதை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ள இயலும்.

ஆனால் அவ்விதம் சேவை தடைப்படும் நாள்களில், அது குறித்து யாழ். பஸ் நிலைய வளா கத்தில்அமைந்துள்ளஇ.போ.ச.வின்சேவைஒழுங்குபடுத்தல்அலுவலகத்தில்விசாரித்தால் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் கூறும் பதிலுக்கும், மேற்குறிப்பிட்ட திரைப்பட நகைச்சுவைக்காட்சிக்கும்நிறையவேஒற்றுமையுண்டு. 8மணிக்குநடத்தப்படவேண்டிய சேவை தடைப்பட்டால் பயணிகள் 8.40 வரை, ஏறக்குறைய ஒரு மணிநேரம் காத்திருக்க நேரிடுகிறது. வர்த்தக நிலையங்களில் வேலைசெய்யும் இளைஞர்கள், யுவதிகள் உட்பட பல்வேறுதரப்பினர்கள் குறித்த பஸ் சேவை தடைப்படுவதால் பல்வேறு சிரமங்களுக்கும், அனாவசிய தாமதத்துக்கும் உள்ளாக நேர்கிறது.

8மணிக்கானபஸ்சேவைதடைப்படும்வேளைகளில்அதுகுறித்துசேவைஒழுங்குபடுத்தல் அலுவலகத்தில், கடமையிலிருக்கும் ஊழியர்களை விசாரித்தால் வேண்டாவெறுப்பாக 'பஸ்பிறேக்டவுண்'என்றுபதிலளிக்கின்றனர். 8.40மணிக்கும்கூடபஸ்குறித்ததரிப்பிடத் தில் நிறுத்தி வைக்கப்படாதிருந்தால் மீண்டும் சென்று அது குறித்து விசாரித்தால்: "வவுனி யாவிலிருந்து பஸ் வந்து கொண்டிருக்கிறது. அதனைத்தான் குறித்த வழித்தடத்தில் விடப் போகிறோம்" என்பார்கள்.

மீண்டும்ஏதோஇழுத்துப்பறித்துஒருபஸ்ஸைஅனுப்பினாலும், அதனைக்கோண்டாவில் சாலையில் கையளித்து, வேறு பஸ்ஸொன்றைப் பெற்றே பஸ் சாரதியும் நடத்துநரும் பய ணிகளைத்தொடர்ந்துஅழைத்துச்செல்லநேரிடுகிறது. இதனால்பஸ்சாரதிமற்றும்நடத்து நருடன் பயணிகள் முரண்படவும் வாக்குவாதப் படவும் நேர்கிறது.

'எய்தவன் இருக்க அம்பை நோவானேன்' என்பது போன்று குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியபொறுப்பானமேலதிகாரிகள்பயணிகளதுசிரமம்குறித்துஅலட்டிக்கொள் ளாமல்அலட்சியப்போக்குடன்செயற்படும்நிலையில், ஏனைய இடைநிலை ஊழியர்களு டன் முரண்படுவதில் அர்த்தமேதும் கிடையாது. இந்த விடயம் தொடர்பாக உரிய தரப்பினர்களுக்குப்பலதடவைகள்தெரியப்படுத்தியும்இதுவரைஎதுவிததீர்வும்கிட்டாமை கவலைக்குரியதே.

ப.நடராசா, ஊரெழு

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். ஆதாயம் உயரும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

இடபம்: மனம், செயலில் புத்துணர்வு பிறக்கும். புதியவர்களின் நட்பால் நன்மை கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணவரவு திருப்தியளிக்கும்.

மிதுனம்: செயல்களில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழிலில் இலக்கு நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும். இலாபம் சுமார்.

கடகம்: உறவினர் சிலர் உதவி கேட்டு அணுகுவர். தொழிலில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம். சேமிப்புப் பணம் திடீர் செலவால் கரையும்.

சிங்கம்: மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் நற்செயலை மனமுவந்து பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும்.

கன்னி: மனக்குறையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள்

துலாம்: உதவும் மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை நடைமுறையில் இருந்த குளறுபடி சரியாகும். தாராள இலாபம் கிடைக்கும்.

விருச்சிகம்: செயலில் தடுமாற்றம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். உறவினர் வகையில் அதிக பணம் செலவு செய்ய நேரிடலாம்.

தனுசு: முன்னர் செய்த உதவிக்கான நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். லாபம் திருப்திகரமாக இருக்கும்.

மகரம்: பேச்சில் அன்பும், பண்பும் கலந்திருக்கும். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும்.

கும்பம்: திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. சராசரி பணவரவு கிடைக்கும்.

மீனம்: மனதில் குழப்பமான சூழ்நிலை ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை புதிய நம்பிக்கை தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க மாற்று உபாயம் செய்வீர்கள்.

எதிர்காலம் பற்றி நிச்சயமாக
எதுவும் தெரியாத எமக்கு
நிதர்சனமாக தெரிந்த
ஓர் உண்மை...

சாவு

அது எப்போது எப்படி வரும்
என்பது தெரியாததாலேயே...

தெரிந்த ஓர் உண்மையை மறந்து
தெரியாத பல விடயங்களுக்காக
வாழ்க்கையைத்
தொலைக்கிறோம்...!!

வடசென்னை போஸ்டர் நாளை வெளிவரும்

வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஸ், ஐஸ்வர்யா ராஜேஸ், ஆண்ட்ரியா நடிப்பில் வடசென்னை படத்தின் முதலாவது சுவரொட்டி பன்னாட்டு மகளிர் தினமான மார்ச் 8ஆம் திகதி (நாளை) வெளிவரும் என்று படக்குழு அறிவித்துள்ளது. படப்பிடிப்புப் பணிகள் முடிவடைந்து செம்மைப் படுத்தல் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. படத்தை எதிர்வரும் ஜூன் மாதம் திரைக்கு விடுவதற்கு படக்குழு திட்டமிட்டுள்ளது. படத்தின் முன்னோட்டக் காணொலி, சுவரொட்டிகள் என்பவை அடுத்தடுத்து வெளி வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் எதிர்வரும் எட்டாம் திகதி முதலாவது சுவரொட்டி உத்தியோகபூர்வமாக வெளிவரும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

சுடோக்கு
எண் விளையாட்டு

	2	1				7	4	
3								6
8				6				1
			8		2			
		9	7			1		
			1		4			
9				7				3
5								4
	8	7				2	5	

1	2	8	7	9	6	3	5	4
4	6	3	8	5	1	2	7	9
5	7	9	3	4	2	6	1	8
8	3	1	2	6	5	4	9	7
9	5	6	4	3	7	8	2	1
7	4	2	9	1	8	5	3	6
2	8	5	1	7	4	9	6	3
6	9	7	5	8	3	1	4	2

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

அரசன் அன்று கொல்வான்
தெய்வம் நின்று கொல்லும்

பொண்டாட்டி திட்டியே
கொல்லுவாள்....

நேற்று என்பது
உடைந்த பானை

நாளை என்பது
மதில் மேல் பூனை

இன்று என்பதே
கையில் உள்ள வீணை

நண்பர்களுடன் பகிர்ந்து உண்ணும் பழக்கத்தை விட, பிடுங்கி உண்ணும் பழக்கமே அதிகம் இருக்கும்!!

ஔவையாரின் உயிர் வரிகள்

அறம் செய்ய விரும்பு

நீ தருமத்தைச் (கடமையை) செய்ய ஆவல் கொள்.

ஆறுவது சினம்

கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.

இயல்வது கரவேல்

உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க. ளுக்கு ஒளிக்காது கொடு.

ஈவது விலக்கேல்

ஒருவர், மற்றவர்க்கு கொடுப்பதை, வேண்டா மென்று தடுக்காதே

உடையது விளம்பேல்

உன்னிடத்திலுள்ள பொருளை அல்லது இரகசியங்களை பிறர் அறியுமாறு சொல்லாதே.

ஊக்கமது கைவிடேல்

எப்போதும் முயற்சியைக் கைவிடக்கூடாது.

எண் எழுத்து இகழேல்

எண்ணும் எழுத்தும் மக்களுக்கு இன்றியமை யாதன; ஆகவே, அவற்றை வீணென்று இகழ்ந்து கற்காமல் விட்டு விடாதே.

ஏற்பது இகழ்ச்சி

இரந்து வாழ்வது இழிவானது. அதனால் யாசிக்கக் கூடாது.

ஐயம் இட்டு உண்

யாசிப்பவர்களுக்கு கொடுத்து பிறகு உண்ண வேண்டும்.

ஒப்புரவு ஒழுகு

உலக நடையை அறிந்து கொண்டு, அத்தோடு பொருந்துமாறு நடந்துகொள்.

ஓதுவது ஒழியேல்

நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக்கொண்டிரு.

ஔவியம் பேசேல்

ஒருவரிடமும் பொறாமை கொண்டு பேசாதே.

உதயன்
புதன் பொய்கை
மார்ச் 07 2018
Uthayan Print newuthayan.com @UthayanPrint

இரா. நிசாந்தன்

இராமாயணமும் கந்தபுராணமும்

தமிழ் இலக்கியங்களில் இரு பெரும் காப்பியங்களில் இராமாயணமும், கந்தபுராணமும் சிறப்புடையனவாக அமைவுறுகின்றன. ஒப்பீட்டளவில் இராமாயணமும், கந்தபுராணமும் தம்மிடையயே பல ஒற்றுமைகளைக் கொண்டிருக்கின்றன. இரண்டு இலக்கியங்களிலும் இழையோடும் கதாபாத்திரங்களை சுற்றிவரும் கதைகளும் நெருங்கிய ஒத்த தன்மைகளை வெளிக்காட்டி நிற்கின்றன. இராமாயணமும், கந்தபுராணமும் காண்டம், படலம் என அமைப்பு ரீதியில் ஒன்று படுகின்றன. மேலும், சமயம் சார்ந்த கதை அமைப்புடன் இறை உணர்வினை வாசகரிடையே ஊடுறுத்துவனவாக அமைகின்றன. ஆகவே இவ்விரு இலக்கியங்களிலும் அமைவுறும் ஒத்த இயல்புடைய தன்மைகள் பற்றி நோக்குதல் சிறப்புடையதாகும்.

தேவர்களின் துன்பம் போக்கும் அவதாரங்கள்

இராமாயணத்தில், இராவணன் கொடுமைகளால் துயரமடைந்த தேவர்களின் துன்பம் போக்க இராமபிரான் அவதரித்தார். அது போல கந்தபுராணத்தில் சூரனால் துயரமடைந்த தேவர்களின் துன்பம் போக்க, முருகன் அவதாரம் செய்தார். ஆக, இராமாயணத்தின் காப்பிய தலைவனாக இராமனும், கந்தபுராணத்தின் காப்பிய தலைவனாக முருகனும் அமைவுறுகின்றனர். இருவரும், அசுரர்களிடம் இருந்து தேவர்களை காப்பதற்காக அவதரித்தனர் என்பது இங்கு தெளிவுறுகிறது.



இராமாயணத்தில் வருகின்ற இராமனின் எதிரி இராவணன். அந்த இராவணன் மிகச் சிறந்த சிவ பக்தன். அவனுக்கு கும்பகர்ணன், விபீஸணன் எனும் தம்பியரும், சூர்ப்பனகை எனும் தங்கையும் குறிப்பிடப்படுகின்றனர். அது போல கந்தபுராணத்தில் வரும் முருகனின் எதிரி சூரபத்மன். அந்த சூரபத்மனும் சிவனது தீவிர பக்தன். அவனுக்கு சிங்கமுகாசூரன், தாராகசூரன் ஆகிய தம்பியரும், அசமுகி எனும் தங்கையும் இருந்துள்ள செய்தி இவ்விரு இலக்கியங்களிலும் உரைக்கப்பட்டுள்ளது.

போர்களில் ஒற்றுமைகள்

இராமாயணத்தில், இராவணனால் சிறை வைக்கப்பட்ட சீதையை சிறை மீட்க போர் செய்ய வேண்டி ஏற்பட்டது. அது போல கந்தபுராணத்தில், சூரனால் சிறை வைக்கப்பட்ட சயந்தன் முதலிய தேவர்களை விடுவிப்பதற்கு போர் செய்ய வேண்டியதாயிற்று. இத்துடன், இராவணனுடன் போர் செய்யும் போது இராமபிரானுக்கு துணையாக அவனது தம்பி இலக்குவனன் உடனிருந்தான். அது போல முருகன் சூரனோடு போர் செய்ய அவனுக்குத் துணையாக அவனது தம்பி வீரபாகு தேவர் உடன் இருந்தான். அது மட்டுமன்றி, இராமபிரான் அசுரர்களோடு போர் புரியும் போது அவருக்கு வானர சேனையானது பெரும் துணையாக இருந்தது. அது போல முருகன் அசுரர்களோடு போர் செய்யும் போது தேவசேனை, மற்றும் பூத கனங்களும் அவருக்குத் துணையாக இருந்தன. இராமாயணத்தில், இராவணனுக்கு இந்திரஜித் எனும் வீரம் மிகுந்த மகன் ஒருவன் இருந்துள்ளான். இராவணனின் பெரு நம்பிக்கைக்குரியவனாக அவன் விளங்கினான். சிறு வயதிலேயே இந்திரனையே வென்று, மேகநாதன் எனும் நாமகரணமும் பெற்றவன். கந்தபுராணத்தில், சூரனுக்கு பானுகோபன் எனும் பராக்கிரமம் பொருந்திய ஒரு மகன் இருந்துள்ளான். அவனும் சூரனின் அன்பிற்கு உரியவனாக விளங்கியவன். அவனும் தன் சிறு வயதில் சூரியனையே சிறைப் பிடித்து பானு கோபன் எனும் நாமத்தையும் பெற்றுக் கொண்டான்.

தூதில் ஒற்றுமைகள்

இராமாயணத்தில் போர் தொடங்குவதற்கு முன்பு சமாதான முயற்சிக்காக அங்கதன் இலங்கைக்குத் தூது செல்கின்றான். இராவணன் முன்பு வீர வசனம் உரைத்து திரும்பி வருகின்றான். அது போல கந்தபுராணத்தில், போருக்கு முன்பாக வீரபாகு தேவர் வீரமகேந்திர புரிக்கு தூது செல்கின்றார்.

> **இராமாயணத்தில், இராவணனால் சிறை வைக்கப்பட்ட சீதையை சிறை மீட்கப் போர் செய்ய வேண்டி ஏற்பட்டது. அது போல கந்த புராணத்தில், சூரனால் சிறை வைக்கப்பட்ட சயந்தன் முதலிய தேவர்களை விடுவிப்ப தற்காகப் போர் செய்ய வேண்டியதாயிற்று.**

அங்கு சூரனின் முன்பாக முருகன் பற்றிய வீரவார்த்தைகள் பல உரைத்து திரும்பி வருகின்றான். இராமாயணத்தில் போர் நிகழ்வதற்கு காரணமாக இராவணன் தங்கையான சூர்ப்பனகை விளங்குகின்றாள். இராவணனிடம் சீதையைப் பற்றி உரைத்து அவன் மனதில் ஆசையை வளர்த்து சீதையை திருமணம் செய்யத் தூண்டி விடுகின் றாள். அதன் படி இராவணனும், சீதையை கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறை வைத்தான். அது போல கந்தபுராணத்தில் சூரனின் தங்கையான அசமுகி இந்திரன் மனைவி இந்திராணியை திருமணம் செய்யும் படி சூரனைத் தூண்டுகின்றாள். சூரனும் இந்திராணியைத் தேடிச் செல்லும் போது இந்திராணி ஒளிந்து கொண்டமையால் அவள் மகன் சயந்தனை கவர்ந்து வீரமகேந்திர புரியில் சிறை வைத்தான்.

பொன்மொழி

ஒரு கலைஞன் எப்பொழுது மற்றொரு கலைஞனை பாராட்ட மறுக்கிறானோ அப்பொழுதே அவன் கலைஞன் எனும் தகுதியை இழக்கிறான்.

விபீஸணன், சிங்கமுகன் இடையேயுள்ள ஒற்றுமை

இராமாயணத்தில் வரும் விபீஸணன் தர்ம வழி அறிந்தவன். தன் அண்ணன் புரியும் தவறுகளை சுட்டிக் காட்டி அவனைத் தடுக்க முற்பட்டவன். அது போல கந்தபுராணத்தில் வரும் சிங்கமுகனும் தர்ம மார்க்கம் அறிந்தவன், தன் அண்ணனுக்கும் நல் வழி புகட்டியவன். ஆனால் இவ்விருவரின் முயற்சிகளும் இறுதியில் தோல்வியில் முடிகின்றன.

இராவணன் இராமபிரானின் அம்புபட்டு இறக்கும் தறுவாயில் ஞானம் வரப் பெற்றவனாய் தன் தவறுகளை எண்ணிப் பார்த்து, இராமபிரானை வணங்கி மடிகின்றான். அது போல சூரனும் முருகனது வேலால் தன் உடல் இருகூறாக பிரிந்தது, அப்போது தான் செய்த தவறுகளை எண்ணி முருகனிடம் முக்தி வேண்டி வணங்குகின்றான். அத்துடன், இராவணன் சாவடைந்த செய்தி அறிந்த அவன் மனைவி, மண்டோதரி அழுது புலம்பி தன் கணவன் உடலுடன் உடன்கட்டை ஏறுகின்றாள். அது போலவே, சூரபத்மன் இரு கூறாக உடல் பிளக்கப் பட்டதுகண்டுஅவன்மனைவி பதுமகோமளையும், அழுது தானும் தன் உயிரை மாய்த்துக் கொள்கின்றாள்.

கேகசி, சுரசையினது அறிவுரைகள்

இராமாயணத்தில் இராவணன் தன் முன் இராமனாக வந்திருப்பது பகவான் விஸ்ணுவே என அறிந்திருந்தாலும் தான் கொண்ட ஆணவம் எனும் நிலையில் இருந்து மாறாது இராமனை சாதாரண மானிடனாக கருதி எதிர்த்தான். அது போல சூரபத்மனும், தன் முன் வந்திருப்பது சிவனின் அம்சமான முருகன் என்பதை அறிந்தும், அவனை சிறுவனாகவே கருதி அவனுடன் போர் செய்யத் துணிந்தான்.

இராமாயணத்தில் இராவணனுக்கு அவன் தாய் கேகசி என்பவள் துணையாக பல அறிவுரைகளைக் கூறி உடனிருக்கின்றாள். அது போல கந்தபுராணத்தில் சூரனுக்குத் துணையாக அவன் தாய் சுரசை எனும் மாயை உடனிருந்து அறிவுரைகள் கூறினாள்.

இவ்வாறாக, இவ்விரு காப்பியங்களில் இழையோடும், கதையமைப்பானது எண்ணற்ற ஒத்த இயல்புக்ளை தம்மிடையே கொண்டுள்ளன. சமயம் சார்ந்த இவ்விரு காப்பியங்களும், தமிலோடும் சேர்ந்து நயம் நிறைந்தனவாக அனைவராலும் படித்து இன்புறத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன என்றால் மிகையில்லை.

ஒத்த இயல்புடைய கருத்துக்கள் இழையோடும் காப்பியங்கள்

நூல் பற்றிய ஆய்வு

யதார்த்த அரசியலின் பலவீனத்தை சுட்டிக்காட்டும் அரசியல் ஆய்வு நூல்

எல்லோரும் படிக்க வேண்டியது

சாம்பசிவம் ஹரிகரன்

அரசியலாய்வாளர்மு.திருநாவுக்கரசுஎழுதியபூகோளவாதமும்புதுதேசியவாதமும்என்றநூல்பற்றிய பரந்துபட்ட ஆய்வுகாலத்தின்தேவையாக அமைகின்றது. இந்த நூலின் அமைப்பியலில் இது கோட்பாட்டு நூலா, யதார்த்த நூலா, வரலாற்றரசியல் நூலா என்ற வாதப்பிரதிவாதங்களுக்கானபதிலைஇந்தநூலினைபகுத்துஇதன் விடயதானங்களை விளக்கிய பின்னரே பொதுமுடிவுக்கு வரமுடியும்.

இந்த நூலானது பூகோளம் அதனூடான மக்கள் சமூகத்தின் இயக்கம் அரசுகளின் உருவாக்கம் அந்த அரசு உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய விடயங்கள் என தொடங்கி பூகோளவாதம், சர்வதேசியவாதம், தேசியவாதம், அதிகாரவர்க்கப் போராட்டம், நவதேசியவாதம் என்பவற்றினூடான பாதையில் நூல் வேகமாக நகர்கின்றது. உலக வரலாற்று அரசியல் போக்குகளை உசாத்துணையாகசான்றாதாரப்படுத்திக்கொண்டும்கோட்பாட்டியல்சார் முறைமைகளைகோட்பாட்டியல்சொற்களைவரைவிலக்கணப்படுத்திக்கொண்டும்அதுஒருகட்டமைக்காதபெரிய வெளிப்பரப்புநோக்கிவேகமாகப்பயணிக்கின்றது. இந்த ஆய்வுமுறையியல்இந்தநூலாசிரியருக்குரியஒருசிறப்புப் பாணிஎனஎடுத்துக்கொள்ளவும்முடிகின்றது.

இந்தமுறையின்ஊடாகதேசியவாதவளர்ச்சிகோட்பாட்டு முறைமையின்தற்கால அரசுகளின் நிலை, அரசியலின் பரிணாமவளர்ச்சிஆகியவற்றினையும்ஆய்வாளர்அணுகத்தவறவில்லை. சுமார் 12 அத்தியாயங்களை கொண்ட நூலானதுஉலகின்சவால்மிகுந்தவரலாற்றுப்பக்கங்களை தொட்டுச் செல்வதையும் காண முடிகின்றது. கார்ல்மார்க்ஸ் முன்வைத்த அரசற்ற சமூகத்தின் தோற்றத்தில் இருந்து இன்றைய மோதல் முகாமைத்துவ அரசுகள் வரை அதில் தாக்கத்தைஏற்படுத்தும்பன்னாட்டுஅரசியல்தாக்கங்கள் வரை இந்த நூல் விளக்கிச் செல்கிறது.

நூலின் தன்னிலை விளக்கம்

இந்த நூல் ஆரம்பத்திலேயே தன்னிலை சார்ந்த விளக்கத்தை முன்வைக்கின்றது. தனிமனிதனின் வரலாற்று பாத்திரம், வரலாற்றுநிகழ்வின்தாக்கம்என்பவற்றைஇந்த நூல் கவனத்தில் எடுக்கத் தவறவில்லை. ஒரு நிகழ்வின் வசிகரத்தினாலன்றி அந்த நிகழ்வு ஏற்படுத்திய தாக்கம் பற்றியவிளைவுகளாலேயேஅந்தநிகழ்வுஎடைபோடப்பட வேண்டும்என்பதைவலியுறுத்துவதாகஆரம்பத்திலேயே நூல் ஆசிரியர் முன்வைக்கின்றார். அத்தோடு மாத்திரம் நின்றுவிடாமல் இந்த நூல் சமகால நெருக்கடிகளுக்கு அமைய சில விட்டுகொடுப்புகளூடான ஆய்வை மேற் கொள்ளுவதாக நூலாசிரியர் இடையில் வெளியிட்டிருப் பது அவரின் ஆய்வில் பலவீனமான நிலையை நூலை வாசிப்பவர்களிடம் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் எந்த தாக்கமும்அற்றஎதிர்விளைவுகளைசரியாகஅனுமானிக் கின்ற ஒரு நேர்கோட்டு ஆய்வு முறையியல் இந்த நூலில் இருப்பதுமறுப்பதற்கல்ல. ஆனால்சில இடங்களில்ஏற்ற இறக்கங்கள் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின் றது. தேசிய இனப்பிரச்சினைகளும் இனத்துவம் சார்ந்த பண்பாட்டு அழிவுகளையும் சந்திக்கின்ற ஒரு தேசிய இன மானது பன்னாட்டு பூகோள அரசியல் தொடர்பில் தெளி வைப்பெற்று அந்தப்பூகோளஅரசியலூடாகதனக்குரிய பாதையை வடிவமைத்து கொள்ள வேண்டிய அறிவியல் சார் முன்னெடுப்பு அவசியம்என இந்த நூல் வலியுறுத்து கின்றது. இந்த விடயம் தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களை ஓரளவுக்குத் தெளிவுபடுத்து கின்றது.

ஆரம்பஅத்தியாயங்களில்சமஸ்டியின்தோற்றம்வளர்ச்சி பற்றி தன்னுடைய செறிவு மிகுந்த பார்வையை செலுத்தி விட்டு, ஒரு நூற்றாண்டு காலமாக இப்போது தமிழினம் கோரும்சமஸ்டிக்கானசந்தர்ப்பசூழலை அன்றேபயன்ப டுத்தியிருந்தால்இலங்கையின்மோதல்முகாமைத்துவம் வெற்றிகொள்ளப்பட்டு சுய நிர்ணய உரிமை அங்கீகாரத் துடன் சமஸ்டி அதிகாரம் வழங்கப்பட்டு அது தீர்க்கப்பட்டி ருக்கும். ஆனால் அதை தமிழ் தலைமைகள் பூகோள ராஜதந்திர அரசியல் பற்றிய அணுகுமுறை அற்றதால் கைவிட்டன என நூல் கூறுகின்றது. எனினும் அதனை வரலாற்று தவறுகள் என்பதை சில சந்தர்ப்பங்களில் ஏற் றுக்கொள்ளமுடியாது.தமிழ்தலைமைகள்அந்தக்கோரிக் கையை நிராகரித்தனவா, அதனை வலியுறுத்தாது விட் டதை தவிர அதனைக் கையாளக்கூடிய சந்தர்ப்பங்கள் அவர்களுக்குஇருந்தனவாஎன்றநுண்ணரசியல்இந்த நூல் வெளிப்படுத்தத் தவறிவிட்டது எனவும் கூறலாம்.

நூலின் உள்ளடக்கப் பெறுமதி

இந்தவிமர்சனங்கள்நீண்டாலும்பூகோளசித்தாந்தத்தின் ஊடாகவும் வரலாற்று அரசியல் பார்வைக்கூடாகவும் அனைத்துவரலாற்றுச்சம்பவங்களையும்கோட்பாடுகள் நியமங்கள் ஆய்வு முறையியல்கள் ஊடாக யதார்த்த சம் பவங்களைஆய்வுக்குட்படுத்தும்முறைக்கூடாகவும்இந்த நூலின் பெறுமதி அளப்பரியது. வரலாற்றுச் சம்பவங்க ளைத் தொகுத்து உலகின் அரசறிவியல் வரலாற்றியல் என்பவற்றை நூலின் உள்ளீர்ப்பாக எடுத்து அதனை உரைகல்லாக கொண்டு புதிய ஆய்வு வழிகாட்டு நூலை முன்வைத்திருப்பது ஆய்வாளரின் வெற்றியே எனலாம். குறிப்பாக வரலாற்றுத் தோல்விகளில் இருந்துபாடங்க ளைக் கற்பதன் ஊடாக பூகோள அரசியலில் ஒரு தெளி வைக் கொண்ட தலைமையின் ஊடாக அரசியல் முன்ன கர்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என இந்த நூல் கூறு வது வரவேற்கப்பட வேண்டியதே. எமது இனத்தின் பலவீ னமான பக்கமான பூகோள ராஜதந்திரம், பன்னாட்டு அதிகார விரிவாக்கங்கள், பன்னாட்டுச் சமூகத்தின் மூலோ பாயதிட்டமிடல்கள்ஆகியவற்றின்நாடித்துடிப்பைசரியாக இனங்காணும் ஒரு ஆய்வுக்குமுவின் வரவை நூல் ஆசி ரியர் தனது வேணவாவாக எதிர்பார்க்கின்றார்.

வரலாற்றுச் சம்பவங்கள் அதனூடாக அவரால் அடையா ளப்படுத்தப்படும் பின்னடைவுகள் மற்றும் ஆய்வு முறை கள் கோட்பாடுகளை தனது நூலில் ஆசிரியர் பிரதியிடும் பாங்கு, வரலாற்று ஆய்வு நூலாக அமையுமா கோட்பாட் டியல் நூலாக அமையுமா இரண்டும் கலந்த ஆய்வு நூலாக அமையுமா என்ற கேள்வியை எழுப்புகின்றன. மொத்தத்தில் இந்த நூலை பகுத்து நோக்குகைகையில் இதன் கோட்பாட்டியல் அணுகுமுறை ஆய்வியல் முறைமை என்பவற்றை நோக்குகையில் இது யதார்த்த அரசியலின் பலவீனப்பக்கங்களையும் வழி காட்டுதல்க ளையும் வழங்குகின்ற யதார்த்த நூலாகவும் கொள்ளமு டியும்.

3 நூல்களின் வெளியீடு

வலி. தெற்கு பிரதேச கலாசாரப் பேரவை, உடுவில் பிரதேச செயலகம் என்பவற்றின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட 3 நூல்கள், உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டன.

பிரதேச நிலவரை (டிவிசனல் அட்லஸ்) நூல் பிரதேசத்தினுடைய பல்பயன்பாட்டுவிடயங்களை உள்ளடக்கியதாகவும், கலைஞர் விபரத்திரட்டு தொகுதி1 72 கலைஞர்களுடைய விவரணங்களை உள்ளடக்கியும், கலைநிலம் தொகுதி2 பிரதேசத்திலேவெளியிடப்பட்டஆவணங்கள்சம்பந்தமான தாகவும் வெளியிடப்பட்டது. வடக்கு மாகாண பண்பாட்டலு வல்கள்திணைக்களத்தின்அனுசரணையுடன்நடந்தஇந்த நிகழ்வுஉடுவில்பிரதேசசெயலரும், கலாசாரப்பேரவையின் தலைவருமான மதுமதி வசந்தகுமார் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக கோப் பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை முன்னாள் விரிவுரையா ளர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் மாலினி கிருஷ் ணானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்புற இடம்பெற்ற கைப்பொருள் கண்காட்சிகள்

தனுஸ்ரன்

மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக மகளீர் அபிவிருத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கைப்பொருள் கண்காட்சி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்திலும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் கண்காட்சி பழைய செயலக கட்டடத் தொகுதியிலும் அண்மையில் இடம்பெற்றன.

பெண்களின் சுயதொழில் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஆடை வடிவமைத்தல், கைவேலை, அழகுக்கலை, மனைப்பொருளியல் ஆகிய வேலைப் பாடுகளை உள்ளடக்கியதாக இந்தக் கண்காட்சிகள் நடைபெற்றன.

நல்லூர் மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் வழிநடத்தலில் பெண்களுக்கான இந்த பயிற்சிகள் 6 மாத கால மற்றும் ஒரு வருட இலவச பயிற்சியாக நடைபெற்றன. இதன் அடிப்படையில் அவ்வாறு பயிற்சி பெற்றவர்களால் தயாரிக்கப்பட்ட மணப்பெண் அலங்காரம், காகிதத்திலான பூ வேலைப்பாடுகள், துணிகளில் வர்ண வேலைப்பாடுகள், சிற்பி, சங்கு வேலைப்பாடுகள், குழந்தைகளுக்கான நூலினால் ஆன ஆடைகள், பழங்கள் மற்றும் மரக்கறிகளிலான உருவப் பொம்மைகள், கழிவுப் பொருள்களான அலங்காரப் பொருள்கள், ஐசிங் கேக் வகைகள் உள்ளிட்ட பலவும் அங்கு காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், மாவட்ட செயலர் நா.வேதநாயகன், பிரதேச செயலர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். விருந்தினர்களால் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கிய ஆசிரியரும் மதிப்பளிக்கப்பட்டார்.

அளவெட்டியில் இருந்து அமெரிக்காவரை சைவம்

தொண்டுநாதன்

இலங்கையின் வடபகுதியிலுள்ளது அளவெட்டி கிராமம். இதற்கும் அமெரிக்காவிற்கும் என்ன தொடர்பு என பலரும் வியப்புடன் கேட்கலாம். யாழ்ப்பாணத்து மாமுனிவர் எனப் போற்றப்படும் தவத்திரு யோகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு துறவற நிலையடைந்த அமெரிக்க இளைஞர் ஒருவர், தனது ஆன்மிகப் பணியின் முதற்கட்டமாக அளவெட்டி கிராமத்தில் ஆச்சிரமம் ஒன்றையும், அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் சைவ ஆதீனமொன்றையும் நிறுவியிருப்பது, ஒரு வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளது.

அமெரிக்க இளைஞரொருவர் சுப்பிரமுனிய சுவாமிகளானார்

யோகர் சுவாமிகளின் பெருமையைக் கேள்வியுற்ற ஆன்மிகத் தாகம் கொண்ட 21 வயதுடைய அமெரிக்க இளைஞர் ஒருவர் 1949ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தார். கொழும்பில் தங்கியிருந்த இவரை, அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா செட்டியார் என்ற சைவப்பெரியார் சந்தித்தார். இவரிடம் அந்த அமெரிக்க இளைஞர் ஒரு குருவை தேடிவந்திருப்பதாகச் சொன்னார். கந்தையா செட்டியார் அந்த அமெரிக்க இளைஞரை, யாழ்ப்பாணம் அழைத்துவந்து, அளவெட்டியிலுள்ள தனது வீட்டில் தங்கவைத்து சைவத்தமிழ் கலாசாரத்தையும் சமய நெறிமுறைகளையும் கற்றுக்கொடுத்தார். தினமும் அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோயிலுக்குச் சென்றும் வழிபடச்செய்தார். அந்த அமெரிக்க இளைஞர் சமய அனுட்டானங்களில் பக்குவநிலை அடைந்ததும் இவரை ஒருநாள் வைகாசி பூரணை தினத்தன்று கந்தையா செட்டியார் யோகர் சுவாமிகளிடம் அழைத்துச் சென்றார்.

அமெரிக்க இளைஞரின் வருகையை எதிர்பார்த்திருந்த யோகர் சுவாமிகள், அவரை தனது சீடர்களுள் ஒருவராக ஏற்று, சுப்பிரமுனி எனும் நாமாகரணம் சூட்டி, புனித சந்நியாச தீட்சையை வழங்கினார். இந்தத் தீட்சையானது அந்த அமெரிக்க இளைஞரை நாதசித்தர் மரபில் சேர்க்கும் தீட்சையாக அமைந்தது.

யோகர் சுவாமிகளின் ஆசியைப் பெற்றுக்கொண்ட அந்த இளைஞர் சுப்பிரமுனிய சுவாமிகளாக இந்து மக்களால் போற்றித் துதிக்கப்பட்டார். அந்தக் காலப்பகுதியில்தான் அளவெட்டி கிராமத்தில், யோகர் சுவாமிகளின் ஆசியுடன் ஆச்சிரமமொன்றையும், அங்கு பசுபதீஸ்வரர் ஆலயத்தையும் அமைத்தார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றிவரும் சைவ சித்தாந்த தர்மசபை அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில்தான் ஆரம்பமாகியிருப்பது சிறப்புக்குரியது.

அமெரிக்காவில் இந்துக் கோவிலை நிறுவினார் சுப்பிரமுனிய சுவாமிகள்

யோகர் சுவாமிகளின் ஆணைப்படி அமெரிக்கா திரும்பிய சுப்பிரமுனிய சுவாமிகள், அங்கு செய்யவேண்டிய பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் வகையிலான செய்ற்பாடுகளில் ஈடுபட்டார். 1957ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் சுவாமிகள் இமாலய கலாபீடத்தை நிறுவியதுடன், கலிபோர்னியாவில் அமெரிக்காவின் ஓர் இந்துக் கோயிலையும் நிறுவியதன் ஊடாக மேலை நாட்டில் அவரது ஆன்மிகப் பணி ஆரம்பமானது. அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை எனும் பகுதியிலுள்ள புனித வைலுவ நதிக்கரையிலுள்ள பெரும் நிலப்பரப்பில் 1970ஆம் ஆண்டு சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறு அடி உயரமான நடராஜப்பெருமானை மூல மூர்த்தியாகத் கொண்ட ஆலயத்தையும் அமைத்தார். இதுவே மேலைத் தேசத்தில் தோற்றம் பெற்ற முதலாவது சிவன் கோயிலாகவும் சிறப்பு பெற்றுள்ளது.

1975ஆம் ஆண்டு மாசி மாதம் சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு சிவபெருமான் ஓர் அகக்காட்சியை அருளினார். இதன்படி புனித வைலுவ நதிக்கரையில் சுயம்புலிங்கமொன்றைக் கண்டார். இதனை மையமாகக்கொண்டே சன்மார்க்க இறைவன் கோயிலை முற்றிலும் கருங்கற்களைக் கொண்டு உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை சுவாமிகள் மேற்கொண்டார். அதற்கான பணிகள் இடம்பெற்றுவரும் வேளையில், 1987ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் இங்கு பிரதிஷ்டை செய்வதற்காக ஆறு கோணங்களைக் கொண்டதும், 39 அங்குல உயரமானதுமான ஸ்படிதலிங்கமொன்றும் சுவாமிகளுக்கு கிடைத்தது. ஆலயம் அமைக்கப்பட்டுவரும் வளாகத்தில், நூற்றெட்டு வில்வமரங்களின் மத்தியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சுயம்புலிங்கேஸ்வரருக்கு நித்தியபூசைகள் இடம் பெற்றுவருகின்றன.

கோப்பாயில் நிறுவப்பட்ட சுப்பிரமுனிய கோட்டம்

1982ஆம் ஆண்டில் சுவாமிகளால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கோப்பாய் கிராமத்தில் சுப்பிரமுனிய கோட்டம் நிறுவப்பட்டதுடன் அங்கு சாந்திலிங்கேஸ்வரர் திருக்கோயிலும் தோற்றம் பெற்றது. 1983ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின்னர் சுவாமிகள் இலங்கைத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியமொன்றை ஆரம்பித்து, அதனூடாக ஏராளமான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கியிருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

சுப்பிரமுனிய சுவாமிகளது சமய, சமூகநலப் பணிகளின் மற்றொரு செயற்பாடாக இந்து கலாசார அறக்கட்டளையை உருவாக்கி, அதனூடாக உலகளாவிய ரீதியில் அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் போன்றவற்றுக்கும் உதவி வந்திருப்பதையும் சொல்லலாம். இந்த அறக்கட்டளை ஊடான மேலான பணிகள் ஹவாய் சைவ ஆதீனத்தால் இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

1986ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற உலக சமய நிகழ்வின்போது, சுவாமிகளது உலகளாவிய சமய, சமூகம் பாராட்டி 'ஜகதாச்சாரியார்' என்ற விருது வழங்கிக் மதிப்புறுத்தப்பட்டார். சுவாமிகளுக்கு 2000ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையினால் முன்னாள் செயலாளர் யூதாண்ட் ஞாபகார்த்த சமாதான விருதும் வழங்கப்பட்டதுடன், ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டிலும் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

சுப்பிரமுனிய சுவாமிகள் 2001 நவம்பர் 12ஆம் திகதியன்று நள்ளிரவு ஹவாய் சைவ ஆதீனத்தில் மகா சமாதியடைந்தார். இவருக்குப்பின், இவரது தலைமை சீடராக விளங்கிய போதிநாத வேலன் சுவாமிகள் ஹவாய் சைவ ஆதீனத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன், சமய சமூகப் பணிகளையும் முன்னெடுத்து வருகிறார்.

வேலன் சுவாமிகள் 65 அடியவர்கள் சகிதம் திருத்தல யாத்திரையாக தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நெடுந்தீவு மகேஷ்

வலிய கனவுகள்

கிளிநொச்சி இலங்கைக் குமரித் தமிழ்ப் பணி மன்றத்தின் வெளியீடாக அச்சாகியுள்ளது வலிய கனவுகள் எனும் கவிதைநூல். இளந்தளிர் எனும் புனைபெயரில் த.நிரஞ்சலன் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக இது உருப்பெற்றுள்ளது. இன்று உலவும் கவிதைகளின் வடிவுகளும் வண்ணங்களும் மேலும் மெருகேற்றப்பட்டுப் புதிய சிந்தனைகளுக்குப் படிமம் தந்துள்ளவையாகத் தொகுப்பிலுள்ள கவிதைகள் மிளிர்கின்றன. இது சாதாரணமாக இரவுகளில் வரும் கனவுகளல்ல, எங்கள் இதயங்களிலிருந்து வருவன. காலம் விடிந்ததும் கலைந்து விடுவதற்கு இவை ஒன்றும் இருளல்ல, உணர்வுகளின் இருப்பு. இது கவிஞரின் கருத்துகளிலிருந்து பிறந்த சிந்தனையைத் தூண்டும் சிறு துளி!

நம்பிக்கையெனும் நாற்று

மரபும் புதுமையும் மகிழ்ந்தினிக்கும் வகையிலே தேர்ந்த கவிதைகளாகத் தொகுப்பை நிறைத்துள்ள கவிதைகள் அனைத்தும் வாசிப்பவர் கருத்திலே உயிர்ப்பூட்டுகின்றன. தன்னைச் சுட்டித் தனக்கு உணர்வூட்டித் தனக்காகவே எழுதியதாகக் கூறிக் கவிஞர் தொகுத்துள்ள கவிதைகளில் வாசகர்களாகிய எமக்கான தெரிவுகளும் தேவைகளும் நிரம்பவே உள்ளன.

'நம்பிக்கையெனும் நாற்று' எனும் தலைப்பிட்ட கவிதையில்

'கடந்த காலத்தின் கண்ணீரைத் துடைத்து
மனதை மகிழ்ச்சிப்படுத்து
உதிர்ந்துவிழும் தன் இலைகளைக் கண்டு
மரங்கள் ஒன்றும் மரணத்தைக் கேட்பதில்லை
புதைத்துவிட்டுப் போனது பெரும் துயரமென்று
விதைகள் ஒன்றும் வீணாகிப் போனதில்லை
உதிர்ந்த இடத்திலிருந்து துளிர்த்தலும்
புதைத்த நிலத்திலிருந்து முளைத்தலும்
விதைத்த இடத்திலிருந்து வெளிவருதலுமே நம்பிக்கை!
பின்னொரு நாளில் அறுவடை கண்டு ஆனந்தப் படுவாய்.
கல்லெறிகள் இல்லையென்றால் நாம் காய்க்கவில்லை
என்பதே கருத்து.

நீ வென்று விடுவாய் என்ற நம்பிக்கையிலேயே
வாழ்க்கை உன் வாசல்வரை கிடக்கிறது.'

ஒவ்வொருவரதும் நம்பிக்கைக்கு வலுவூட்டும் வலிய கனவொன்று இங்கே இனிய கவிதையாக எம்மை முன்னோக்கிப் பாய உந்துகின்றது.

அப்பாவும் பூவரசந் தடியும்

ஒழுக்கம் உயர்வு அனைத்துக்கும் வழிகாட்டும் பெற்றோர் பெரியோர் ஆசிரியர் யாவரும் எம்மைச் சிறுவயதில் கண்டித்தும் தண்டித்தும் வழிநடத்திய வாழ்வின் உறுதியையும் உழைப்பையும் உணர்வு வெளிபாடாக்கி உரைக்கும் கவிதையாக 'அப்பாவும் பூவரசந் தடியும்'

'அன்று, முற்றத்து மணலில் சுட்டுவிரல்
தேய ஆழத்தி 'அ' எழுதியபோது
பின்னாலிருந்து பூவரசம் கம்பால் அடித்த உன்னையே
என் முதல் எதிரியென நினைத்தேன்.
இன்று எனது கவிதை நூல்களின் வெளியீட்டில் கேட்கும்
கைதட்டல்களின் ஒலியில் புரிந்தது உனது புரிதல்.
வாழக்கிடைக்காத போதும் வாழ்கிறாய்!
என் உள்ளுணர்வின் ஒளித் தொகுப்போடு.'

இவற்றோடு இனிக்கும் இசைக்கும் வகை நல்கிய அரங்கக் கவிதைகளும் பலரின் வாழ்வைப் பகிரும் நினைவுக் கவிதைகளும் இங்கே வாசகரின் கவிதை வாசிப்பிற்கு உவகை தருகின்றன.

'இன்னுமொரு முறை இதயக் கூட்டிலே
எமனின் கல்லெறி விழுந்ததையா
உன் மின்னும் கண்களை இறுக மூடி நீ
எங்கே போகிறாய் இனிய மைந்தா?'

அக்கராயன் மகாவித்தியாலய ஆசிரியர் பேரம்பலம் தேவானந்தனின் மறைவுச் செய்தி கேட்டதும் எழுதிய கவிதையிலிருந்து ஒரு வரி.

மேலும் ஒன்று யாழ்ப்பாணம் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இறந்துபோன பதினொரு சிங்கள சகோதரருக்கான அஞ்சலிக் கவிதையாக எழுதப்பட்டிருப்பவை

'எதுவாக இருப்பினும் மீண்டுமொருமுறை எங்களை உருக்குலைத்திருக்கிறது உங்கள் மரணங்கள் நினைவழியாத் துயர் வெளியில் நீங்கள் இல்லாமை என்பது உடைத்திருக்கும் பல உள்ளங்களை யாரோ ஒரு மகனோ மகளோ அனாதையாகி இருப்பார்கள் அன்று உற்றவனைத் தொலைத்து ஒரு மனைவி விதவையாகியிருப்பாள் அன்று இருளும் போது உங்களைக் காப்பாற்றுவதற்கான கடைசி நிமிட போராட்டம்வரை நாங்கள் சிந்திய வியர்வைத் துளிகளே எமக்கான ஆறுதல்! புத்தபெருமானோ அன்றிச் சிவபெருமானோ ஆற்றுப்படுத்தட்டும் ஆன்மாக்களை.'



வலிய கனவுகள் தந்துள்ள கவிதைகள் யாவுமே எளிய தமிழில் நாம் எமது வாழ்வில் கடந்தவைகளையும் நடந்தவைகளையும் சொல்வனவாக மாத்திரமன்றி அவற்றால் விளைந்த துயரங்களையும் துரோகங்களையும் குணப்படுத்த வல்ல மருந்தாகவும் விளைந்துள்ளன.

இது கவிஞர் இளந்தளிரின் முதல் வெளியீடாகும். இதிலே இடம் பெற்றுள்ள மொழி அழகு தமிழின் இனிமையைச் சுவைக்கும் வகையில் கவிதைகளாக்கப்பட்டுள்ளமையை உணரலாம். இந்த வலியகனவுகள் தொகுத்துள்ள வலிமை மிக்க கவிதைகள் வாசிக்கவும் சிந்திக்கவும்' தூண்டுகின்றன கவிஞரைத் தொடரும் காலங்கள் மேலும் பல கவிதை நூல்களைத் தரும் வலிமையைச் சேர்க்கும் என்று நம்பலாம். வாசித்தோம் வாசியுங்கள்.

பெண்மை மலரட்டும்

பூவெனவே மலர்ந்தாள் – இவள்
பூமிதனில் வளர்ந்தாள்
புன்னகை புரிவாள் – தினமும்
புதுமைகள் செய்வாள்

அன்பில் வாழும் இளைய கொடி
அரசு ஆளும் உயர் மாது
கல்வியிலே பட்டங்கள் பெற்று – நற்
கலைகளிலே பெருமைகள் அடைவாள்

– சிவரம்யா

கற்பிலே நின்று ஒழுகியவள் – இவள்
கண்ணின் மணியானவள்
சிரித்திடும் சின்னப் பெண்ணவள்
சித்திரம் போன்று அழகில் மிளிர்பவள்

ஒழுக்கத்தில் நின்று ஒளிர்பவள்
ஒற்றுமையால் பாரில் வாழ்பவள் – இவளின்
பண்பு கண்டு உலகு பாராட்டும்
பகைமை எல்லாம் ஒடுங்கும்

தாயாய் இவள் கொண்டாள் பாசம்
தாரமாய் இவள் கொண்டாள் காதல்
தோழியாய் நல் நட்பு கொண்டாள்
மகளாய் இல்லத்தில் மங்கலம் தந்தாள்

வீரமகளாம் இந்நங்கை – நல்
வித்தைகள் எல்லாம் அறிந்தவளாம்
மண்ணாளும் விண்ணாளும் – உயர்
அணங்காம் இவள்

வெல்லட்டும் இப்பெண்ணினம்
வெற்றி கொட்டட்டும் நம் சமூகம்

கன்னியர் கரங்களில் சிலம்பேறும்...

நவாலியூர் கவிராயர்

பெண்களை அடிமைப்படுத்துவோர்
பேடிமை கொண்ட ஆடவரோ?
கண்களைப் போன்றவரை
பேணுவோரே
காலங்கள் அனைத்தும் நிலைப்பராம்

பெண்ணிந்த மண்ணில் தோன்றேல்
பிரபஞ்சம் நிலைத்து நிற்குமோ?
மண்ணிந்த மகிமையை பெற்றதும்
மாதர்களின் விருத்திப் பயனன்றோ

ஆண்களும் பெண்களும் சமமதாய்
ஆனதாம் மனிதரின் தோற்றங்கள்
ஆண்பாதி பெண்பாதி என்பதையே
ஆரம்பம் முதலாக காண்கிறோம்

இருபாலார் இணையாமல் உயிரேது
இனவிருத்தி இல்லாமல் குடும்பங்களா?
ஒருவரை மற்றவர் அணையாமல்
உலகம் எங்ஙணம் உருவாகும்

வலிமையின் கூடுமை ஆணினமாம்
வக்கரித்து பெண்களை அடக்கினால்
கலியிங்கே வந்ததென விரட்டிட
கன்னியரின் கரங்களில் சிலம்பேறும்

சிலம்பின் கதையறிந்த மானிடமே
சிறுபுத்தி விட்டினி மாதர்களை
நிலமந்தை பூமியெனக் கொள்வீரே
நித்திலம் வாழ்வதும் மேலோங்கும்

ஆருக்கும் ஆருமிங்கே அடிமையில்லை
ஆணாதிக்க எண்ணத்தை தூர வீசி
ஒருயிருாம் பெண்ணவளை காலமதும்
ஆதரித்து சமனாக அணைத்திடுவீர்

மேகங்களும் தூதாகமும் சோகங்களும் தீர்வாகமும்

கே.எஸ்.சிவஞானராஜா

மேகமானது இருக்காமல், நிற்காமல் கொள்ளாமல் இன்னும் இறவாமல் பிறவாமல் ஒளிக்காமல் மறைக்காமல் நோகாமல் பேசாமல் தாகமோடு தானும் தன்பாடாய் உண்மையாய் உலா வருவதனால் நாம் சந்தேகங்கொள்ளாது எமது சோகங்களை அதனிடம் ஒப்படைத்து எம்மை நாம் விடுவிக்கலாம். விடுதலை பெறலாம். விரும்பியதை அடையலாம். மனி தன் செய்யவேண்டிய அத்தனை உதவிகளையும் மேகமானது நம்பிக்கையோடு செய்வதனால் மேகமும் ஒரு தோழியாகிறாள். தோழனுமாகிறான். எப்படி? மோகமதை, சோகமதை, காமமதை, தாகமதை மிகமிக இரசகசியமாகப்பகிரக் கூடிய ஒரு நகரும் ஊடகம் மேகங்கள்தான்.

எத்தனை பாரமான செய்தியாயினும் என்னமொழியில் கூறுவதாயினும் ஊடகலாயினும் கூடலாயினும் தண்டனையாயினும் தாங்குவதாயினும் மேகம் அத்தனை விடயங்களையும் உள்ளபடி உரியவாறு உரியவரிடம் சேர்ப்பித்தே தீரும். எனவே நீங்கள் எண்ணியது நிறைவே மேகத்தைத் தூது விடுங்கள். யாவும் சித்தியாகும். இத்தது போகின்ற விடயம் இன்று நேற்றல்ல புராதன காலத்திலிருந்து இன்று வரை நடைபெறுகிறது. 1933ஆம் ஆண்டு மயிலணி சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசாமிப்புலவரால் மொழிபெயர்த்து இயற்றப்பட்ட ஒரு நூல்தான் மேகதூதக்காரிகை என்பது.

மேகதூதக்காரிகை

இன்பம் பயக்கும் இனியநூல். கவிகளைத் தேனாக்கித்தரும். காளிதாசமகாகவியினால் வடமொழியில் அருளப்பட்ட மேகசந்தோசமென்னும் நூலின் வழியாக நின்று இந்தநூல் ஆக்கப்பட்டதென்று கூறலாம். இது ஒரு காரணகாரியமாகவும் அப்போதைய காலப்பண்பாடு கருதியும் ஒழுக்க சீலம் கருதியும் அறம் பொருள் இன்பம் வீடு பயப்பதாகவும் ஆக்கப்பட்டுள்ளது. எனவே மேகதூதக் காரிகை என்ற இந்த நூல் ஆற அமர இருந்து தேறவும் நாம் மாறவும் படிக்கவல்லதாகும். இதனது சாராம்சம் மேகத்தைத் தூதுவிட்டு விமோசனம் பெறுவதாகும்.

மேகதூதக் காரிகையுரை

சுன்னாகம் மயிலணி அ. குமாரசாமிப்புலவர் எழுதிய மேகதூதக் காரிகை என்ற நூலுக்கு உரை எழுதியவர், புன்னாலைக் கட்டுவன் வித்துவசிரோமணி, சமஸ்கிருத கலாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீமத் சி. கணேசையர் ஆவார். இந்த நூல் யாழ்ப்பாணம், கொக்குவில் சோதிடப் பிரகாசயந்திரசாலை யில் 1925ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. இருந்தபோதும் மேற்படியுரையினையுடைய பிரதிகள் எங்கும் கிடைக்காத நிலையில் ஒரேயொரு பிரதி மட்டும் கொக்குவில் சோதிடப் பிரகாசயந்திரசாலை அதிபரால் பாதுகாக்கப்பட்டு உதவப்பட்டமையால் வித்துவ சிரோமணியின் பூட்டனாரான பிரம்மஸ்ரீ பா. சுந்தரராஜசர்மாவால் வறுத்தலை விளானிலுள்ள அவரது சந்நிதானத்தில் புதுப்பிக்கப்பட்ட மேகதூதக்காரிகையுரை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

புன்னைநகர் கணேசையர் வெளியீட்டகம் சார்பில் ஆயர் கடவை சித்திவிநாயகர் தேவகர்தான ஆதீனகர்த்தாவான பிரம்மஸ்ரீ பா. சுந்தரராஜசர்மாவினது பணி ஞாலத்தால் வாழ்த்தப்பட வேண்டியதாகும். அந்த நூலிலுள்ள ஆறாவது பாடலிதுவாகும்.

மேகத்தைத் தூதுவிடல்
அகிலேயி குழலி யொருத்தியை
யெண்ணி யயருகின்றேன்
முகிலே யெனது பிரார்த்தனை
யொன்று முடித்து வைப்பாய்

சகமே லுயர்புட் கலாவர்த்த
மேகத் தனிமரமேற்
புகுவோ யுனையொன்று கேட்ட
லெனக்குப் புகழ் தருமே

இந்தப் பாடலின் பொருளைப் பாருங்கள். முகிலே மிகுந்த வாசனை பொருந்தும்படியாக அகில் புகை ஊட்டப்பெற்ற கூந்தலையுடைய என் மனைவியை நினைந்து நினைந்து உள்ளம் சோர்வடைகின்றேன். அத்தகைய எனக்கு உன்னிடத்தில் வேண்டப்படுவது ஒன்றுண்டு அதனை சீக்கிரம் முடித்து வைப்பாயாக. அதற்காக முகிலே உன்னை நான் இரந்து விரைந்து கேட்பதானது ஒருபோதும் இகழ்ச்சியை எனக்குத் தரப்போவதில்லை. ஏனென்றால் நீயோ இந்தப் பூமியிலே பொன்மழை பொழிகின்ற புட்கலாவர்த்தம் என்னும் ஒப்பற்ற மேகத்தின் வழிதோன்றிய மரபில் இருக்கின்ற பேற்றினைப் பெற்றுள்ளாய். ஆதலால் என் மனைவியை என்னிடம் சேர்ப்பாயாக.

மேகத்திடம் விண்ணப்பம்
கார்முகிலே! போரிலே காணாமல்
ஆக்கப்பட்டோரின் கதியென்ன வென்று
கேட்டுச் சொல்லமாட்டாயா?

காரமேகமே! தாயகக் காணிகள் இன்னுமே
சிறைபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை
மீட்டுத்தரமாட்டாயா?

மின்முகிலே! வடகிழக்கு நீ மகிழ்ந்து உறவு
கொண்டாடிய பூமியல்லவா? ஏன் பிரித்தாய்? சேர்க்மாட்டாயா?
விண்ணோங்கு மேகமே மண்ணிலே ஒருவரை
ஒருவர் பிழத்துத் தின்ன ஆரம்பித்துவிட்டனர்.

உலகமே பார்த்துச் சிரிக்க ஆரம்பித்து விட்டது.
இதை நீயும் பார்த்துக் கொண்டு இருக்கலாமா?
இதை நிறுத்தமாட்டாயா?

வண்ணமுகிலே! வானம் பார்த்த பூமிக்கெல்லாம்
வாழ்வு தரும் நீயோ, அரசியல் வாழ்விலும்
ஆன்மிக வாழ்விலும் அதிகார
அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து
விட்டுக் கூத்துப் பார்க்கிறாயா?
கட்டுப்படுத்தமாட்டாயா?

உன்னை நம்பி இவற்றை முன்வைக்கின்றேன். சீக்கிரம் தீர்க்கவழியொன்றுதரமாட்டாயா? முகிலே! முயலாய் ஓடும் எனக்கு நாம் சொல்வது எல்லாம் நட்டாற்றில் கைவிட்டது போலாகி எம்மை ஏமாற்றிவிடாதே! எம்மைப் போல் நனைந்து சுமந்து விரைந்து சென்று அரசுக்கு எடுத்தியம்பி நல்லமுடிவைக்கொண்டுவா. அதுவரை உண்ணாது உறங்காது உனக்காகக் காத்திருப்போம்.

நெஞ்சை வருடும்

தனிமுகிலே, நனிமுகிலே, நீர்முகிலே, வான்முகிலே, வளர்முகிலே, விண்முகிலே, மாமுகிலே, குலமுகிலே, கொடிமுகிலே, கோமுகிலே, மலைமுகிலே, மதிமுகிலே, மழைமுகிலே நீயும் உன் உறவுகளும் கூடிக் கலாவி உலாவிக்கொண்டாடுவது போல இந்த மண்ணும் குலாவும் அந்த நாள் எந்த நாள்?

உங்கள் பிறந்த திகதியின்படி உங்களுக்கான அதிர்ஷ்டங்கள்

ஒருவரின் பிறந்த திகதியை வைத்து அவர்களுக்கு அதிர்ஷ்டத்தை கொடுக்கும் எண்கள், நிறம், இரத்தினக்கல், திசை, கிழமை மற்றும் வணங்க வேண்டிய கடவுள் ஆகிய அனைத்தைப் பற்றியும் ஜோதிடம் கூறுகிறது.

7,16,25 திகதிகளில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்

இந்த எண்களின் அதிபதி - கேது
அதிர்ஷ்ட எண்கள் - இரண்டின் வரிசை, ஏழின் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - பலநிறம், பாசிப்பச்சை
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - வைடூரியம், டைகர்ஐ, கருப்பு நிற ஓவல்
அதிர்ஷ்ட திசை - வட மேற்கு
அதிர்ஷ்ட கிழமை - செவ்வாய்
வணங்க வேண்டிய கடவுள் - விநாயகர்

8,17,26 திகதிகளில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்

இந்த எண்களின் அதிபதி சனி
அதிர்ஷ்ட எண்கள் - ஐந்தின் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - நீலம், ஊதா
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - நீலம், லாபீஸ் லசுலி டர்க்வாய்ஸ்
அதிர்ஷ்ட திசை - கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - சனி, ஞாயிறு
வணங்க வேண்டிய கடவுள் - காவல் தெய்வம்

9,18,27 திகதிகளில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்

இந்த எண்களின் அதிபதி - செவ்வாய்
அதிர்ஷ்ட எண்கள் - மூன்றின் வரிசை, ஆறின் வரிசை, ஒன்பதின் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - சிவப்பு, வெளிர் நீலம்
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - பவளம், ப்ளட் ஸ்டோன், கர்னலியன்
அதிர்ஷ்ட திசை - தெற்கு
அதிர்ஷ்ட கிழமை - செவ்வாய், வியாழன்
வணங்க வேண்டிய கடவுள் - முருகன்

நாளை
08.03.2018
வியாழக்கிழமை
மாசி 24

திதி: ஸப்தமி முழுவதும்
நட்சத்திரம்: அனுசம் பி.இ.03.26 வரை
சுபநேரம்: 07.54–03.24 வரை
ராகுகாலம்: 01.54–03.24 வரை



தர்மம் என்பது பொருள்கள் பற்றியது மட்டும் அல்லவே

இஸ்லாம் கூறும் தர்ம சிந்தனைகள் வித்தியாசமானவை. அதன் வழிகள் விசாலமானவை. பணம் மற்றும் காசுகளை தானம் கொடுப்பது மட்டும் தர்மம் அல்ல. இதையும் கடந்து சின்னச்சின்ன நற்கருமங்களும் இஸ்லாத்தின் பார்வையில் தர்மங்களே.

வசதி படைத்தவர் தங்களிடம் உள்ள செல்வங்களை தர்மம் செய்கிறார்கள். வசதியற்றவர்கள், தாங்கள் செய்யும் நற்கருமங்களின் வழியே தர்மம் செய்கிறார்கள். இவ்வாறு ஏழை,பணக்காரன் இருவருக்கும் தர்மம் செய்யும் வாய்ப்பினை இஸ்லாம் வெவ்வேறு வழிகளில் வழங்கி இருவரையும் சமநிலைப்படுத்துகிறது.

'இறைவன் உனக்கு நல்லதைச் செய்திருப்பது போன்றே நீயும் நல்லதைச் செய்' என்பது திருக்குர்ஆன் வசனமாகும்.

'உங்களுடைய சகோதரரைப் பார்த்து நீங்கள் புன்னகை புரிவதும் தர்மம். நீங்கள் நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதும் தர்மம். வழி தவறியவருக்கு வழிகாட்டுவதும் தர்மம். பார்வையற்றோருக்கு வழிகாட்டுவதும் தர்மம். கல், முள், எலும்பு போன்றவற்றை நடைபாதையிலிருந்து அகற்றுவதும் தர்மம். உங்களது வாளியிலிருந்து உங்களது சகோதரனின் வாளியில் தண்ணீர் நிரப்புவதும் தர்மமே' என நபி (ஸல்) தெரிவித்தார்.

மேற்கூறப்பட்ட நபிமொழியில் பலவிதமான தர்ம சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒன்றுகூட பொருள் சம்பந்தப்பட்டது கிடையாது. தர்மம் என்றால் இஸ்லாத்தின் பார்வையில் பொருளுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. அது பரந்த மனப்பான்மையுடன் தொடர்புடையது என்பதை இதன் மூலம் அறியலாம்.

உணவைத் தானம் செய்வதும் தர்மமே

'ஒரு பெண், வீட்டிலுள்ள உணவை வீணாக்காமல் தர்மம் செய்தால் அவள் தர்மம் செய்த நன்மையைப் பெறுவாள். அதைச் சம்பாதித்த காரணத்தால் தர்மத்தின் நன்மை அவளுடைய கணவனுக்கும் கிடைக்கும்; அது போன்றே கருவூலக் காப்பாளருக்கும் கிடைக்கும். இவர்களில் யாரும் யாருடைய நன்மையையும் குறைத்து விடமுடியாது' என நபி சொல்கிறார்.

மனிதர்கள் சூரியன் உதிக்கின்ற ஒவ்வொரு நாளிலும் தம்முடைய ஒவ்வொரு மூட்டு எலும்புக்காகவும் தர்மம் செய்வது கடமையாகும். இருவருக்கிடையே நீதி செலுத்துவதும் தர்மமாகும். ஒருவர் தமது வாகனத்தின் மீது ஏறி அமர உதவுவதும், அல்லது அவரது பயணச் சுமைகளை அதில் ஏற்றிவிடுவதும் தர்மமாகும். இன்சொல்லும் தர்மமாகும். ஒருவர் தொழுகைக்குச் செல்ல எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தர்மமாகும்' என நபி கற்பித்துச் சென்றுள்ளார்.

'நபித்தோழர்களில் ஏழைகளான சிலர் நபியவர்களிடம் 'அல்லாஹ்வின் தூதரே, வசதி படைத்தோர் நன்மைகளை தட்டிக் கொண்டு போய்விடுகின்றனர். நாங்கள் தொழுவதைப் போன்றே அவர்களும் தொழுகின்றனர்; நாங்கள் நோன்பு நோற்பதைப் போன்றே அவர்களும் நோன்பு நோற்கின்றனர்; ஆனால் அவர்கள் தங்களது அதிகப்படியான செல்வங்களைத் தான தர்மம் செய்கின்றனர் அவ்வாறு தான தர்மங்கள் செய்ய எங்களிடம் வசதி இல்லையே' என்று கூறினர்.

அதற்கு நபியவர்கள் 'நீங்களும் தர்மம் செய்வதற்கான முகாந்தரத்தை இறைவன் உங்களுக்கு ஏற்படுத்தவில்லையா? இறைவனைத் துதிக்கும் ஒவ்வொரு துதிச் சொல்லும் தர்மமாகும்; இறைவனைப் பெருமைப்படுத்தும் ஒவ்வொரு அல்லாஹு அக்பர் சொல்லும் தர்மமாகும்.

ஒவ்வொரு புகழ் மாலையும் அல்ஹம்துலில்லாஹ் தர்மமாகும். ஒவ்வொரு ஓரிறை உறுதிமொழியும் லாஇலாஹ இல்லல்லாஹ் தர்மமாகும்; நல்லதை ஏவுதலும் தர்மமே தீமையைத் தடுத்தலும் தர்மமே உங்களில் ஒருவர் தமது பாலுறுப்பைப் பயன்படுத்துகின்ற விதத்திலும் தர்மம் உண்டு' என்று தெரிவித்தார். தர்மம் என்பது பொருள்களுடன் தொடர்புபட்டது அல்ல. பொருளுணர்ந்து செயற்படுவோம்.

2007 - இலங்கை அரசின் மீதும், புலிகள் மீதும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்காவால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது

வரலாற்றில் இன்றைய தினம் 07.03.2018

1876 - தொலைபேசிக் கண்டுபிடிப்புக்கான காப்புரிமத்தை அலெக்சாண்டர் கிரகம்பெல் பெற்றுக்கொண்டார்.

1988 - அரசும் புலிகளும் நிபந்தனையற்ற பேச்சில் ஈடுபட வேண்டும் என்று ஈரோஸ் வலியுறுத்தியது.

1988 - திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் பாதுகாப்புக்கு என்று 10ஆயிரம் சிப்பாய்கள் அனுப்பிவைப்பு. அமைதிப்படையும் ஈடுபடும் என்றும் தெரிவிப்பு.

1988 இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பில், இந்திய நீர்மூழ்கிக் கப்பலின் பிரசன்னம் அதிகரித்துள்ளது என்று அமெரிக்கா கவலை.

1995 - யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகைதந்த பன்னாட்டுபிரதிநிதிகளிடம், புனரமைப்புக்குத் தேவையான சூழலை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று புலிகள் கோரிக்கை வைத்தனர்.

பொன்மாலைப் பொழுது

கார்முகில் நிழல் பதியும்
உறைந்து போன கடல்
உன் கூந்தல்
அது காற்றினில்
குலுங்கையில்
பூமியின் காந்தப்புலங்கள்
கதறுதடி

நட்சத்திரத்தை
ஈன்றுகொண்டிருக்கும்
கருந்துளை
உன் கண்மணி

பாலைவனத்தின் மணல்
போல்
என் மனம்
பற்றற்றது
நீ காட்டும் திசையில்
பறவை போல்
சிறகுற்றது

வெளிநேர ஆடையினிலே
வழிந்தோடும் நூல்
புவியீர்ப்பாம்;
காற்றில் ஆடும் ஆடை
அதில் கலங்கும்
உன் தாய்மை

அவளின் கறுத்த நகங்கள்
இரணியனைப் போல்
சித்தாரைக் கிழித்து
கிழித்து
குருதிக்கடலாய்
இசையைப்
பெருக்கெடுக்கவைத்தன
அந்தப் பொன்மாலைப்
பொழுதில்

ஓஷோ சிறிரதி,
யாழ்ப்பாணம்

தவறுகளை நீதியுடன் சுட்டுவோம்

சமூக, அரசியல், ஆன்மிக, கலாசார, பண்பாட்டுத் துறைகளில் அநீதிகள், வாழ்வியல் உரிமை மறுப்புக்கள், தப்பறைப் போதனைகள், வழிபாட்டிட அழிப்புக்கள், இனத் தொல்லியல் வரலாற்று அழிப்புக்கள், திட்டமிட்ட போதைப் பொருள் பரப்புதல், பாலியல் முறைகேடுகள் என மனித மாண் பிற்கெதிரான பல்வேறு ஆக்கிரமிப்புக்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. தனிமனித சமூக கட்டமைப்பைக் குலைக்கும் இவ்வகை செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கின்றோமா? உறுதியுடன் போராடுகின்றோமா?

அநீதியை எதிர்ப்பது நீதியை நிலைநாட்டவே. தவறுகளைச் சுட்டிக்காட்டுவது திருந்தி வாழவே. இதனையே இயேசு அன்று ஜெருசலேம் தேவாலயத்தில் நிகழ்த்தினார். கோவிலை மாசுபடுத்தும் வகையில் ஆடு, மாடு, புறா விற்றோரையும், நாணயங்கள் மாற்றுவோரையும் கண்டு கயிறுகளால் சாட்டை பின்னி அவர்களை அடித்து விரட்டி "என் தந்தையின் இல்லத்தை சந்தை ஆக்காதீர்கள்" (யோவான் 2:13-16) என்று கூறினார்.

இறைவன் வாழும் இடம் ஆலயம் மட்டுமல்ல, மனித உள்ளங்களும் தான். எனவே அந்த இறை உறைவிடத்தைத் தீட்டுப்படுத்தாது தூய்மையாக வைத்திருப்போம். தவறுகள், உரிமை மறுப்புக்கள், மனிதத்துக்கெதிரான ஆக்கிரமிப்புக்களைக் கண்டும் மௌனித்திருப்பது மாபெரும் குற்றமாகும். ஏனெனில் நீதியை நிலைநாட்டவே இயேசு தம் உயிரைக் கொடுத்தார். சமூகத்தை சீர்குலைக்கும் சக்திகளை நீதி என்னும் சாட்டையால் விரட்டி அடிப்போம். நீதிக்கான நெருப்பு எம் உள்ளங்களிலும் பற்றாவிட்டால் கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்கள் எனச் சொல்லிக் கொள்வதில் அர்த்தமில்லை.

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை



மரண அறிவித்தல்



நடராசா செல்வரத்தினம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா செல்வரத்தினம் கடந்த (05.03.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் ரவி (பிரான்ஸ்), நகுலா (இலண்டன்), கணேசன் (பிரான்ஸ்), காசினி (ஜேர்மனி), அகிலா (பிரான்ஸ்), அஜந்தா (ஜேர்மனி), காலஞ்சென்ற அனந்தி மற்றும் சோபனா (சுவிஸ்), கோமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமதி, ஸ்ரீதாசன், துஷ்யந்தி, ஞான வடிவேல், ஜெயசீலன், தர்மானந்தன், சாந்தன், கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் மதுராகவன், மதுராதவன், மதுராகவி, ஸ்ரீசங்கர், ஸ்ரீசாரங்கன், ஸ்ரீசாத்வீகன், ஜதூசன், விதூசன், ஞர்லினி, ஞாலஜன், ஞாலக்ஷன், ஜெயசங்கரி, ஜெகர்ணி, ஜெகப்பிரியன், யதூசன், அபிநயா கஜானன், சாந்மகிழ்வாமி, சாஸ்வதன், சபீனா, ஹர்ஷன், சர்வகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2018) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(CS 14543/15/17)

வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மேல்வீடு. கீழ்வீடு விற்பனைக்குண்டு.

077 187 7754

பச்சிலைப்பள்ளி
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை (வ-து)
பதவிவெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி :- களஞ்சியமுகாமையாளர் 208/13

சம்பள அளவுத்திட்டம் :- 13515-110×10 -120×10 -15815

(அ) கல்வித் தகைமை:- கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம்/ க.பொ.த. (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம், சிங்கள / தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி, சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப்பிணையும், ஆதனப் பிணையும் வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்புதல்

சங்கத் தலைமையகத்தில் ரூபா. 20.00 செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 22.03.2018ஆம் திகதிக்கு முன்னதாக "தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், புலோப்பளை வீதி, பளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

05.03.2018

தலைவர்,
பச்சிலைப்பள்ளி. ப.நோ.கூ.சங்கம்,
பளை.

(IN 6075)(10)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111

மார்ச் 08
சர்வதே மகளிர் தினத்தை ஒட்டி
புதிய அம்சங்களுடன்
புதிய பொலிவுடன்

புதுவிதி
PUTHU VITHI

- வித்தாகிப் போன முதல் முத்துக்கள்
- மங்கையர் ஆளுமை ஒளிவிட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம்
- விருது வழங்கப்படாத வீராங்கனை கல்பனா தத்
- இந்திய சினிமாவில் பெண்மை
- அதிகார பீடங்களை அதிரவைத்த அருந்ததி ராய்
- சொந்தக் காலில் நிமிர்ந்து நிற்கும் பெண்கள்

பிரதிகளுக்கு முந்துங்கள்!

புதுவிதி நடத்திய பரிசுப் போட்டி 1 இல் வெற்றிபெற்றவர்களின் விவரம் இந்த வார இதழில்...!

சனிக்கிழமை முதல் அனைத்து முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3003 திகதி:05.03.2018 திங்கட்கிழமை

சனிதா வாகனவெ நீலம்

வெற்றி இலக்கங்கள் மற்றும் அங்கில எழுத்து போனஸ் இலக்கம் அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்

06 29 43 69 U 65 33,000,740/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது நேரில் அணுகவும் - 0114 624 824, 0112 333 778

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 776

சீட்டிழுப்பு திகதி 2018.03.05 திங்கட்கிழமை

D 05 10 23 41

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,200,068/-

பரிசை நிற டிக்கட்டுகள் 06.03.2018ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

மணமக்கள் தேவை

யாழ். கிறிஸ்தவ 1993(விவாகரத்துபெற்ற பெண்)
யாழ். கிறிஸ்தவ கௌரவ 1988
(லக்கின செவ்வாய் ஆண்).
யாழ். இந்து கௌரவ 1981 (பெண்)
மணமக்கள் தேவை.

தொடர்பு: 077 248 7841

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 1981 அவிட்டம் 1ஆம் பாதம். 7இல் செவ்வாய். பாவம் குறைந்த அவுஸ்திரேலியா நிரந்தர வதிவிடமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தாயார் எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு:
077 9859 875, 077 248 7841

(CS 14329)(10)

துணுக்காய்ப் பகுதி பல நோக்குக் கூட்டுறவு சங்கம், துணுக்காய்.

அறிவித்தல்

பகிரங்க மூடிய கூறுவிலை விற்பனை

- துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறச் சங்கத்துக்குச் சொந்தமான அசோக் லேடன் பாரவூர்தி லொறி மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.
- வாகன இலக்கம் - 47 - 6234
- இனம் - அசோக் லேடன் லொறி
- மூடிய கூறுவிலைகள் மூலம் விற்பனைக்கு விடப்படும் லொறிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபாய் 250/- செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
- ஆரம்ப வைப்புத் தொகையாக ரூபா 2000/- வைப்பாகச் செலுத்தப்படல் வேண்டும். இத்தொகை மீளளிக்கக் கூடியது.
- மேற்கூறிய வாகனத்தைப் பார்வையிட பிரதான வீதி, துணுக்காயில் அமைந்துள்ள சங்கத் தலைமைக் காரியாலயம் (துணுக்காய் பாடசாலைக்கு அருகில்) துணுக்காய் (024324 8256 - 077 262 0369)
- பார்வையிடும் காலம் 08.03.2018 ஆம் திகதி தொடக்கம் 06.04.2018 ஆம் திகதி வரையும் விடுமுறை நாள்கள் தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பார்வையிடலாம்.
- விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் சங்க தலைமைக்காரியாலயத்தில் நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- இம்மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பங்கள் 08.03.2018 ஆம் திகதி தொடக்கம் 06.04.2018 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- வாகனங்களுக்கான மூடிய கூறுவிலைகள் 09.04.2018 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.

தலைவர்,
துணுக்காய்ப் பகுதி பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
துணுக்காய்.

(IN/6079)(11,17)

மரண அறிவித்தல்

சுந்தரம் குலசிங்கம் (கண்ணன்)

பிறப்பு 13.06.1971 இறப்பு 02.03.2018

யாழ்.கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Berlin ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் குலசிங்கம் 02.03.2018 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் ராசமணி தம்பதிகளின் பாசமிகு மகனும், தேவராசா - சாந்தா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சுகிர்தாவின் பாசமிகு கணவரும், அபினேஸ், அக்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் இராசலிங்கம் (இலங்கை), குணசிங்கம் (ஜேர்மனி),கலாதேவி(இலங்கை),வசந்தாதேவி(இலங்கை), விக்கினேஸ்வரி (இலங்கை), ராஜேஸ்வரி (இலங்கை), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜொனத், சந்தோஸ் (Berlin) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அமிர்தலிங்கம் (இலங்கை), இந்திர மூர்த்தி (இலங்கை), தவம் (இலங்கை), கணேஸ் (இலங்கை), ராசன் (பிரான்ஸ்), அருணா (இலங்கை), ரதிமலர் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தபேசன், நிறோஜன், ஹம்சாயினி, லக்சி, சகிந் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், நிஜந்தன், பிரியா, நிறோஜா, தர்சன், அஜோயன், கிருஷானி, மயூரன், அமீரா, சஸ்மீரா, கிஷாரா, கோபிகாந், ஹரிகரன், அஜேயசரியா (அயிசா), யுமேஸ் ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2018) வியாழக்கிழமை ஜேர்மனி Berlin இல் முற்பகல் 10.30 மணி தொடக்கம் ஒரு மணிவரை (இலங்கை நேரம் - 3.00 மணி - 05.30 மணிவரை) நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/14526)(11,17)

தகவல்: குடும்பத்தினர்.

077 952 7350, 077 626 2958

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

அமரர்

சண்முகம் பிரபாகரன்

(உரிமையாளர்- அபிஷா கட்டடப் பொருள் விற்பனை நிலையம், அளவெட்டி)

மண் மகிழ
03.05.1971

விண் நெகிழ
17.02.2017

திதி: அபரபக்க ஸப்தமி (08.03.2018)

ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை – என உணர்ந்தும்
உம்பிரிவால் .....
வாடினோம் தளர்ந்தோம் நெஞ்சம் வருந்தினோம்
துயரத்தெல்லை கூடினோம் வெய்துயிர்த்தோம்...

நீண்ட புகழோடு நெறிமுறையில் வாழ்ந்தவரே
மீண்டு வராநெறிசென்று ஆண்டு ஒன்றானதுவே.

உங்கள் ஆத்மா இறைபாதத்து இன்புற்றிருக்க
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவுதினம் நாளை (08.03.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை அனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மலை வேம்படி,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்.

(CS 14524)(13,17)

மாட்டிறைச்சிக்...

எதிர்காலமென்று ஒன்று இல்லை. சாதாரண சட்டத்தை உரியவகையில் பயன்படுத்தியிருந்தால் அவசரகால நிலை தேவைப்படாது. மக்களின் ஜனநாயகப் போராட்டங்களை முடக்குவதற்காகவும், நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்காகவும் மேற்படி அவசரகால நிலைமை அரசு பயன்படுத்தக்கூடாது என்றும் கூறினார். முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாதச் சம்பவங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்கியுள்ளது. அம்பாறையில் விஞ்ஞானத் தன்மையே இல்லாத விடயமொன்றில் ஆரம்பித்த இனவாதச் செயற்பாடுகள் இப்போது திகன தெல்தெனியவிலும் பரவியுள்ளன. நாட்டில் இனவாதம் தலைதூக்காதிருக்க இனவாதிகள் தண்டிக்கப்படவேண்டும். தாக்கப்பட்டு உயிரிழந்த 42 வயதான குமாரசிங்கவுக்கும், உயிரிழந்த அப்துல் பாசித்துக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று நல்லிணக்கம் தோல்வியுற்று இனவாதம் வெற்றிபெற்றுள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்கப் போராடியவர்களுக்கு இந்த நிகழ்வு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மக்களை இனவாதத்தால் பிரித்துவிட்டு ஒற்றுமை, நல்லிணக்கம், நாட்டின் அபிவிருத்தி குறித்து பேசமுடியாது. அனைவரும் சமமாக மதிக்கப்படாது, பாதுகாக்கப்படாது நாட்டின் சிறந்த எதிர்காலம் குறித்துச் சிந்திக்கமுடியாது.

இனவாதம் அரசியல் தேவைகளுக்காகவே தூண்டிவிடப்படுகின்றது. இதனைச் சிலரே அறிந்துள்ளனர். இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரும் தாம் அரசியலால் வழிநடத்தப்படுகின்றதை அறியாதுள்ளனர். ஆட்சியைக் காப்பாற்ற, மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிப்பவர்களே இவ்வாறான நடவடிக்கைகளைத் தூண்டி இலாபமடைகின்றனர்.

தேர்தலொன்று முடிவடைந்த பின்னர் மக்கள் குறித்து சிந்திக்கத் தவறிய அரசு, தலைமை அமைச்சர் பதவி, அமைச்சுப் பதவி பற்றியே பேசினர். நாட்டில் விவசாயிகளுக்கு, பட்டதாரிகளுக்கு சுகாதாரத்துறையில் பல பிரச்சினைகள் இருக்க அதுபற்றி பேச தவறிய அரசியல்வாதிகள் மக்களை மறந்துவிட்டனர். அரசுக்கு இருந்த சவால் இனவாதத்தால் திசைதிரும்பியுள்ளது. இனவாதத்தால் மக்களே பாதிக்கப்பட்டனர்.

குடிபோதையில் வந்து, மாமிசம் கேட்ட பௌத்தனுக்கு மலட்டுத்தன்மையேற்படுத்தும் மாத்திரையை வழங்கவேண்டும். எவ்வித விஞ்ஞானத் தன்மையும் இன்றிய மலட்டு மாத்திரையென்ற விடயத்தில் இனவாதத்தைப் பரப்பி வெற்றிபெற்றுள்ளனர். அரசும் இதுகுறித்து தெளிவை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை - என்றார். (5,61)

முஸ்லிம்களிடம்...

வெளியிடங்களிலிருந்து வந்தே குழுவொன்று திகனயில் தாக்குதல் நடத்தியுள்ளது. அம்பாறையில் வன்முறையைத் தூண்டிவிட்ட தரப்பே இதனுடனும் தொடர்புபட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் புலனாய்வுத்துறை விழிப்பாகவே இருந்திருக்கவேண்டும். சம்பவம் நடந்த பின்னர் அதுபற்றி பொலிஸ் உயர்மட்டத்துக்கு அறிவித்திருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு நடக்கவில்லை.

கண்டி இராஜ்ஜியத்தின்போது முஸ்லிம்களுக்கு வர்த்தகம் செய்வதற்கு சிங்கள மக்கள் அனுமதி வழங்கினர். அத்துடன், முஸ்லிம்கள் வேலைவாய்ப்புகளைக் கோருவதில்லை. தமது வர்த்தகத்தை வளர்த்துக் கொண்டு அமைதியாக வாழ்கின்றனர். பௌத்த கொள்கைக்கு முரணான வகையிலேயே குழுவொன்று செயற்பட்டுள்ளது. மேற்படி சம்பவங்கள் தொடர்பில் முஸ்லிம் மக்களிடம், சிங்கள மக்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும். நானும் தனிப்பட்ட ரீதியில் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (5,61)

வன்முறைகளை...

வொன்று அமைக்கப்படவேண்டும், என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியல் கட்டளையின் கீழ் சிறப்புக் கூற்றொன்றை விடுத்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் அம்பாறை, கண்டிஆகியபகுதிகளில்முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. மதத் தலங்கள் மீது தாக்குதல், சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றைச் சாதாரண சம்பவங்களாகக் கருதிவிடமுடியாது. திட்டமிட்ட அடிப்படையிலேயே அரங்கேற்றப்பட்டுள்ளன.

கண்டி, திகன தெல்தெனிய பகுதியில் சிங்கள இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார். அது தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் நான்கு முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். உயிரிழந்த இளைஞரின் இறுதிக்கிரியைகள் நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்றவேளை அதில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த குழுவொன்று அணியாக உருவெடுத்து, முஸ்லிம் கடைகள், வீடுகள் மீது தாக்குதல் நடத்தி சேதம் விளைவித்துள்ளது. பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாக முடங்கியுள்ளது.

கடந்த 26ஆம் திகதி அம்பாறையிலும் இனவாத நோக்கில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முஸ்லிம் உரிமையாளருக்குரிய ஹோட்டல் தாக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்களும் எரிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுவந்த நிலையில், மற்றுமொரு சம்பவம் பதிவாகியுள்ளது. கருத்தடை மாத்திரையை அடிப்படையாகக் கொண்டே அங்கு வன்முறை ஏற்பட்டது. ஆனால், அது சாத்தியமில்லையென மருத்துவரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சம்பவம்கூட வேண்டுமென்றே திட்டமிட்ட அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் இத்தகைய சம்பவங்கள் ஏற்படக்கூடும். அரசை உறுதியற்ற நிலைக்குத் தள்ளிவிட்டு, தமது குறுகிய அரசியல் நோக்கத்தை அடைவதே இத்தகைய குழுக்களின் நோக்கமாக இருக்கின்றது.

அம்பாறைச் சம்பவத்தின்போது பொலிஸார் செயற்பட்டவிதம் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. அவர்கள் பக்கச்சார்பாக செயற்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தம்புத்தேகம, கிந்தொட்ட பகுதியில் கம்பீரமாக செயற்பட்ட பொலிஸார், அம்பாறையில் அசமந்தமாகவே செயற்பட்டுள்ளனர். இனங்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படவேண்டும். அதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும் - என்றார். (5,61)

சட்டம்....

விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார். இனவாதச் சம்பவங்களுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவால் நேற்றுக் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மையின மக்களுக்கு எதிரான வன்முறைகள் மீண்டும் தலைதூக்கிவிட்டன என்ற அச்சம் உருவாகியுள்ளது. அம்பாறை, திகன ஆகிய பகுதிகளில் நடைபெற்ற சம்பவங்கள் இதை உறுதிப்படுத்தும் வகையிலுள்ளன. அம்பாறையில் உணவுகளில் மருந்து கலந்திருப்பதாகக் கூறி குழப்பம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இதை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக நிலையங்கள் மீதும், பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் பேருந்துகளில் வந்தனர் எனக் கூறப்படுகின்றது. மேற்படி சம்பவம் தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய தரப்பும் உரியவகையில் செயற்படவில்லையென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. சட்டம், ஒழுங்கு ஏன் நிலைநாட்டப்படவில்லை எனக் கேட்க விரும்புகின்றேன்.

அத்துடன், விபத்தொன்றை அடிப்படையாகக் கொண்டு கண்டியிலும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்களும், வீடுகளும் உடைக்கப்பட்டுள்ளன. மேற்படி சம்பவத்தின்போதும் சட்டம், ஒழுங்கு உரியவகையில் செயற்படவில்லை. இது தொடர்பில் ஆராயப்படவேண்டும். இனவாதச் செயற்பாடுகளையும், இனவாதம் தூண்டப்படுவதையும் ஒருபோதும் ஏற்கமுடியாது. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல், சட்டமும், நீதியும் ஒன்றும்செய்யாது என்றதகவல் குற்றச்செயல்களில் ஈடுபடும் தரப்புக்குச் சென்றுவிடும். எனவே, பாராபட்சமின்றி நடவடிக்கைகள் அவசியம்.

அதேவேளை, அனைவருக்கும் சமத்துவம் கிடைக்கவேண்டும். மக்கள் பாதுகாக்கப்படவேண்டும். ஆனால், சிலர் தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்றுநினைத்துக்கொண்டுஏனையவர்களை அடக்கியாளப் பார்க்கின்றனர்.

ஆகவே, மக்களைப் பாதுகாப்பதில் அரசகட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். அடிப்படைக் கோட்பாடுகள் பற்றி சிந்திக்கப்படவேண்டும் என்றார். (5,61)

நாடாளுமன்றில்...

அமைச்சரும் வழங்கிய உறுதிமொழியையடுத்து அவர்கள் கலைந்து சென்றனர்.

நாடாளுமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரம், 232 இன் கீழான சிறப்பு அறிவிப்பு ஆகியன முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

அம்பாறை, திகன இனவாத சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இனவாதச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க சபைஒத்திவைப்புவேளைபிரேரணையொன்றை கொண்டுவந்து உரையாற்றினார். அதை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வழிமொழிந்து பேசினார்.

தலைமை அமைச்சர், பொது எதிரணி உறுப்பினர் தினேஸ்குணவர்தன ஆகியோர் உரையாற்றி முடித்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உரையாற்றிக்கொண்டிருந்த வேளையில் சபாபீடத்தை நோக்கி வந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாபீடத்துக்கு முன்பாக அமர்ந்து, முஸ்லிம்களுக்கு எதிரான அடாவடிச் செயற்பாடுகளைக்கண்டித்தும், பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

உறுப்பினர்களே நாட்டில் சட்டம், ஒழுங்கை ஏற்படுத்தி, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. இன்று (நேற்று) காலையில் இரண்டு தடவைகள் நான் பொலிஸ்மா அதிபருடன் பேச்சு நடத்தினேன். இப்போது நாம் முரண்படக் கூடாது. இது சிந்தித்து செயற்படவேண்டிய தருணமாகும். நாடாளுமன்ற உறுப்பினர்களான நீங்களும் இவ்வாறு முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது. பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். ஒத்துழைப்புத் தாருங்கள். இல்லையேல் சபை ஒத்திவைக்கப்படும் என்று சபாநாயகர் கூறினார். அதன்பிறகு சம்பவங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை அமைச்சரும் உத்தரவாதமளித்தார்.

பின்னர் குழப்பம் விளைவித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலைந்து சென்றனர். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபூர் ரஹ்மானும், இம்ரான் மஹ்ரூப்பும் பங்கேற்றனர். சுதந்திரக் கட்சியிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் பங்கேற்க்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (5,61)

ரணிலுக்கு...

வைத்துள்ளது. அதேவேளை, கூட்டு எதிர்க்கட்சி நுகேகொடையில் இன்று நடத்தவிருந்த பேரணியை பிற்போடுவதற்கும் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர், நல்லாட்சி அரசுக்கு எதிரான போராட்டத்தின் முதல் பேரணியாகவே நுகேகொடையில் பேரணி நடத்துவதற்குக் கூட்டு எதிரணி தீர்மானித்திருந்தது.

எனினும் கடந்த திங்கட் கிழமை முதல் நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலையை அடிப்படையாகக்கொண்டே பேரணி பிற்போடப்பட்டுள்ளது. (5,61)

உள்ளூராட்சி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கலந்துரையாடுவதற்கே கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த. இருப்பினும், நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், இதற்கு ஆதரவு தருமாறு ஐக்கிய தேசியக் கட்சியினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்காத நிலையில் அது தொடர்பில் இப்போது ஆராயத் தேவையில்லை என்று நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவியேற்புத் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. நாளை மறுதினம் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அரசிதழில் வெளியிடப்படும். மறுநாள் 10ஆம் திகதி சனிக் கிழமையே உறுப்பினர்களின் பதவியேற்புநடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பில் இதனை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5)

தேசத்...

சிக்கிவிடாது சிந்தித்து செயற்படுமாறும் நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், சேதவிவரங்களைப் பட்டியலிட்டுக்காட்டிப் பேசிய ரணில் விக்கிரமசிங்க, நாசகாரச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

அம்பாறைச் சம்பவம் இடம்பெற்ற உடனேயே தேவையான சட்டநடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர். சட்டத்தை செயற்படுத்துவதில் சில குறைபாடுகள் காணப்பட்டதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பின்கீழ் சம்பவம் தொடர்பாக தனியான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கண்டிச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த 4ஆம் திகதி இரவு அடிப்படைவாதக் குழுவொன்று குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டுள்ளதுடன், தெல்தெனிய பொலிஸ் பிரிவில் வர்த்தக நிலையங்களுக்கு தீ வைத்து சேதம் ஏற்படுத்தியுள்ளனர். இந்த நிலமையைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன், நடமாடும் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர். இதன்படி பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

நேற்று (நேற்று முன்தினம்) மாலை தேசிய பாதுகாப்புச் சபை கூடியது. வழமைபோன்று மக்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடியவாறான சூழலை உருவாக்குவதற்கும், குழப்பங்களை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளுக்கு எதிராக உடனடியாக சட்டத்தை செயற்படுத்துமாறும், எவ்வேளையிலும் அமைதியின்மை நிலமை ஏற்பட்டால் நிலமையை கட்டுப்படுத்தும் வகையில் தயாராக இருக்குமாறு பாதுகாப்புப் பிரதானிகளுக்கும் மற்றும் பொலிஸாருக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இனவாத மற்றும் வன்முறைச் செயற்பாடுகளை அரசு என்ற ரீதியில் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பொறுப்புக்கூறவேண்டிய அரசு என்ற ரீதியில் இவ்வாறான சட்டவிரோத மற்றும் வன்முறைச் சம்பவங்களை அனுமதிக்க முடியாது.

அரசியல் அதிகார மோகத்தில் இருக்கும் சில பிரிவினர் மக்களின் வழமை நிலமையை சீர்குலைக்க பல்வேறு தந்திரங்களையும், பல்வேறு செயற்பாடுகளையும் திட்டமிட்டு வருகின்றனர் என்பது தெரியவந்துள்ளது. அவர்களின் ஒரே ஆயுதமாக இனவாதமே இருக்கின்றது. அதன் மூலம் அச்ச நிலைமையை ஏற்படுத்தி மக்களின் வழமை வாழ்வைச் சீர்குலைத்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதே அவர்களின் ஒரே நோக்கமாக இருக்கின்றது. இனங்களுக்கிடையே குரோதத்தை ஏற்படுத்தும் வகையில் மக்களைத் தவறான திசையில் கொண்டுசென்று பொய்யான தகவல்களைப் பரப்புகின்றனர். குறிப்பாக, சமூக வலைத்தளங்களின் ஊடாக திரிபுபடுத்தப்பட்ட தகவல்களைப் பரப்புகின்றனர். இது திட்டமிட்டுச் செய்யப்படுகின்றது என்பது வெளிப்படையாகியுள்ளது.

குழுவொன்று சமூக வலைத்தளங்களின் ஊடாக திட்டமிட்டு கடந்த மாதம் 9ஆம் திகதி முஸ்லிம் இனத்தால் சிங்கள இனங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக குறிப்பிடும் வகையில் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக பொய்யான புள்ளி விவரத் தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில முஸ்லிம் அமைப்புகளும் இதற்கு பதில்களை வழங்கியுள்ளன. நீண்டகாலமாக இந்தக் குழு இனவாதத்தைப் பரப்பியுள்ளது. இதன்மூலம் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இங்கு பெரும்பான்மையானவர்கள் சிங்கள பௌத்தர்களே. சிங்கள பௌத்தர்கள் என்ற ரீதியில் நாங்கள் அந்த உரிமைகளைப் பாதுகாப்போம். அதற்கு பாதிப்புகள் ஏற்படவில்லை. அச்சுறுத்தலும் கிடையாது. அவ்வாறாக நடக்கவும் நாங்கள் இடமளிக்க மாட்டோம். இலங்கையர் என்ற ரீதியில் வேறு இனங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்கின்றார்கள். சகல மதத்தவர்களும் இடையூறுகளின்றி தமது கலாசாரத்தைக் கடைப்பிடிப்பதற்கும், மதத்தைப் பின்பற்றுவதற்கும் உரிமைகள் இருக்கின்றன. நாம் இவற்றைப் பாதுகாப்போம். யில், முஸ்லிம் வணக்கஸ்தலங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக நாங்கள் கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இனவாதம் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் தேசத் துரோகிகளிடம் சிக்கிவிடாது பொறுமையாகச் சிந்தித்துச் செயற்படுமாறு நான் நாட்டின் சகல மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (5,61)

சுண்டைக்காயின் மருத்துவக் குணங்கள்

சுண்டைக்காய் உருவத்தில் சிறியதுதான். ஆனால் அதில் அடங்கியிருக்கும் நன்மைகளின் பட்டியல் பெரியது. இதன் இலேசான கசப்புச் சுவை சிலருக்குப் பிடிக்காது என்றபோதும், மருத்துவக் குணங்கள் சுண்டைக் காயின் சிறப்பாகின்றன.

சுண்டைக்காயில் புரதம், கல்சியம், இரும்புச்சத்துகள் நிறைந்துள்ளன. எனவே உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது.

சுண்டைக்காயை வாரம் இரு முறை சமைத்துச் சாப்பிட்டால் குருதி சுத்தமடையும். உடல் சோர்வு நீங்கும். சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் அடிக்கடி சுண்டைக்காயை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். வாரம் மூன்று முறை சுண்டைக் காய் சாப்பிட்டு வந்தால் வயிற்றுக் கிருமி, மூலக்கிருமி போன்றவை அகலும். வயிற்றுப்புண் ஆறும். வயிற்றின் உட்புறச் சுவர்கள் பலமடையும்.

சுண்டைக்காய் மட்டுமல்ல. அதன் இலைகள், வேர், கனி என முழுத் தாவரமும் மருத்துவ குணம் உடையது. இலைகள் குருதிக் கசிவை தடுக்கக்கூடியவை. கனிகள் கல்லீரல் மற்றும் கணையம் தொடர்பான நோய்களுக்கு மருந்தாகின்றன. முழுத்தாவரமும் சமிபாட்டுத் தன்மையை சிறப்பாக்கும்.

சுண்டைக்காயில் காட்டுச் சுண்டை, நாட்டுச் சுண்டை என இருவகை உண்டு. மலைக்காடுகளில் தானாக வளர்ந்து அதிகம் காணப்படுவது மலைச் சுண்டை. இவை பெரும்பாலும் வற்றல் செய்யப் பயன்படுகின்றன. வீட்டுத் தோட்டங்களிலும் கொல்லைப் புறங்களிலும் வளர்க்கப்படும் நாட்டுச் சுண்டைக் காயை பச்சையாகச் சமைத்து உண்ணலாம். அது மலச்சிக்கலைப் போக்கி சமிபாட்டுக் கோளாறுகளை நீக்கும்.

முற்றிய சுண்டைக்காயை நசுக்கி மோரில் போட்டு ஊறவைத்து வெயிலில் காயவைத்து எடுத்து பத்திரப்படுத்திக்கொண்டு தினமும் எண்ணெயில் வறுத்துச் சாப்பிடலாம் அல்லது வற்றல் குழம்பாக்கிச் சாப்பிடலாம். இது மார்புச்சளியைப் போக்கும். குடலில் உள்ள கசடுகளை நீக்கும். சுண்டை வற்றலை நெய்யில் வறுத்துப் பொடியாக்கி சோற்றுடன் சேர்த்து பிசைந்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோயால் உண்டாகும் கை, கால் நடுக்கம், மயக்கம், உடல்சோர்வு, வயிற்றுப் பொருமல் போன்றவை நீங்கும்.

சுண்டைக்காயை இரண்டாக நறுக்கி அதனுடன் பூண்டு, சின்ன வெங்காயம், மிளகு, சீரகம், கறிவேப் பிலை, கொத்தமல்லி இலை சேர்த்து நன்கு கொதிக்க வைத்து சூப் தயாரித்து அருந்தி வந்தால் ஈளை, இருமல், மூலச்சூடு, மூலக்கடுப்பு, மூலத்தில் குருதி வெளியேறுதல் போன்றவை நீங்கும். குருதியைச் சுத்தப்படுத்தி, சிறுநீரைப் பெருக்கும். உடல் சோர்வை நீக்கும். தலைச்சுற்றல், வாந்தி, மயக்கம் நீங்கும்.

கூந்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் கற்றாழை ஜெல்

அழகுக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களில் முக்கிய இடம் கற்றாழைக்கு உள்ளது. இயற்கையாகக் கிடைக்கும் காற்றாழை ஜெல்லை கொண்டு கூந்தலைப் பளபளப்பாக்கலாம். பட்டுப்போன்ற மென்மையான கூந்தலையும் பெறலாம். கற்றாழையானது கூந்தலுக்கு இயற்கைப் பொருளாகப் பயன்படுகின்றது. இரசாயனம் கலந்த செயற்கை ஷாம்புக்களை தவிர்த்து இயற்கையான முறைக்கு மாறினால் கூந்தலுக்கு மட்டுமின்றி உடலும் நலம் பெறும்.

தொடர்ந்து கற்றாழை ஜெல்லை கூந்தலுக்குப் பயன்படுத்தி வந்தால் கூந்தலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கின்றன. இதனால் கூந்தல் பாதுகாக்கப்படுகின்றது. கூந்தலுக்கு தேவையான விற்றமின்கள், மினரல்கள் கற்றாழையில் இருந்து கிடைப்பதால் கூந்தலின் வளர்ச்சி அதிகரிக்கின்றது. சரியான பிளச் அளவு கூந்தலுக்கு கிடைப்பதோடு, நீளமான கூந்தலையும் பெறலாம்.

காற்று மற்றும் வெயில் காரணமாக கூந்தல் வறட்சி அடைவதோடு, கூந்தலின் முனை வெடித்து விடுகின்றது. ஆனால் தொடர்ந்து கற்றாழை ஜெல்லைப் பயன்படுத்தி வரும்போது மாசுவில் இருந்து பாதுகாப்பதோடு முடி உடைவதையும் தடுக்கின்றது. கற்றாழை ஜெல் முடி உதிர்வை தடுத்து கூந்தலை வலுவுடையதாக்குகின்றது. பொடுகு, மாசு உள்ளிட்டவற்றில் இருந்து கூந்தல் பாதுகாக்கப்படுவதால் முடி உதிர்வு என்ற விஷயத்திற்கே இடமின்றிப் போகின்றது.

★ கற்றாழை ஜெல்லுடன் தேங்காய்ப் பால் சேர்த்து கலந்து தலைக்கு தடவி 10 நிமிடம் கழித்து குளித்தால் பொடுகுத் தொல்லை நீங்கும்.

★ கற்றாழை ஜெல்லுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து மசாஜ் செய்து சிறிது நேரம் கழித்து குளித்தால் கூந்தல் பொலிவோடு இருப்பதோடு, முடியின் வளர்ச்சியும் அதிகரிக்கும்.

★ கற்றாழை ஜெல்லை மட்டும் முடியில் தடவி 10 நிமிடம் கழித்து குளித்தால் மயிர்கால்கள் வலிமையடையும்.

★ கற்றாழையை தொடர்ந்து முகத்தில் தடவி மசாஜ் செய்து வந்தால் கரும்புள்ளிகள் நீங்கி முகம் பளபளக்கும்.

மரண அறிவித்தல்

மயில்வாகனம் நிர்நியநாதன்

(நாதன் ஜயா இ.போ.ச., கோண்டாவில்)



பொலநறுவையை (முத்துக்கல்) பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நிர்நியநாதன் (நாதன் ஜயா - இ.போ.ச., கோண்டாவில்) கடந்த (05.03.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - யோகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் புனிதரத்தினம் (கிளி) - சந்திரா (வவா) தம்பதிகளின் அன்பு மருமகனும் சுகுணாவின் (யாழ். போதனா வைத்திய சாலை) அன்புக் கணவரும் நிருஷிகன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி க.பொ.த. உ/த 2018), பிரகல்யா (யா/இந்து மகளிர் கல்லூரி, தரம் - 10) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசரட்ணம், காலஞ்சென்றவர்களான பத்மலதா, கார்த்திகேசு மற்றும் கருணராசா, கனகநாயகி, பாலசிங்கம், மேனன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகேந்திரராசா, கோமதி, சரவணமுத்து, கலாநிதி, சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகிர்தா (யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் சுவானி (பிரான்ஸ்), பார்த்தீபன் (இ.போ.ச. கோண்டாவில்), பாலபுத்திரன் (யாழ். பல்கலைக்கழகம்), யசிந்தன் (பிரான்ஸ்), மலர்மதி (HNB மானிப்பாய், கிளை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

வல்லாரைக் கஞ்சி

தேவையான பொருள்கள்

வல்லாரைக் கீரை - ஒரு கோப்பை
பச்சை அரிசி - ஒரு கோப்பை
தேங்காய்த் துருவல் - அரைக் கோப்பை
உள்ளி - 10 பல்
உப்பு - தேவையான அளவு

செய்முறை

வல்லாரைக் கீரையை நன்றாகச் சுத்தம் செய்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி கொள்ளவும்.

அடுப்பில் அரிசி , கீரை, உள்ளி, தேங்காய்த் துருவல், உப்பு, 3 கோப்பை தண்ணீர் சேர்த்து அவிக்கவும். மசித்துப் பருகலாம். இது சிறந்தவொரு காலை நேர உணவு.

தொடர்ச்சிகள்...

வெடிக்கும்...

கப்பட்டது.

2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதியின் பின்னர், 6 ஆண்டுகள் கழித்து நாட்டில் நேற்று அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டது. இது ஒரு வார காலத்துக்கு நடைமுறையில் இருக்கும் என்று அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்தார்.

அவசரகால நிலை பிறப்பிக்கப்படுவதன் ஊடாக, ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கும், அத்திய வசிய சேவைகளைத் தடையின்றி இயக்குவதற்கும், முப்படையினரையும் பாதுகாப்பில் ஈடுபடுத்தவும் முடியும்.

நாட்டின் ஒரு சில பகுதிகளில் நிலவும் விரும்பத்தகாத பாதுகாப்பு நிலமையைத் தவிர்ப்பதற்காக அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று அரச தலைவர் கூறினார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்று முற்பகல் சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்பட்டது. கண்டி திகனவில் இடம்பெற்ற இனவாதச் சம்பவம் தொடர்பில் அதில் ஆராயப்பட்டது.

கூட்டத்தில் கலந்துகொண்ட முஸ்லிம் அமைச்சர்கள் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கத் தவறியமை தொடர்பில் காரசாரமாகக் கருத்துக் கூறினர். கலவரம் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினர். இந்த விமர்சனங்களை அடுத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவசரகால நிலையைப் பிறப்பிக்க உத்தரவிட்டார். அமைச்சர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் அரச தலைவர் அவற்றை நிராகரித்தார்.

சமூக வலைத்தளங்கள், இணையத்தளங்கள் ஊடாக இனவாதக் கருத்துக்களைப் பரப்புவோரையும், அதற்குத் தூண்டுவோரையும் கைது செய்வது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அவசரகாலச் சட்டம்

1953 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முதன்முதலில் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. அப்போது நடத்தப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்தை மையப்படுத்தி 29 நாள்களுக்கு அவசர காலச் சட்டம் நடைமுறையில் இருந்தது.

2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12 ஆம் திகதி முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் படுகொலையை அடுத்து, அப்போதைய அரச தலைவர் சந்திரிகாவால் அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

அது போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழிந்த நிலையில் அதாவது 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதியே நீக்கப்பட்டது.

(ற-5,71)

யாழ்...

வரன் தெரிவித்தார்.

"எதிர்வரும் 23 ஆம் திகதி பட்டமளிப்பு இடபெறவிருந்தது. பரீட்சை பெறுபேறுகள் வெளியாகவில்லை. கல்வி சாரா ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பெறுபேறுகள் வெளியாகி அதனை ஒழுங்குபடுத்துவது சுலபமாக அமையாது. அதனால் பட்டமளிப்பு பிற்போடப்படுகிறது. அது எப்போது இடம்பெறும் என்று செனட் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்" என்று துணைவேந்தர் தெரிவித்தார்.

"பட்டமளிப்பு பிற்போடப்படுவதற்கும் எமது பணிப்புறக்கணிப்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை" என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

"பட்டமளிப்புக்கான ஏற்பாடுகளுக்கு நாம் தேவையான பணிகளை வழங்கி வருகிறோம். பரீட்சை பெறுபேறு வெளியிடாதமையே இதற்குக் காரணம். கலைப்பீட மற்றும் விஞ்ஞான பீட பெறுபேறுகள் வெளியாகவில்லை என்று எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பட்டமளிப்பு ஒத்திவைக்கப்படுவதற்கு நாம் காரணமல்ல" என்று ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. அவர்கள் மட்டுமன்றி கல்விசார் ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் சங்கங்களின் சம்மேளனம் கொழும்பில் இன்று பேச்சு நடத்தவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-4)

பௌத்த...

பனையில் அமைந்துள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிங்களம், முஸ்லிம் என்ற பேதம் இல்லாமல் அனைவரும் சமாதானமாக இருக்க வேண்டும். அதைவிடுத்து இவ்வாறான அசம்பாவிதங்களில் ஈடுபட்டால் விளைவு விபரீதமாக இருக்கும். இது சிங்கள பௌத்த நாடு. இந்த நாட்டில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை முஸ்லிம் மக்களுக்கு நாம் சொல்லித் தருகின்றோம்.

நாட்டில் அரசியலும் உறுதியற்ற நிலையில் காணப்படுகின்றது. முஸ்லிம் மக்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டும். தயவுசெய்து வன்முறைகளில் இறங்கவேண்டாம். இது பௌத்த நாடு. அடித்தால் திருப்பி அடிப்போம். கொலை செய்தால் நாமும் திருப்பிக் கொலை செய்வோம். அமைதியாக இருக்க வேண்டும் - என்றார்.

(ற-5)

இலங்கையின் முதலாவது 'பே ரீவி' சேவையாக 'எஸ்.எல்.ரி. பியோ ரீவி' அறிமுகம்

காண்பியல் கலையின் நவீன திருப்புமுனையாக அமைந்துள்ளது

பல்வேறு சிறப்பம்சங்களுடன் கூடிய இலங்கையின் முதலாவது 'பே ரீவி' (Pay TV) சேவையாக 'எஸ்.எல்.ரி பியோ ரீவி' (SLT PEO TV) அறிமுகம் பெற்றுள்ளது.

இதில் அனைவராலும் விரும்பப்படுகின்ற 'றீவைண்ட் ரீவி' (Rewind TV) என்ற சிறப்பம்சம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பார்வையாளர்கள் தாம் தவறவிட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மீண்டும் பார்வையிடுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

இந்த புதிய அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா ரெலிகொம் குழுமத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி அஜந்த செனவிரத்ன,

"எமது நாட்டின் முன்னணி 'இன்ரர் நெற்' (Intrenet Protocol) தொலைக்காட்சி சேவை வழங்குநராக 'எஸ்.எல்.ரி பியோ ரீவி' தொலைக்காட்சித்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு விரும்பிய நிகழ்ச்சியை விரும்பிய நேரத்தில் பார்க்க முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் விரும்பும் நிகழ்ச்சிகளை விரும்பும் நேரங்களில் கண்டு மகிழ்வதற்குரியவாய்ப்பினைதற்போது 'பியோ ரீவி' (PEO TV) தந்துள்ளது.

'பியோ ரீவி' முதன் முறையாக அறிமுகப்படுத்தியுள்ள மற்றொரு சிறப்பம்சமான 'வீடியோ ஒன் டிமாண்ட்' (Video on Demand) மூலம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளிவந்த கிளாசிக், நகைச்சுவை உள்ளிட்ட பல்வேறு வகைசார்ந்த அதிக திரைப்படங்களைப் பார்வையிட முடியும்.

அதேபோன்று, 'பிக்சர் இன் பிக்சர்' (Picture in picture) மூலம் இரு வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளை ஒரே நேரத்தில் ஒரே திசையில் காணும் அரிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. குறிப்பாக கிரிக்கெட் போட்டியின் இறுதிப் பந்துப் பரிமாற்றங்களை தவறவிடாது, விரும்பிய தொலைக்காட்சி நாடகத் தொடரையும் ஒரே சந்தர்ப்பத்திலே பார்வையிட முடியும்.

'மியூசிக் ஒன் டிமாண்ட்' (Music on Demand) என்பது, ஜனரஞ்சகமான பாடகர்களின் பாடல்களை கேட்பதற்குரிய ஒழுங்கமைப்பாக காணப்படுகிறது. இதனூடே பிடித்தமான இசையை கேட்டு மகிழ்வடைய முடியும்.

'சப்ஸ்கிறிப்சன் வீடியோ ஒன் டிமாண்ட்' (Subscription video on Demand) மூலம் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் திரைப்படங்களோடு சிறுவர்களின் இரசனை அறிந்து தயாரிக்கப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளையும் கண்டு மகிழலாம்.

பெற்றோர்களின் கட்டுப்பாடு எனப்படும் 'parental Control' மூலம் சிறுவர்களுக்கு உகந்த நிகழ்ச்சிகளை மட்டும் பார்வையிடுவதற்கான வசதியை ஏற்படுத்த முடியும். அத்தோடு கல்வி கற்கின்ற பருவத்தினர் மாத்திரமின்றி வயது வந்தோர்களுக்கும் தொலைக்காட்சியை பார்வையிடுவதன் மூலம் பயன்பெறக்கூடிய வகையில் பல்வேறு கல்வி சார் அலைவரிசைகளையும் 'எஸ்.எல்.ரி பியோ ரீவி' சேவை தன்வசம் கொண்டுள்ளது.

முழு உலகத்தையே உங்கள் கண் முன் கொண்டு வர வல்ல உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து ஒளிபரப்பப்படுகின்ற பன்னாட்டு அலைவரிசைகளையும், அதிக கவனத்தை ஈர்த்த உள்நாட்டு அலைவரிசைகளையும் 'எஸ்.எல்.ரி பியோ ரீவி' தொலைகாட்சி சேவை கொண்டுள்ளது." என்றார்.

மேலும், "பொது நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பு சேவைகளையும், நேயர்கள் இணைந்தவிதமான நேரடி பயிற்சி நிகழ்ச்சிகளையும் 'எஸ்.எல்.ரி பியோ ரீவி' வழங்கிவருகிறது. மூடிய அலைவரிசை (Closed channel) ஒன்றின் மூலம் பயிற்சித் தேவைகள் மற்றும் நோக்கங்களை அடிப்படையாககொண்டு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடமொன்றில் நேரடி பயிற்சி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை ஒளிபரப்புவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

'பியோ ரீவி' இன் வருகையோடு தொலை காட்சி பார்க்கும் மரபில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவும், நாளுக்கு நாள் அதனுடன் இணைகின்ற இலங்கையர்களுக்கு புதிய தொரு தொலைக்காட்சி அனுபவத்தை வழங்கவும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் முடிந்துள்ளது." - என வும் தெரிவித்துள்ளார். (ஒ)

சேவைத்துறை 4.4 வீத நேர் வளர்ச்சியை பதிவிட்டது

மொத்த உள்நாட்டு உற்பத்திக்குரிய உயர் பங்களிப்பு இது



பொருளாதாரக் குறி காட்டிகளில் முக்கியமாக குறித்துக்காட்டப்படும் மூன்று முதன்மைச் செயலாற்றுகைகளிலும், சேவை துறை 2017 ஆம் ஆண்டு இரண்டாவது காலாண்டு பகுதியில் மொத்த உள் நாட்டு உற்பத்திச் செயல் நிலை சார்ந்து உயர் பங்களிப்பை வழங்கியுள்ளது.

குறிப்பாக, சேவைத்துறை நடவடிக்கைகள் அனைத்தும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56.6 வீத பங்களிப்பை வழங்கியுள்ளன. 4.4 வீத நேர் வளர்ச்சி நிலையைப் பதிவிட்டுள்ளன.

சேவைத் துறையின் உப பிரிவுகளில் 'நிதிச் சேவை நடவடிக்கை', 'மனிதநல நடவடிக்கை', 'தொலைத் தொடர்பு சேவை' என்பன முறையே 16.4 வீதம், 13.2 வீதம், 12.4 வீத வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளன. அத்துடன் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்', 'பொருள்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து' துறைகள் உயர் பங்களிப்பினையும் முறையே 4.0 மற்றும் 1.6 சதவீத வளர்ச்சியையும் தந்துள்ளன. (ஒ)

அரச வருமானங்கள் – முன்மொழிவு



பங்குப் பரிவர்த்தனையில் முன்னேற்றம்

வெளிநாட்டு உள்வாங்கல் 15 பில்லியன் ரூபாவாகப் பதிவு

CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குச் சந்தையின் பரிவர்த்தனை நடவடிக்கைகளில் இவ்வாண்டு முன்னேற்றம் காணப்படுகிறது.

பங்குச்சந்தை நிலவரங்கள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே, இந்த தகவலை கொழும்பு பங்குச் சந்தையின் தலைமை நிறைவேற்றுப் பணிப்பாளர் ராஜீவ பண்டாரநாயக்க வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இது குறித்து தெரிவிக்கும் போது,

"பங்குச் சந்தைக்கான வெளிநாட்டு உள்வாங்கல் 15 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக பதிவாகியுள்ளது. புதிய ஆண்டு ஆரம்பமாகி 53 நாள்கள் கடந்துள்ள நிலையில், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் அதிக முதலீடுகளை மேற்கொண்டுள்ளனர். அதன் தொகை மதிப்பீடு 112 பில்லியன் ரூபாவாக காணப்படுகிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் போது இந்த தொகை மதிப்பீடு அதிகம்." - என்றார். (ஒ)

பொருளாதார வளர்ச்சி 4.4 வீதமாக அதிகரிப்பு

மத்திய வங்கியின் ஆண்டறிக்கைத் தகவல்கள் தெரிவிப்பு

கடந்த வருடம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4.4 வீத அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. இந்த தகவலை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

2016 ஆம் ஆண்டில் 4.8 வீத பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது. இது குறித்து கருத்துரைத்த இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி யூதிகா இந்திரத்ன,

"அரச துறையின் பெரும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டங்கள் போலவே தனியார் துறையினரின் முதலீடுகள் காரணமாக இந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை நாட்டில் நிலவிய வறட்சி நிலைமைகள் காரணமாக விவசாயத்துறையில் குறைந்தளவு வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது" - என்றார். இவைதவிர பல விடயங்கள் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக, கடந்த வருடத்தில் விவசாயத்துறை 4.2 வீத எதிர்மறை வளர்ச்சியைப் பதிவிட்டுள்ளது. நெல் உற்பத்தி 8.3 வீதமாகவும், தேயிலை உற்பத்தி 11 வீதமாகவும், இறப்பர் உற்பத்தி 10.7 வீதமாகவும், தெங்கு உற்பத்தி 1.5 வீதமாகவும் குறைவடைந்துள்ளன.

கடந்த வருடத்தில் நாட்டில் நிலவிய வறட்சி காரணமாக மின் உற்பத்தி மற்றும் மசகு எண்ணெய் பாவனை போன்றன 10.4 வீத மாக அதிகரித்துள்ளது. இந்த நிலமைகள் காரணமாக இலங்கை மின்சார சபையானது 13.2 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு பொற்றோலியக் கூட்டுதாபனம் 20 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டு 69.6 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது.

மேலும் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்கள் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நிய செலாவணியானது கடந்த வருடத்தில் 3.7 வீதத்தால் அதிகரித்துள்ளது. 2 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் நாட்டினுள் வருகை தந்துள்ளதுடன், அதன் மூலம் 18 வீத வருமானம் கிடைத்துள்ளது. (ஒ)

ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

நாகலிங்கம் சிங்கராசா

கடந்த 28.02.2016 ஞாயிற்றுக் கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது இனிய மலர் அப்பாவே - நீவீர்
விண்ணுலக மலராகி விட்டீரோ....
உங்கள் எழில் முகம் காணத்துடிக்கின்றது
ஈராண்டுகள் கழிந்துவிட்டன
உங்கள் நினைவுகள் இன்னும் அழியவில்லை
கண்ணீர் சிந்தி நிற்கின்றோம் எங்கள் இதயங்களில்

கைதடி வடக்கு, கைதடி. குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

வன்னியசிங்கம் சந்திரமோகன்

சப்பச்சிமாவடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட வன்னியசிங்கம் சந்திரமோகன் 03.03.2018 சனிக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவலோஜினியின் அன்புக் கணவரும், கோபிதா, சோபிதா, லக்சிதா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணராசா, லோகேஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்திரமதி (ஜோமனி), சந்திரபாபு (லண்டன்), சிறீமதி, சந்திரசேகர், ஸ்ரீதர், காந்திமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மேனுசன், திஸ்ஸான், அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெரியதூவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (N/6078)(11,17)

தகவல் குடும்பத்தினர்.

076 410 4159

கந்தையா கந்தவனம்

சோளங்கன், கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், கதிரமலை வீதி, சுன்னாகம் தெற்கைப் புகலிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தவனம் நேற்று (06.03.2018) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லநாயகம்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஞானாம்பிகையின் அன்புக்கணவரும், குகநந்தினியின் (லண்டன்) அன்புத் தகப்பனாரும், மங்களேஸ்வரனின் (லண்டன்) அன்பு மாமனாரும், காத்தீகன், கபிலன் ஆகியோரின் அன்புப்பேரனும், திருமதி பொன்னம்பலதாசன், வரதராணி, காலஞ்சென்ற கிருஷ்ணசோதிவேல் (கிட்டு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி குமாரகுலசிங்கம் வள்ளியம்மை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜனனி, ஆரணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் , ஏற்றுக்கொள்ளவும்.

கதிரமலை வீதி, சுன்னாகம் தெற்கு.

No.10, ABBOTS WOOD GARDENS, CLAY HALL IL FORD IG50BG, UK, 00442085501088

தகவல்: க.சிவகுருநாதன் (பரம்), துவாரகா பேக்கரி, நவிண்டில், கரணவாய் மத்தி, கரவெட்டி. 077 720 7606 (ANE/CS/4150)(11,17)

கண்டி...

டனர்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பாலமுனை, ஒலுவில், கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, காத்தான்குடி ஆகிய பிரதேசங்களிலேயே நேற்று இயல்பு ஒறுப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

பிரதான வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டன. போக்குவரத்தைத் தடை செய்யும் வகையில் மரக் குற்றிகளும் வீதிகளில் போடப்பட்டிருந்தன. போராட்டக்காரர்கள் பிரதான வீதிகளில் குழுக்களாக நின்றிருந்தனர். அந்தப் பகுதிகளில் பெரும் அச்சமான சூழல் நிலவியது.

மருதமுனையில், கல்முனை மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் திரண்ட இளைஞர்களைக் கலைப்பதற்காக சிறப்பு அதிரடிப் படையினரால் கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் போராட்டக்காரர்கள் கலையவில்லை.

இவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட முயற்சி பயனளிக்காமையால் சிறப்பு அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர். மோட்டார்சைக்கிள்களும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டன. பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நண்பகல் 12 மணியளவில் பொலிஸாரும் இராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (ற-5,30,31)

போராட்டத்தை...

நின்றிருந்த சில இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து கிழக்கு மாகாணத்தில் முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சில இடங்களில் வீதிகளில் முஸ்லிம்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அக்கரைப்பற்றில் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட குழுவினரை ஒளிப்படம் எடுத்தார் என்று இளைஞன் ஒருவன் தாக்கப்பட்டுள்ளார். தாக்கப்பட்ட இளைஞன் தமிழர் என்று கூறப்படுகின்றது.

(ற-5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலய விஞ்ஞான பாட ஆசிரியரும் பல்வேறு ஆலயங்களின் பிரதம குருவுமாகிய கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த சாமஸ்ரீ - சிவாகமஜோதி தேசமான்ய வேதாகம கிரியாஜோதி சிவஸ்ரீ தியாகராசா ஐயர் கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் (B.A,M.A, SLTS - I)

Best Wishes

அவர்கள் 14.02.2018 புதன்கிழமை அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு.ஜே.கஜநிதிபாலன் அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நலன்புரிக் கழகம்
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

(IN/6037)(13,17)

Jaffna Badminton Club

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை மாணவ மாணவிகளுக்கிடையிலான 17 - 20 வயதிற்குட்பட்டோருக்கான

பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி - 2018

மார்ச் மாதம் 10ஆம் 11ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க தவறியவர்கள் நேரில் சமுகமளித்து விண்ணப்பிக்கலாம் அல்லது தொலைபேசி ஊடாக or மின்னஞ்சல் மூலமாகவும் சமர்ப்பிக்க முடியும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் தொலைபேசி ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

அறுமுகி இலவசம்

077 377 9465 --Viber Whatsup
arivuchchelvan@gmail.com

தொடர்புகளுக்கு: S.அறிவுச் செல்வன் - 077 757 0092
S.காண்டீபன் - 077 789 4924 (cs.14522) (13.17)

நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

கட்டட புனரமைப்பிற்கான கூறுவிலை கோரல்

சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள (ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி) கடைத்தொகுதி திருத்தம் செய்வதற்காக கட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இவ் வேலையினை மேற்கொள்ள விரும்வோர் இதற்கான கூறுவிலைப் பத்திரத்தை ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்திற்கு ரூபா 1000/- ஐயும் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தியாக்கப்பட்ட கூறுவிலைப் பத்திரத்தை 20.03.2018 செவ்வாய்க்கிழமை இற்கு முன்னர் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்ட கேள்வி கோரல் பெட்டியிலிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(in..6076) (13.17)

கண்ணீர் அஞ்சலி

இலங்கை போக்குவரத்துச் சபை வடபிராந்திய தலைமைக் காரியாலயத்தில் களஞ்சிய உத்தியோகத்தராகக் கடமைபுரிந்த

மயில்வாகனம் நிர்ணியநாதன்

அவர்கள் 05.03.2018 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த செய்திகேட்டு ஆறாத்துயர் அடைவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதான பிராந்திய முகாமையாளர், பருதித் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள். இ.போ.ச. (வட), கோண்டாவில்.

பிறப்பு:- 15.01.1972
இறப்பு:- 05.03.2018

(CS/14532)(11,17)

வேலையாள்கள் தேவை

- உணவு பரிமாறுபவர்
- உணவு பொதிசெய்பவர்
- அப்பம் தயாரிக்கத் தெரிந்தவர்

077 465 2860 (CS/14523) (11,17)

பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து பணிபுரிய பணிப்பெண் தேவை.

தொடர்பு - 077 363 3233

வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் A9 வீதிக்கு அருகில் விவேகானந்த நகரில் (ரெலிகொம் கோபுர பின்பக்கம்) 5 அறையுடன் சகல வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனம் அல்லது குடும்பதினருக்கு வழங்கப்படும்.

076 860 4501/ 077 467 8776

(cs.14384) (13.17)

உங்கள் பொருள்கள் வாங்கப்படும்

ஜாதிக் கற்கள், உடைந்த ஜாதிக்கற்கள், இயற்கை கற்கள், மாணிக்கக்கற்கள், பழமை வாய்ந்த நாணயங்கள், கைக்கடிகாரம், சுவர்கடிகாரம் தகுந்த விலை மதிப்புடன் வாங்கும் ஒரே ஸ்தாபனம்.

SFN GEM T.P : 071 059 9971

பெயர்மாற்றம்

ஆனைக்குட்டி மதவடி லேன், தெல்லிப்பழையில் வசிக்கும் தமிழினி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை பாத்திமா ரஹ்மா என மாற்றம் செய்கிறேன் என இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் பாத்திமா ரஹ்மா எனக் கையொப்பமிடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

CS/14540)(11,17) - பாத்திமா ரஹ்மா -

வெதுப்பகத்துக்கு வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள வெதுப்பகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. (பாண், பணிஸ் உற்பத்தி) ஆண், பெண் இருபாலாரும். பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

077 314 7580, 077 763 9159

(CS/14518)(11,17)

மகப்பேறின்மை சிகிச்சையில் சர்வதேசப் புகழ் Dr. கீதா ஹரிப்ரியா அவர்களின்

இலவச மருத்துவ முகாம்

Medicare Expo
யாழ்ப்பாணம்
Mar 9, 10, 11

ஒன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு
✓ Less Waiting Period

events.medicalonline.in

பதிவு செய்யுங்கள் அல்லது உங்கள் பெயர் மற்றும் முகவரியை Whatsapp / Viber-ல் அனுப்பவும்

0091 95000 63000

கோடிபதி சவிதா
சீட்டிழுப்பு வாரம்: 263
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.03.06
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 86,778,676/-
D 33 34 45 54
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 188
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.03.06
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 55,696,765/-
வெற்றி இலக்கங்கள்
27 34 58 73 R
தொ.பே: 011 4052002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06.03.2018
வெற்றி வாரம் 2259
வர்ணம் நீலம்
இடபம்
வெற்றி இலக்கங்கள் 01 30 40 47
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 13, 210, 932/=
2018.03.07 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

செவ்வாய்க்கிழமை நியத ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் : 649 வர்ணம் : மஞ்சள்
திகதி : 2018.03.06
வெற்றி இலக்கங்கள் 01 35 32 48
ஆங்கில எழுத்து I
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 12,082,556/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அழைப்பு - 0114 824 824, 0112 333 778

வேலை வாய்ப்பு

குறுகிய காலப்பயிற்சியுடன் நிரந்தர தொழில் தேடும் உங்களுக்கு எமது Granton கம்பனியில் முகாமைத்துவம் சார்ந்த 20 பதவி வெற்றிடங்கள்.

- மேற்பார்வையாளர்
- நிர்வாக அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- செயல்திட்ட அதிகாரி
- விநியோகஸ்தர்

அனுபவம் அவசியமற்றது, தங்குமிடவசதி பயிற்சியின் போது 15 000 - 18 000 பின் 45000 +EPF, ETF

தொடர்பு - 077 802 1371, 076 699 4226

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2018

பிற்போடல் தொடர்பான அறிவித்தல்

11.03.2018 அன்று நடைபெறவிருந்த வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறியத் தரப்படும்.

06.03.2018

த. சிவரூபன்
செயலாளர்

நன்றி நவிலலும் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் செல்லப்பா வேலுப்பிள்ளை

உதிப்பு 28.04.1928 உதிர்வு 05.02.2018

கடந்த 05.02.2018 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லப்பா வேலுப்பிள்ளை அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், தொலைபேசியினூடாக துயரம் பகிர்ந்து கொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் பதாகைகள் மூலமும் தமது அனுதாபத்தை வெளிப்படுத்தி ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.03.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்.
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

(ACH/335)(11.17)

ES Printers
மக் பிரிண்ட் (MUG) 450/=
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

திருமதி வள்ளிக்கொடிமலர் கதிரவேலு

புதுவளவு, பொலிகண்டி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிக்கொடிமலர் கதிரவேலு கடந்த (05.03.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஏகாம்பரம் கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராஜா தங்கம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற ஏகாம்பரம் தெய்வானை தம்பதியரின் அன்புமருமகளும் நடராஜா - கெங்காதரம் அவர்களின் அன்புச்சகோதரியும் கமலாம்பிகை ,கவிதா, கவியரசன், கலைமாறன், கலைமகள், கவிதாரணி ஆகியோரின் அன்புத்தாயாரும் கிருஸ்ணபிள்ளை-புவனேந்திரன், அருமைத்துரை - கனகராஜா, கோமதி - கவியரசன், நிமாலி - கலைமாறன், மகேந்திரராசா - சுதன் ஆகியோரின் அன்புமாமியும் தர்மினி, கஜனன், கஜாளினி, ஆகாஷ், லக்ஷன், விதுசா, திவ்யா, நிமிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2018) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவளவு, பொலிகண்டி ,
வல்வெட்டித்துறை . 077 704 6178

(cs9373)(17.8)

தகவல்:
குடும்பத்தினர்.

இன்றைய மோதல்கள்

நியூட்டன் வி.க. கால்பந்தாட்டம்

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி லீக் மற்றும் பருத்தித்துறை லீக் அணிகள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்ட மொன்று குறித்த கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

நாவலர் வி.க. தாச்சித்தொடர்

சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வள்ளுவர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(மு-23)

சைக்கிள் ஓட்டத்தில் யாழ். வீரர் முதலிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கு மகாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான 105 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.பிரணவதாஸ் முதலாம் இடத்தைப் பிடித்தார்.

வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த அனுசன் இரண்டாம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த நிதர்சன் மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.

(மு-23)

சரஸ்வதி சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் 16 வயது பெண்கள் பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 8:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியிலும் அந்த அணி ஆதிக்கம் செலுத்தி முடிவில் 15:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. மூன்றாம் இடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி பெற்றது. (மு-422)

உடுப்பிட்டி மகளிர் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத்தில், பெண்கள் பிரிவில் கிண்ணம் வென்றது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி.

வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் றையே 21:17, 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி. மூன்றாமிடத்தைத் தனதாக்கியது தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.

(மு-108)

திருக்குமரன் சென்.லூட்ஸ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுதெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் உரும்பிராய் திருக்குமரன் அணி, சென். லூட்ஸ் அணி ஆகியன வெற்றிபெற்றன.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன. முதலாவது ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் திருக்குமரன் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்டநிமிடங்களின்நிறைவில்இரண்டு அணிகளும் தலா 3 கோல்களைப் பதிவு செய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (மு-23)

தெல்லிப்பழை யூனியன் வலைப்பந்தாட்டத்தில் மகுடம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் 18 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 15:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்திலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியின் ஆதிக்கம் தொடர முடிவில் யூனியன் கல்லூரி அணி 32:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுக் கிண்ணம் வென்றது.

(மு-422)

வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் கடற்கரை கரப்பந்தில் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம் கிண்ணம் வென்றது.

வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் வல்வை சிதம்பராக் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 21:15, 21:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றது தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம். மூன்றாமிடத்தைத் தனதாக்கியது கம்பர்மலை அ.த.க. பாடசாலை.

(மு-108)

வடக்கின் போர் நாளை ஆரம்பம்

எஸ்.தசோபன்

எஸ்.கௌதமன் (உபதலைவர்)

எஸ்.மதுசுதன்

ஏ.ஜெயதர்சன்

எஸ்.துசாந்தன்

எஸ்.சுயன்

கே.இயலரசன்

ஆர்.ராஜ்கிளிங்டன்

எஸ்.நிசான்

வி.விஜஸ்காந்

எஸ்.டிலிசியன்

எஸ்.நிதர்சன்

ரி.விதுசன்

ரி.ஹர்சனா

எஸ்.சாரங்கன்

எம்.சன்சயன்

ரி.கௌதம்

ஜெ.விதுசன்

யாழ்ப்பாணம், மார்ச் 7

'வடக்கின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரின் 112ஆவது ஆட்டம் நாளை வியாழன், நாளை மறுதினம் வெள்ளி, எதிர்வரும் சனி ஆகிய தினங்களில்நடைபெற்வுள்ளது.

இதுவரையில் நடைபெற்று முடிந்த 111 ஆட்டங்களில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி 36 ஆட்டங்களிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 27 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. 40 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்துள் ளன. ஓர் ஆட்டம் கைவிடப்பட்டது. 7 ஆட்டங்கள் தொடர்பான விவரங்கள் இல்லை. நடப்பு வருடத் தொடர் 112ஆவது ஆட்டமாக அமைந்துள் ளது.

யாழ்பாணம் மத்திய கல்லூரி அணி விவரம்- எஸ்.தசோபன் (தலைவர்), எஸ். கௌதமன் (உபதலைவர்), எஸ்.சாரங்கன், ரி.கௌதம், ரி.ஹர்சனா, கே.இயலரசன், எஸ்.நிசான், எஸ்.மதுசுதன், வி.விஜஸ்காந், எஸ்.துசாந்தன், எஸ்.டிலிசியன், ஆர்.ராஜ்கிளிங்டன், ஜெ.விதுசன், ரி.விதுசன், ஏ.ஜெயதர்சன், எஸ். சுயன், எஸ்.நிதர்சன், எம்.சன்சயன்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி விவரம் - வி.ஜதுசன் (தலைவர்), கே.கபில்ராஜ் (உபதலைவர்), ஜெ.சுபீட்சன், எஸ். ஜோயல் பிரவீன், வி.அபிலக்சன், பி.எல்சன் டினுசன், ரி.டினோசன், டி.செரோபன், எம்.அபினேஸ், எஸ். சனுசன், என்.சௌமியன், என். ரதுசன், ஏ.ஜதுசன், எம்.கேமதுசன், ஜெ.மரியதிலக்சன், என்.டிலுக்சன், எஸ்.பிரசாந், டி.ஜொனதன் பிரசன்னா, சி.பி.தனுஜன், எஸ்.ஜெஜீவன். (ம-23)

வி.ஜதுசன் (தலைவர்)

கே.கபில்ராஜ் (உபதலைவர்)

எம்.கேமதுசன்

எஸ்.ஜோயல் பிரவீன்

டி.ஜொனதன் பிரசன்னா

ஜெ.மரியதிலக்சன்

எஸ்.பிரசாந்

என்.ரதுசன்

எஸ்.சனுசன்

டி.செரோபன்

என்.சௌமியன்

ஜெ.சுபீட்சன்

பி.எல்சன் டினுசன்

சி.பி.தனுஜன்

ஏ.ஜதுசன்

எஸ்.ஜெஜீவன்

வி.அபிலக்சன்

எம்.அபினேஸ்

என்.டிலுக்சன்

ரி.டினோசன்

இந்தியாவை வீழ்த்தி இலங்கை அபாரம்

முத்தரப்பு ரி-20 தொடரில், நேற்று நடைபெற்ற இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இலங்கை அணி அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இல்ங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாகரோகித் மற்றும்தவான். ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார் ரோகித். ரெய்னா 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். தவான், பாண்டே இணைந்து ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தினர். பாண்டே அதிரடி என்று வெளிப்படுத்தவில்லை. ஆனால் தவான் மிகச் சிறப்பாக அடித்தாடிக் கொண்டிருந்தார். அவர் 30 பந்துகளில் அரைச் சதத்தை எட்டினார். 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பாண்டே. இதற்காக அவர் 35 பந்துகளை எடுத்துக் கொண்டார். அவரின் இன்னிங்ஸ் இந்தியாவுக்குப் பின்னடைவாகவே அமைந்தது. 90 ஓட்டங்களைக் குவித்து பவிலியன் திரும்பினார் தவான். முடிவில் 5 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

பந்துவீச்சில் சமீர 2 இலக்குகளையும், பொன்னான்டோ, மென்டிஸ், குணதிலக மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு வெற்றிக்கான அடித்தளத்தை வலுவாக அமைத்துக் கொடுத்தார் முன்னணி வீரர் குசல் பெரேரா. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான குணதிலக, மென்டிஸ் இருவரும் பதின்ம ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றிருந்தாலும் வெறும் 22 பந்துகளில் அரைச்சதம் கடந்து மிரட்டினார் குசல் ஜெனித் பெரேரா. அவர் 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் மத்திய வரிசை வீரர்களான சானக ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களையும், திசர பெரேரா ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும் பெற இலங்கை அணி 5 இலக்குகளால் அபார வெற்றிபெற்றது.

(ம)

அறிமுகம் - Rs 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353,
075 987 5800
(C/98237) (13,17)

உடனடி வேலைவாய்ப்பு
யாழ்.நகரில் பிரபல்யம் மிக்க புடைவையகத்துக்கு பணியாளர்கள் (ஆண்,பெண்) உடன் தேவை.
1). வயது எல்லை (18-30)
2). யாழ்.நகருக்கு அருகில் உள்ளவர்கள் வரவேற்கத்தக்கது
3). முன்அனுபவம் அத்தியாவசியமில்லை
4). திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
077 400 2955, 021 433 3738
(J/N 6081 X10)

நாதன் லையனுக்குத் தண்டம் விதிப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில், ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளர் நாதன் லையன், வில்லியர்ஸ் மீது பந்தை வீசியமைக்காக அவருக்குத் தண்டம் வீதிக்கப்பட்டுள்ளதுடன் பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் இருந்து எச்சரிக்கையும் கிடைத்துள்ளது.

இந்த டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் ஓட்டமெதையும் பெறாமல் வில்லியர்ஸ் ஆட்டமிழந்தார். எதிர்முனையில் இருந்த மார்க்ரம்

பந்தைத் தடுத்தபோது ஓட்டமொன்றை எடுப்பதற்காக வில்லியர்ஸ் களத்துக்கு வெளியே சென்றார். அப்பொழுது பந்து, பந்துவீச்சாளர் லையனின் கைகளுக்கு வந்தது. வில்லி யர்ஸ் மீண்டும் களத்துக்குள் திரும்புவதற்குள் லையன் அவரை ரண்அவுட் செய்தார். அதைத் தொடர்ந்து பந்தை வில்லியர்ஸ் மீது போட்டு விட்டுச் சென்றார். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறைகளின் அடிப்படையில் இது குற்றமாகும். மைதான நடுவரும் லையன் செய்தமை குற்றமே என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்தில் இருந்து 15 சதவீதத்தைத் தண்டமாக விதித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை. (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள் அனைவருமுடியும்!
முதல்நாள் வகுப்பு இலவசம் - 10.03.2018
1. காலை 08-10
2. காலை 10-12
3.மதியம் 01-03
4.மாலை 03-05
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும்! ஏதாவதொரு பிரிவில் இணையமுடியும்.
அனைவருக்குமான அறிமுக வகுப்பு காலை 08.00 மணிக்கு.
எமது நேரடியான உரையாடற் பயிற்சிநெறியில் இணைவதன் மூலம் ஆங்கிலத்தில் அபரிமிதமான அறிவுற்றவர்களும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.
SAAMSON
Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்நகர்.
021 320 3313 077 1570 486

வடமாகாண பரீட்சைகளுக்கான மாலைநேர வகுப்புகள்
• முகாமைத்துவ உதவியாளர்
• முன்பள்ளி ஆசிரியர்
• சாரதி தெரிவு
செவ்வாய், வியாழன் பி.ப. 3.30 → 6.00 மணிவரை
076 688 3394
D.M.I
(வலிமிர்ன் சந்தியிலிருந்து 50 m கிழக்காக)

FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2.
40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 10.03.18 சனி காலை 10மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி.
021 320 2973
ஆரம்பம் :12.03.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

இந்தியா இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி-20 தொடர் நேற்று ஆரம்பமானது. இந்தத் தொடருக்கான கிண்ண அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.